தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி – IX

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி – 5

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை – 600 008
2017 – திருவள்ளுவர் ஆண்டு 2048

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண். 48

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி –IX

(காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் – தொகுதி–5)

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண். 48

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி –IX

(காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் – தொகுதி–5)

பொதுப்பதிப்பாசிரியர்

முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப.,

ஆணையர் (மு.கூ.பொ.)

பதிப்பாசிரியர்

இரா. சிவானந்தம்

உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர் /

துணை இயக்குநர் (பொ.)

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

2017 - திருவள்ளுவர் ஆண்டு 2048

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**Tamilnattuk Kalvettukal - Vol. IX (Kanchipuram Mavattak-Kalvettukal - Vol.5)**
Editor	:	R. SIVANANTHAM
Copy Right	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	Epigraphy
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	286
Year	:	2017
Type Point	:	12
No. of Pages	:	300
No. of Copies	:	1000
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	Tharamani Womens Co-operative Society, 46, Peters Road, Royapettah, Chennai-600 014
Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valaagam, Thamizh Saalai, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 98.00

உள்ளடக்கம்

	பதிப்புரை		
	முன்னுரை	...	i-iv
1.	பெருநகர்	...	1
2.	ஆத்தூர்	...	39
3.	பாலூர்	...	71
4.	புலிப்பாக்கம்	...	91
5.	திருவானைக்கோயில்	...	113
6.	திருநீர்மலை	...	136
7.	பம்மல்	...	165
8.	திரிசூலம்	...	168
9.	ஆலந்தூர்	...	191
10.	நங்கநல்லூர்	...	192
11.	பள்ளிக்கரணை	...	193
12.	வேளச்சேரி	...	196
	Summary	...	223
	சொல்லடைவு	...	251
	நிழற்படங்கள்	...	262

இ.க.ஆ.அறிக்கை	-	இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை
தெ.க.தொ.	-	தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி
ஊ.க.எண்	-	ஊர்க் கல்வெட்டு எண்

முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப.,
ஆணையர் (மு.கூ.பொ.)

தொல்லியல் துறை,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.

பதிப்புரை

வரலாற்றினை எழுதுவதற்கு துணைபுரியும் சான்றுகளாகத் திகழ்பவை அகழாய்வுத் தொல்பொருட்கள், கல்வெட்டுகள், காசுகள், செப்பேடுகள், வரலாற்றுச் சின்னங்கள், இலக்கியங்கள் போன்றவையாகும். வரலாற்றினை அறிய உதவும் கல்வெட்டுகளைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையானது தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து, நூலாக வெளியிடும் பணியினைத் தனது முதன்மைப் பணிகளில் ஒன்றாகச் செய்து வருகிறது.

இத்துறைக் கல்வெட்டுப் பிரிவு வாயிலாக சென்ற ஆண்டு வரை 6827 கல்வெட்டுகள் 47 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 2016-17-ஆம் ஆண்டில் நான்கு கல்வெட்டு நூல்கள் வெளிவருகின்றன. இவற்றில் இந்நூல் கல்வெட்டு வரிசை எண் 48-ஆவது நூலாக வெளியிடப்படுகின்றது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பெருநகர், ஆத்தூர், பாலூர், புலிப்பாக்கம், திருவானைக்கோயில், திருநீர்மலை, பம்மல், திரிசூலம், ஆலந்தூர், நங்கநல்லூர், பள்ளிக்கரணை, வேளச்சேரி ஆகிய ஊரிலுள்ள 147 கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஏற்கனவே காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 639 கல்வெட்டுகள் நான்கு தொகுதிகளில் வெளிவந்துள்ளன. இந்நூல் 'தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-IX (காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -V)' என்னும் தலைப்பில் வெளிவருகின்றது.

இக்கல்வெட்டுகளைப் பதிப்பித்து நூலாக வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்ட இத்துறை உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர் திரு இரா. சிவானந்தம் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கல்வெட்டு வாசகங்களைத் தட்டச்சு (DTP) செய்த திருமதி தே. சத்தியவதி மற்றும் திருமதி ச. சரஸ்வதி அவர்களுக்கும், அட்டைப்படத்தினை வடிவமைத்த திரு த. பிரகாஷ் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

தமிழ்நாடு அரசு புதுமை முயற்சிகள் திட்டம் 2016-17 திட்டத்தின் கீழ் நான்கு கல்வெட்டு நூல்களை வெளியிட நிதியுதவி நல்கிய தமிழ்நாடு அரசிற்கு உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும், பெரும் முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முதன்மைச் சான்றாக உள்ள இக்கல்வெட்டு வாசகங்களை ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் பயன்படுத்தி இப்பகுதியின் வரலாற்றினை எழுதுவதற்கு உதவும் என்ற நோக்கில் இந்நூலினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆணையர்

முன்னுரை

பெருநகர்

விசையகண்டகோபால தேவர் தனது 21-ஆவது ஆட்சியாண்டில் இக்கோயில் இறைவனுக்கு வைகாசி விசாகத் திருநாளன்று திருவிழா எடுப்பதற்காக 47 கழஞ்சுப் பொன் அளித்து, அதனின் வாயிலாக வரும் வட்டியைக் கொண்டு நடத்திட வழிவகைச் செய்திருந்தார். இந்த வைகாசித் திருநாள் நீண்ட நாட்களாக நடைபெறாமல் இருந்துள்ளது. வீரப்பெருமாள் மகன் ஆளப்பிறந்தான் என்னும் இராசராச சம்புவராயன் என்பவன் இரு தூண்களில் இருந்த பழையக் கல்வெட்டு ஆவணங்களைச் சரிபார்த்த பின்னர் மீண்டும் இத்தானத்தினைப் புதுப்பித்து மீண்டும் வைகாசித் திருநாள் நடத்திட ஆணை வழங்கியுள்ளான்.

அழகிய பல்லவன் கோநந்திபன்மர் நலன் வேண்டி இவ்வூரைச் சார்ந்த வில்லி திருவன் திரிகத்த ராயன் என்பவன் இக்கோயில் (கருவறை) மற்றும் திருமண்டபம் ஆகியவற்றைக் கட்டியுள்ளதை கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. சேதிமண்டலத்தைச் சேர்ந்த வாணவதரையன் என்பவன் மன்னன் சுந்தர பாண்டியனின் நலனுக்காக பிரமீசுவரமுடைய மகாதேவர் கோயிலுக்குத் தேவதானமாக 2 வேலி நிலம் அளித்துள்ளான். பிரமீசுவரமுடைய நாயனார் கோயிலில் இவ்வூரைச் சார்ந்த காழி காக்கு நாயகன் என்பவன் எடுப்பித்துள்ள 'முதலியார் காக்கு நாயகர்' என்னும் இறைவனுக்கு காக்கு நாயகன் விசையன் செம்பியதரையன் என்பான் ஆறு சந்தி விளக்குகள் வைத்துள்ளான்.

பெருநகர் பிரமீசுரம் உடைய நாயனார் கோயில் திருமடைவளாகத்தில் குடியிருக்கும் கைக்கோளர்கள் அரசுக்குச் செலுத்தி வரும் தறிக்கடமை, வாசல்வரி ஆகிய வரிகளையும் மற்றும் பல தொழில் செய்பவர்களிடம் வசூலிக்கப்படும் வரிகளை சர்வமான்னியமாக இக்கோயிலில் நடைபெறும் பங்குனித் திருநாள், திருப்பரிவட்டம் திருப்பணி ஆகியவற்றிற்குப் பயன்படுத்திக் கொள்ள இக்கோயில் நிர்வாகிகளுக்கு சம்புவராயன் ஆணையிட்டுள்ளான். கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் பெருநகரில் வசித்த கைக்கோளர்கள் வரி செலுத்த இயலாமல் வெளியூர்களுக்கு சென்றுவிட்டனர். மீண்டும் அவர்களை ஊர்ச்சபையார் அதே ஊரில் குடியமர்த்தி செலுத்த வேண்டிய வரிகளைக் குறைத்து பெற்றுக்கொள்ளச் சம்மதித்துள்ளனர். புலியூர் திருமடைவிளாகத்தில் குடியிருக்கும் கைக்கோள முதலிகளுக்கு உரிய பங்கில் இரண்டு பங்கு நிலத்தினைப் பெருநகர் திருமடைவிளாகத்தில் இருக்கும் முப்பது வட்டத்து தானத்தார் (கோயில் நிர்வாகிகள்) பெற்றுக்கொண்டு தாங்களே இந்நிலத்தினை உழுது பயிர் செய்து கொண்டு, இந்நிலத்திற்கு செலுத்தும் வரிகளை கோயில் ஸ்ரீபண்டாரத்தில் அளிப்பதாக கைக்கோள முதலிகளுக்கு உடன்படிக்கை செய்து எழுதிக் கொடுத்துள்ளனர்.

உத்திரமேரூரின் புறஊர்களான ஆலத்தூர் மற்றும் அத்திப்பற்று ஊரவர் களுக்கிடையே தண்ணீர் பாய்ச்சுவதில் பிரச்சினை ஏற்பட்டது. மகாபிரதானி அரசர் திப்பரசர் முன்னிலையில் இரண்டு ஊரவர்களும் கூடினர். ஆலத்தூர் ஏரிக்கும் விசுவூர் ஏரிக்கும் பாதிப் பாதியாக பயன்படுத்திக் கொள்ளவும், திருத்தின நிலத்துக்கு நீர் பாய்ச்சிக் கொள்ளவும், மடைவெட்டித் திறக்க கூடாது என்றும் சம்மதம் ஏற்பட்டு ஒப்பந்தம் செய்துள்ளனர்.

ஆற்றூர்

ஆற்றூர் என்கிற இராசராசநல்லூர் ஊர் மக்களுக்கு மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் ஆணையிட்டுள்ளச் செய்தி. இவ்வூர் வழித்துணையப்பன் ஈசுவரமுடையார் கோயிலுக்கு இரண்டு வேலி நிலம் குடிநீங்கா தேவதானமாக இறையிலியாகக் கொடுத்துள்ளான்.

தனியூர் பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்) உடையார் திருச்சிற்றம்பலமுடையார் கோயில் தெற்குத் திருவாசலில், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் தனது பெயரால் ‘சொக்கச்சீயன் திருநிலை’ என்னும் பெயரில் ஏழுநிலைகளைக் கொண்ட கோபுரம் செய்ய வேண்டி ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து ஆற்றூர் நாட்டு ஆற்றூர் என்கிற ராஜராஜ நல்லூர் என்னும் ஊரிலிருந்த 364 வேலி நிலத்தின் தேவதானம், திருவிடையாட்டம், பிடாரிப்பட்டி, துக்கைப்பட்டி, பள்ளிச்சந்தம் உள்பட 44 வேலி நிலம்; மகாவிபூதிச் சதுர்வேதிமங்கலத்தின் 12 வேலி நிலம், பட்ட விருத்தி 1 வேலி நிலம், கடிகையார் நிலம் 3¼ ஆக மொத்தம் 62¼ வேலிநிலம் நீக்கி மீதமுள்ள 301¾ வேலி நிலத்தின் அனைத்து வரிகளையும் அழகியசீயன் அவனியாளப் பிறந்தான் காடவன் கோப்பெருஞ்சிங்கன் கொடையாக வழங்கியுள்ளான். இக்கல்வெட்டினை ஆற்றூரிலும், காஞ்சிபுரம் திருவேகம்பமுடைய நாயனார் (ஏகாம்பரநாதர்) கோயிலும் வெட்டிக் கொள்ள உத்திரவிட்டுள்ளான். இந்த ஆவணத்தில் கோப்பெருஞ்சிங்கன், குருகுலராஜன், வில்லவராஜன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனை வடமொழி சுலோகத்திலுள்ள கல்வெட்டொன்று பின்வருமாறு போற்றிப் புகழ்கிறது. இது மூவுலகத்து அரசர்களுடைய முடிகளிலுள்ள மாணிக்கங்களுக்கு அலங்காரம் செய்வது, பூமியிலுள்ள நரசிரேஷ்டரான (கோநரசிம்மன்) கட்கமல்லனுடைய சாசனம். மூன்று உலக அரசர்களுக்கும் தலைவன், எல்லா உலகத்திலுள்ள அரசர்களுடைய தலையிலுள்ள இரத்தினத்தில் தன்னுடைய திருவடித் தாமரைகளை வைத்தவன். சோழ இராச்சியத்தை ஸ்தாபித்தவன், பாண்டிய மண்டலாதிபதி, தொண்டை மண்டலமான தாமரைக்குச் சூரியன் போன்றவன்.

கர்நாடகமான சமுத்திரத்திற்கு அகத்தியர் போன்றவன். ஆந்திரமாகிய சமுத்திரத்திற்கு மந்தரமலை போன்றவன். சேதி மன்னனுடைய மலைக் கோட்டைகள், அகழிகள் இவற்றை அழித்து ஜயபேரிகை முழக்கியவன், எதிரி அரசர்களை அமுக்குவதில் இயந்திரப் பொறி போன்றவன், பகை மன்னருடைய பெருஞ்தேவியரின் கன்னம் காது கழுத்து இவற்றிலுள்ள மங்கல அணிகளாகிய நரிகளுக்குச் சுழல் காற்று போன்றவன்.

அபிமான துங்கன், சங்கிராமராமன், அசகாயவீரன், ஆகவதீரன், பரத மல்லன், பாரதமல்லன், கட்கமல்லன், பல்லவ குல பாரிசாதன், காடவகுல சூடாமணி, அவநி ஆளப்பிறந்தான் (அவனிபாஜன ஜாதன்), மங்கள நிலையன், வீர விநோதன், தியாகத்தைச் சுவைப்பவன் (தியாக விநோதன்), பகை மன்னன் கண்டகோபாலனின் பண்டாரத்தைக் கவர்ந்தவன் (கண்டபண்டாரலுண்டாகன்), பகை மன்னரின் அந்தப்புரத்தைச் சிறைப்பிடிப்பவன் (பரராஜ அந்தப்புர பந்திகாரன்), இலக்கியப் பெருங்கடல் (ஸாஹித்ய ரத்நாஹரன்), மல்லைக் காவலன் (மல்லாபுரி நாயகன்), காஞ்சிக் காவலன் (காஞ்சி புரிகாந்தன்), காவிரியை மணந்தவன் (காவேரி காமுகன்), பாற்கடலின் பிரிய நாயகன் (க்ஷீராபகா தக்ஷீண நாயகன்), பெண்ணைக் கேள்வன் (பெண்ணா நதி நாயகன்), கநக சபாபதி, சபா சர்வகார்ய ஸர்வகால நிர்வாகன், கோப்பெருஞ்சிங்கன் (கோபிருது சிம்ஹ மகாராஜ:) ஸகலபுவன சக்கிரவர்த்தி.

கட்கமல்லனான அரசன் தொண்டை மண்டலத்திலுள்ள அரசர்களால் பிரசித்தமான இராசராசநல்லூர் ஆகிய ஆத்தூர் நகரத்தையும், ஆளுடைய நாயனாருக்கு வெளிக்கோபுரம், மதில் இரு சுடராளவும் நிகழ்த்துவதற்குரிய பூசை முதலியவற்றையும் செய்வித்தனன். எல்லா அரசர்களிடமிருந்தும் திறைபெறும் ஜகதேக வீரனான கட்கமல்லன் பூமியை ஆண்ட காலத்தில் காஞ்சி கைப்பற்றப்பட்டது. அங்கம் கலங்கியது. மத்திய தேசம் முறியடிக்கப்பட்டது. அளகாபுரி மிகவும் நடுங்கியது.

பாலூர்

சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் அதிகாரி நந்தியராயன் என்பவன் ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டு பாலையூர் என்கிற இராசேந்திர சோழ நல்லூர் திருப்பதங்காடுடையார் கோயிலுக்குரிய திருநாமத்துக்காணி, தேவதானம் ஆகிய நிலங்கள் மீது வசூலிக்கப்படும் வரிகள், தறிஇறையாகப் பெறப்படும் காசு, செக்குக்குடியினர் கொடுக்கும் எண்ணெய் மற்றும் காசுகள் ஆகியவற்றினை, இக்கோயில் இறைவனின் பூசைக்கும், கோயில் திருப்பணிக்கும், முதலீடாக வைத்துக் கொள்ள மன்னனிடம் கேட்டுக் கொண்டார். மன்னனும் இருபத்தொன்பதாவது ஆண்டு முதல் திருப்பணிக்கும், பூசைக்கும் முதலீடாக வைத்துகொள்ள ஆணை வழங்கியுள்ளான்.

விசயநகர அரசர் விருப்பண்ண உடையார் ஆட்சிக்காலத்தில் திருப்பதங்காவுடைய நாயினார் கோயில் திருமடைவளாகத்தினைச் சுற்றியுள்ள சன்னதி தெருவில் 70 குழி அளவுள்ள மனை மற்றும் மனைப்படையும் கைக்கோளர், தேவரடியார்கள் ஆகியோருக்குக் கோயில் நிர்வாகத்தினர் விற்பனைச் செய்துக் கொடுத்துள்ளனர். விசயநகர அரசர் நரசிங்கய்ய தேவமகாராயர் பாலையூரில் வாழும் பள்ளிகளின் வீட்டு மனைகள் மீதான வரிகளை நீக்கம் செய்து ஆணையிட்டுள்ளார்.

புலிப்பாக்கம்

சோழமண்டலத்து மண்ணி நாட்டு சிற்றேயில் ஊரைச் சார்ந்த அம்பலங்கோயில் கொண்டான் திருநட்டப்பெருமாள் என்பவன் இக்கோயிலில் நடராசர் திருமேனியை எடுப்பித்துள்ளான். ஸ்ரீபொன்மலை உடையார் கோயில் திருநடைமாளிகையில் இவ்வூரைச் சார்ந்த குரவசேரி சோமிதேவ பட்டன் ஆட்கொண்டான் என்றழைக்கப்படும் தொண்டைமண்டலத்துப் பிள்ளை என்பவன் தனது பெயரால் ‘ஆட்கொண்டதேவர்’ (சிவலிங்கம்) உருவினை எடுப்பித்துள்ளான்.

புலிப்பாக்கம் என்கிற சோழசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்து பொன்மலை உடைய நாயனார் கோயிலைச் சார்ந்த பிள்ளையார் முதலிகளில் இளவரசனின் படைத் தலைவன் ஒருவன் தான் எடுப்பித்த துர்க்கை திருமேனிக்குச் சந்திவிளக்கு எரிக்க இக்கோயிலில் காணியுடைய திருஞானசம்பந்தன் என்னும் சிவபிராமணனிடம் மூன்று பசுக்கள் தானமளித்துள்ளான்.

திருவானைக்கோயில்

வல்ல நாட்டு நென்மலி ஊரிலுள்ள நஞ்சை புஞ்சை நிலங்கள் சிலவற்றினைச் சேர்த்து 'குலோத்துங்கசோழன் திருநீற்றுச்சோழ நல்லூர்' என்னும் பெயரிட்டு புதிய ஊர் ஒன்றினை உருவாக்கி திருவாலக்கோயில் மகாதேவர் கோயில் இறைவன் வழிபாட்டுக்காக மன்னன் குலோத்துங்கன் வழங்கிய நேரடி ஆணையாகும். இக்கோட்டத்து உழலூர் என்கிற இராசராசநல்லூர் ஊரின் புற ஊரான அரும்பாக்கம் ஊரின் நிலங்களிலிருந்து குறிப்பிட்ட நிலங்களைப் பிரித்து 'அநபாயநல்லூர்' என்று மன்னன் தனது பெயரினைச் சூட்டி கோயிலுக்குத் தானமளித்துள்ளான்.

காளாமுகன் கோமடத்தைச் சார்ந்த ஞானராசி பண்டிதன், சயிலராசி பண்டிதன் ஆகியோர் பற்றிய குறிப்புகள் இவ்வூர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. வெண்குன்றக் கோட்டத்து குவளை என்னும் ஊரைச் சார்ந்த பாரசிவன் தழுவக்குழைந்தான் ஆளுடையான் என்பவன் ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்துக் களத்தூர் ஊரில் உள்ள திருவாலக் கோயிலுடைய மகாதேவர் கோயிலில் வைத்த சந்தி விளக்கினை இக்கோயில் காளாமுகன் மடத்தைச் சார்ந்த ஞானராசி பண்டிதன், சயிலராசி பண்டிதன் ஆகிய இருவரும் இவ்விளக்கினை எரிப்பதாகப் பொறுப்பேற்றுள்ளனர்.

ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து களத்தூர் நாட்டுக் களத்தூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்கு வடக்கே உள்ள திருமலையில் இரவு நேரத்தில் விளக்கு எரிக்கவும், இதற்கு தினம் மூன்று நாழி எண்ணெய் குடுக்கவும், மலை மேல் எண்ணெய் இட்டு விளக்கெரிக்கின்ற நபருக்குக் தினக்கூலியாக குறுணி நெல்லும் வழங்கிடவும், கரிகாலசோழத் தமிழதரையன் என்பவன் 56 குழி நிலம் தானமாக வழங்கியுள்ளான்.

திருநீர்மலை

திருநீர்மலை சிங்கப்பெருமாள் இறைவனுக்கு பூவிருந்தவல்லி நகரத்தைச் சார்ந்த வாணியன் ஆயிரவண்ணன் ஆள்கொண்ட வில்லி எனும் திருக்கச்சிநம்பி தாசன் என்பவன் ஒரு சந்தி விளக்கு வைத்துள்ளான். பூவிருந்தமல்லி நகரத்தைச் சார்ந்த வாணியன் ஒருவன் திருநீர்மலை நாயனார் நீர்வண்ணனுக்கு சந்தி விளக்கு ஒன்று வைத்துள்ளான்.

ஜெயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து கோவூர் என்கிற உலகமாதேவிச் சதுர்வேதிமங்கலத்து ஊராருக்கு மன்னன் அளித்த ஆணை. இவ்வூரிலிருந்த 75 வேலி நிலத்தினைத் திருநீர்லை திருமலையில் உள்ள ஶ்ரீநரசிங்கத்து எம்பெருமானுக்கும், மலை அடிவாரத்தில் உள்ள கருவண்ணமேனி எம்பெருமானுக்கும் தேவையான வழிபாட்டுச் செலவினங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

அணைக்கரைச்சேரி என்கிற சோழகங்கதேவ நல்லூர் ஊரைச் சார்ந்த பஞ்சநதிவாண நீலகங்கரையன் நல்லநாயன் என்றழைக்கப்பட்ட சோழகங்கதேவன் என்பவன் பம்மல் நக்க நாயனார்க் கோயிலுக்கு 10 வேலி நிலத்தினைத் தேவதானமாக வழங்கியுள்ளான். மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் கண்டகோபாலன் என்பவன் திருநீர்மலை எம்பெருமானுக்கு ‘திருவாழிபரப்பினான் சந்தி’யின்போது அமுதுபடி, சாத்துபடி, திருநந்தாவிளக்கு ஆகியவற்றிற்காகப் பத்து வேலி நிலம் தானம் அளித்துள்ளான்.

பம்மல்

பம்மல் ஊரில் இருக்கும் வியாபாரி குன்றமுடையான் மெய்ஞ்ஞான வித்தகன் திருவெண்காடுடையான் என்பவன் பம்மனக்கர் நாயனார் வழிபாட்டிற்காகவும், திருப்பங்குனி, திருவைகாசி ஆகிய திருநாள்களில் வழிபாட்டுச் செலவினங் களுக்காகவும் கோயில் தானத்தாரிடம் தானம் வழங்கியுள்ளான்.

வீரராஜேந்திர சோழன் என்ற பட்டப் பெயர் கொண்ட மூன்றாம் குலோத்துங்கசோழ தேவனுடைய 35ஆவது ஆட்சியாண்டில் ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர்க்கோட்டத்து சுரத்தூர் நாட்டுத் தாம்புரமான குணசீல நல்லூரில் இருந்த நிலங்களில் சிலவற்றினை திருவிடையாட்டமாக பம்மல் அழகப்பெருமாள் கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரிசூலம்

சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கன் சுங்க வரியினை நீக்கினான் என்பது வரலாற்றுச் செய்தியாகும். தமிழகத்தில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுகளில் ‘சுங்கந் தவிர்த்த குலோத்துங்க சோழன்’ என்று குறிப்பிடும் கல்வெட்டு இது ஒன்றே ஆகும். சுங்கந்தவிர்த்த குலோத்துங்க சோழன் திருச்சுரம் உடைய நாயனார் கோயில் பதிபாத மூலப்பட்டுடை பஞ்சாசாரியர், தேவகன்மி, ஸ்ரீமாகேசுவரக் கண்காணி, கோயிற் கணக்கன் ஆகியோருக்கு அரசாணை ஒன்று அனுப்பியுள்ளான். திருச்சுரமுடைய நாயநார் கோயிலில் திருவைகாசித் திருநாளன்று திருவெழுச்சிப்படிக்காக முந்நலூர் ஊரிலுள்ள நீர்நிலம் முப்பது வேலியும், கொல்லை நிலம் பதினொரு வேலியும் சேர்த்து ‘திருநீற்றுச்சோழ நல்லூர்’ என்னும் பெயரிட்டு புதிய ஊரினை உருவாக்கி இறையிலி தேவதானமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆலந்தூர்

சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் காணப்படும் இக்கல்வெட்டு மாங்காடு ஊரைச் சார்ந்தது. மாங்காட்டில் இருந்த ‘திருவராந்தானம்’ எனப்பட்ட சமணப்பள்ளிக்கு திருவமுதுக்காக வேண்டி ஆர்க்காட்டுக் கூற்றத்து பரிசை ஊர்த் தலைவன் அம்நிலையார் என்பாரின் மகளும் சமணப்பள்ளியின் ஆசிரியர் அனந்த வீரக்குரவரின் மாணக்கியருமான அடிகள் என்பவள்அறுபது காடி நெல் அளித்துள்ளாள். மேலும், முப்பது பலம் எடை கொண்ட தட்டு ஒன்றும் வழங்கியுள்ளாள்.

பள்ளிக்கரணை

பள்ளியாகாரணையில் குடியிருக்கும் குடிகளுக்கும், காசாக வரி செலுத்தும் குடிகளுக்கும் மாதம் ஒன்றுக்கு ஒன்றே கால் வசூலித்து, பார்வதீஸ்வரமுடையார் கோயிலுக்கும் வீராத்தாள் கோயிலுக்கும் பாதிப்பாதியாக பிரித்துக் கொண்டு, இக்கோயில்களின் திருப்பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், திருபாணப் பெருமாள் கோயிலுக்கும் தானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளச்சேரி

புலியூர்க் கோட்டத்து வெளிச்சேரி சபையார் இவ்வூரிலுள்ள காளா பிடாரி இறைவிக்கு ஒரு நந்தா விளக்குக்கும் திருஅமுதுக்கும் வேண்டிப் பயிரிடப்படாத நிலம் (மஞ்சிக்கம்) ஒன்றினைக் கொடுத்துள்ளனர். சோழநாட்டு மழநாட்டுப் பிரிவில் உள்ள திருவேட்பூர் என்ற ஊரைச் சார்ந்த திருவேட்ப்பூர் உடையான் தேவடிகள் என்பான், புலியூர் கோட்டத்து வெளிச்சேரியில் உள்ள சப்தமாதர்கள் (ஏழு கன்னிகையர்) வழிபாட்டிற்கு வேண்டி, இவ்வூர் மகாசபையாரிடம் விலை கொடுத்து நிலம் ஒன்றினை வாங்கித் தானமளித்துள்ளான்.

புலியூர்க் கோட்டத்துக் கோட்டூர் நாட்டு வெளிச்சேரி புறஊர்ப் பகுதியான தரமணியில் உள்ள தரமணி மகாதேவர் கோயில் வழிபாட்டுச் செலவினங்களுக்கும், சந்தி விளக்குகள் வைப்பதற்காகவும், சோழநாட்டு கிழார் கூற்றத்து வைகாவூர்ச் சேரி ஊரைச் சார்ந்த அமுதன் பிச்சன் என்கிற செம்பியன் கீழானாட்டுக் கோன் என்பவன் தரமணியிலிருந்த நிலம் ஒன்றினை வாங்கிக் கோயிலுக்குத் தானமளித்துள்ளான்.

வெளிச்சேரியைச் சார்ந்த பத்தங்கி தேவநாத பட்டன் என்பானின் மனைவி நங்கைச் சானி என்பவள் சிங்கப்பெருமாள் என்னும் கோயிலைக் கட்டியுள்ளாள். இக்கோயிலைக் கட்டிய தச்சருக்கு மூலதனமாக இவள் வழங்கிய தோட்ட நிலத்தினை ஆராவமுது பட்டன் என்பவனிடம் விற்று இருபது பழங்காசுகள் பெற்றுத் தச்சுப்பணிக்காக வழங்கப்பட்டுள்ளது. திருவான்மியூர் ஊரிலிருந்த திருநாவுக்கரைசர் மடத்தினை நிர்வகிப்பதற்காக வெளச்சேரி எனும் ஜினசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலத்தில் இருந்து 10 வேலி நிலத்தினை சேதிராய தேவர் என்பவர் வழங்கியுள்ளார்.

இவ்வூர்களிலுள்ள கல்வெட்டுகள் அக்கால அரசியல் வரலாறு, பொருளாதாரம் மற்றும் சமுதாயச் செய்திகளை வெளிக்காட்டும் காலக் கண்ணாடியாக திகழ்கின்றன.

இரா. சிவானந்தம்
உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 639/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	25
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1241
ஊர்	:	பெருநகர்	இ.க.ஆ.அறிக்கை	:	48/1898
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.க.தொ. VI./331
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபம் மேற்குச் சுவர்.

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர் நாட்டுப் பெருநகர் ஆளுடையார் பிரமீசுரமுடைய நாயனார் கோயிலில், இம்மண்டலத்து எயிற் கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் ஊரைச் சார்ந்த பட்டியர் பேரயன் பெருங்கந் தேவப்பெருமாள் என்பவன் நான்கு சந்திவிளக்குகள் எரிக்க 4 கழஞ்சுப் பொன்னினை, இக்கோயில் சிவபிராமணர்களிடம் வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தெவர்க்கு யாண்டு உயரு வது ஜெயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர் நா-
2. ட்டுப் பெருநகர் ஆளுடையார் பிரமீஸ்வரமுடைய நாயனார்க்கு இம்மண்டலத்து எயிற் கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் பட்டியர் பேரயன் பெருங்கந் தே-
3. வப் பெருமாள் வைத்த சந்திவிளக்கு நாலுக்கு இவர் பக்கல் இக்கோயில் ஸிவப்ராம்மணரோம் உபையத்துக்கு கைக்கொண்(ட) செம்பொன் ச இப்பொன் நா-
4. ற் கழஞ்சுக்கும் இந்த சந்திவிளக்கு நாலும் சந்திராதித்தவரை(ர) விளக்கு எரிக்கக் கடவோமாக உபையம் கைக்கொண்டோம் இக்கோயில் ஸிவப்ராம்மணரோம் இது

5. பன்மாஹேஶ்வர ரசைக்ஷ :- இப்படிக்கு இவை ஷெவர்கன்மி திருவேகம்ப பட்டன் எழுத்து இப்படிக்கு இவை ஷெவர்கந்மி திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து இப்படிக்கு இ-

6. வை ஷெவர்கந்மி நாற்பத்தெண்ணாயிர பட்டன் எழுத்து இப்படிக்கு இவை ஷெவர்கந்மி திருச்சிற்றம்பல நாட்டுப் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை ஷெவர்கன்மி பெரியநம்பி பட்ட-

7. ன் பிரமீஶ்வரமுடையான் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை　　　　தொடர் எண் : 640/2017

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	25
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1241
ஊர்	: பெருநகர்	இ.க.ஆ. அறிக்கை	:	351/1923
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	: சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	: மூன்றாம் இராசராசன்			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு ஜகதி.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து காலியூர்க் கோட்டத்துப் பாசூர் நாட்டு உக்கல் எனும் விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து சபையினர் இவ்வூரின் வடபிடாகை கிராமமான மதகன்மேடு என்னும் ஊரும், இவ்வூரிலுள்ள நீர்நிலம், கொல்லைநிலம், நத்தம், மனை, மனைபடைப்பை உட்பட அனைத்தையும் எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் ஊரைச்சார்ந்த பட்டியர் பேரயன் பெருங்கந் தேவப்பெருமாள் என்பவனிடம் 180 கண்டகோபாலன் மாடை பொன்னினைப் பெற்றுக் கொண்டு விற்றுக்கொடுத்துள்ளனர். இந்த ஆவணத்தில் உக்கல் சபையைச் சார்ந்த 96 நபர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திருவாய்க்கேழ்வி முன்னாகத் திரிபுவனச் சக்கரவத்திகள் *ஸ்ரீ ராஜராஜ* தேவர்க்கு யாண்டு உ௰ரு வது கும்ப நாயற்று அமர பக்ஷத்து *தி*திதியையும் வியாழக்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து காலியூர்க் கோட்டத்து பாசூர் நாட்டு உக்கலான விக்கிரமாபரணச் சதுவே⁻திமங்கலத்து ம*ஹாஸ*ஹையோம் இம்மண்டலத்து எயிற் கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் பட்டியர் பேரயன் பெருங்கந் தேவப் பெருமாளுக்கு நாங்கள் எங்கள் கீழ் பிடாகையில் விற்றுக் குடுத்த மதகன் மேட்டுக்கு எங்கள் எழுத்துதிட்ட *வ்ர*மாணப்படியே கல்லுவெட்டுவித்துக் குடுத்ததாவது இத்தேவர்க்கு இவ்வாண்டைக் கும்ஹ நாயற்று அபரபக்ஷத்து *உ௱*மியும் வியாழக்கி-

2. ழமையும் பெற்ற மூலத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து காலியூர்க் கோட்டத்து பாகூர் நாட்டு உக்கலான விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து மஹாஸபையோம் ஊர்விலை ப்ரமாணக் கைஎழுத்து இம்மண்டலத்து எயிற் கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் பட்டியர் பேரயன் பெருங்கந் தேவப் பெருமாளுக்கு நாங்கள் விற்கின்ற ஊராவது எங்கள் ஊர் கீழ் பிடாகையில் மதகன் மேடென்று பேருடைய ஊர்க்கு கீழ்பாற்கெல்லை மாத்தூர் பூசந்தை உள்ளிட்டார் எங்கள் பக்கல் கொண்டுடைய வீராணக்குறுச்சி எல்லைக்கு மேற்கும் தென்பாற்கெல்லை செய்யாறு பாதி உட்பட வடக்கும் மேல்பாற்கெல்லை விழல்வாய் எல்லைக்கும் சிறுநல்லூர் எல்லைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை சோமன்வாய்

3. எல்லைக்கும் சன்னைவளாகம் எல்லைக்கும் கிழக்கும் தெற்கும் இந்நாற்பாற்கெல்லை ஊருநடுவுபட்ட நீர்நிலமுங் கொல்லை நிலமும் ஊர் நத்தமும் மனையும் மனைப்படப்பையும் மேல் நோக்கின மரமுங் கீழ்ணோக்கின கிணறும் நீரும் நீர்ப்பாய்ச்சலும் நீர்போக்கும் வழியும் வழிபோக்கும் குளமுங் கரையும் ஆற்றுக்காலிற் அஞ்சிட்டு இருகூறும் இக்கால் ஆடிப்பாயுமிடத்து எங்கள் ஊருக்குப் பாயும் தலைப்பேழை வாய்க்கால் ஆற்றில் திறந்த முகப்புக்கு கிழக்கு ஆடுகால் தோண்டி நீர்ப்பாய்ச்சக் கடவதாகவும் எங்கள் உள்ளூர் ஏரியில் நீர் பண்டாடு பழநடை பாயக்கடவதாகவும் இப்படியே எங்களுக்கு பாய பரிசே உரித்தாவதாகவும் நாங்கள் இவ்வூர் விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்பிலிசைந்த விலைப்பொருள் அந்றாடு நன்றான கண்டகோபால-

4. ன் புதுமாடை ௱௮௰ இம்மாடை நூற்று எண்பதும் ஆவணக்களியே கிழிகைச் செலவறக் காட்டேற்றிக் கைக்கொண்டு விற்றவிலை ப்ரமாணம் பண்ணிக்குடுத்தோம் மாகறல் பட்டியர் பேரயன் பெருங்கந் தேவப்பெருமாளுக்கு உக்கலான விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து மஹாஸபையோம் இப்படி இவர்க்கு விற்றுக்குடுத்த இவ்வூர்க்கு எப்பேற்பட்ட கலனும் இல்லை கலனுள் வாய்த்தோற்றில் நாங்களே தீர்ந்து குடுக்கக் கடவோமாகவும் இதுக்கு இதுவே விலையாவதாகவும் இவ்வூர் இவர்க்கு விற்றொற்றி ப்ரதிக்கிரய தாயதானங்களுக்கு உரித்தாவதாகவும் இப்படி சம்மதித்து விற்று விலைப்ரமாணம் பண்ணிக்குடுத்தோம் மாகறல் பட்டியர் பெரியந் பெருங்கந் தேவப்பெருமாளுக்கு உக்கலான விக்கிரமா-

5. பரணச்சதுவேதிமங்கலத்து மஹாஸபையோம் . . . தினேன் இவ்வூர் . . . போற்றிக்குடிந் உக்கலுடையான் சூர்யதேவனு . . உடையானேன் இவை

என் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை வெண்ணைக் கூத்த ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கோட்டுரர் . . போநவில்லி ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவ்வூர் வ‿யாகை வரதராச ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்றுக் கோலவராக ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகைத் திருவேங்கட ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து நந்தகோபால ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து வெண்ணைக் கூத்த ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து இரா-

6. ம பிரான் ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை கேசவ ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை இளைய கேசவ ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கிராஞ்சி இராமபிரான் ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கோட்டூர் கருமாணிக்க ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை நாராயண ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை யஜ்ஞ புருஷ ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று வெண்ணைக் கூத்த ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை வெண்ணைக்கூத்த ஹட்டன் மகந் திருவாய்க்குல ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை முடும்பை அருளாள ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை பாடகத்து வரதராஜ ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை பங்கனூர் ஸ்ரீ க்ருஷ்ண ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை சீராம ஹட்டன் மகன் சிங்கப்பிரான் ஹட்டன் எழுத்து

7. இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து சிங்கப்பிரான் ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து ஸ்ரீ க்ருஷ்ண ஹட்டன் எழுத்து உ இப்படிக்கு இவை செருப்பள்ளி வெண் . . . ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து சிங்கப்பிரான் ஹட்டன் மகன் அத்தாம ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து னந்தகோபால ஹட்டன் மகன் அத்தாம ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று எஜ்ஞ புருஷ ஹட்டன் மகன் ஸ்ரீ க்ருஷ்ண ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று எஜ்ஞ புருஷ ஹட்டன் மகன் மாதவ ஹட்டனுக்கும் மாந்தப்பி வரந்தருவானுக்கும் இவை மாதேவ ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை ஸ்ரீ [க்ரு]ஷ்ண ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று எஜ்ஞ புருஷ பட்டன் எழுத்து இப்படிக்கு இவை ஓதுமுக்கி[ல்] நாராயண பட்டன் எழுத்து இப்படிக்கு இவை

8. கோட்டூர் இராமபிரான் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை சீராம ஸட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று எஜு புருஷ பட்டன் மகன் சிங்கப்பிரான் [ப]ட்டன் எழுத்து இப்படிக்கு இவை முடும்பை நாராயண பட்டன் எழுத்து இப்படிக்கு இவை முடும்பை மதுரை அலங்கார . . . மகன் அதிமுக்தி நாராயணப் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை அனஷ நாராயணப் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை பாடகத்து மூத்த உலோக *ஸாக்ஷி* பட்டன் இப்படிக்கு இவை கோட்டூர் தேர்பொலிய நின்றான் பட்டனுக்கு இவன் மகன் மனபொன் வில்லி ஸட்டன் எழுத்து இப்படிக்கு இவை அரணைப்புறத்து *ஸ்ரீக்ருஷ்ண* பட்டன் மகன் கேசவன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று வீரநாராயண ஸட்டன் *ஸயிஜை*க்கு இவை பள்ளிகொண்டான் பட்டன் மகன் வெண்ணைக்கூத்த ஸட்-

9. டன் எழுத்து இப்படிக்கு இவை அரணைப்புறத்து வெண்ணைக் கூத்தன்பட்டன் *ஸயிஜை*க்கு இவை வ‿யாகை நாராயண ஸட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை நந்தகோபால பட்டன் எழுத்து இப்படிக்கு இவை முடும்பை கேசவ பட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று பள்ளிகொண்டாந் பட்டனுக்கும் எனக்கும் . . வெண்ணைக்கூத்த பட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று காலவராச ஸட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை எஜ*ாத* ஸட்டன் எழுத்து இப்படிக்கு இவை முடும்பை தாமோதர ஸட்டன் எழுத்து உ இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து *ஸ்ரீக்ருஷ்ண* ஸட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை மூத்த நாராயண ஸட்டன் எழுத்து இப்படிக்கு இவை மொட்டைப்புறத்து *ஸ்ரீக்ருஷ்ண* ஸட்டன் எழுத்து மகன் அத்தாம ஸட்டன்

10. எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை சீராம எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை வெண்ணைக்கூத்த பட்டன் மகன் அருளாள பட்டன் எழுத்து இப்படிக்கு இவை செருப்பார் நாராயண பட்டன் எழுத்து இப்படிக்கு இவை . . . இப்படிக்கு இவை கண்டேறுக் கேசவ பட்டன் எழுத்து இப்படிக்கு இவை பங்கநூர் எஜுமூர்த்தி பட்டநுக்கும் எனக்கும் இவந் தம்பி மாதவபட்டன் எழுத்து இப்படிக்கு இவை இயக்கி கேசவ பட்டன் எழுத்து இப்படிக்கு இவை வ‿யாகை மதிசூதநப் பட்டன் எழுத்து இப்படி இவை காரம்பிச்சேட்டு அருளாளப்பட்டன் எழுத்து இப்படிக்கு இவை பாடகத்து உலோக *ஸாக்ஷி* ஸட்டன் எழுத்து இப்படிக்கு

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 641/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	:	பெருநகர்	இ.க.ஆ. அறிக்கை	:	353/1923
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சம்புவராயன்	ஊ.க.எண்	:	3
அரசன்	:	இராசராச சம்புவராயன்			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறைத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : விசையகண்டகோபால தேவர் தனது 21-ஆவது ஆட்சியாண்டில் இக்கோயில் இறைவனுக்கு வைகாசி விசாகத் திருநாளன்று திருவிழா எடுப்பதற்காக 47 கழஞ்சுப் பொன் அளித்து, அதனின் வாயிலாக வரும் வட்டியைக் கொண்டு நடத்திட வழிவகைச் செய்திருந்தார். இந்த வைகாசி திருநாள் நீண்ட நாட்களாக நடைபெறாமல் இருந்துள்ளது. வீரப்பெருமாள் மகன் ஆளப்பிறந்தான் என்னும் இராசராச சம்புவராயன் என்பவன் இரு தூண்களில் இருந்த பழையக் கல்வெட்டு ஆவணங்களைச் சரிபார்த்த பின்னர் மீண்டும் இத்திருவிழாவினை நடத்திடுவதற்கு 47 கழஞ்சின் வழியாக வரும் ஏழு கழஞ்சு இரண்டு மஞ்சாடி நாலு மா வட்டியினைக் கொண்டு தானத்தார், நியாயத்தார், நியாய முதலிகள் நடத்திட வேண்டுமென இத்தானத்தினைப் புதுப்பித்து ஆணை வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. திருமுகத்துக்குப் படி சம்புவராயன் ஓலை பெருநகர் ஊரவர் கண்டு விடைத் தங்களூர் ஆளுடையார் பிரமீசுரமுடைய நாயனாற்கு ஸ்ரீகோராஜகேசரி பநூற் . . . . ப்புறமாக தாங்கள் கைக்கொண்-
2. ட பொன் பதினேழு கழஞ்சரையும் வைகாசி விசாகந் தீத்தமாக திருநாள் எழுந்தருளுவிக்க கைக்கொண்ட பொன் முப்பதின் கழஞ்சும் ஆகப்பொன் நாற்பத்[தேழு கழஞ்சு] * . . . . கல்வெட்டுப்படியாலுள்ள பொ-
3. லிசைப் பொன்னுக்கு நேராக உபைய நடத்தாதபடியாலே தாங்களுந் தானத்தாரும் நாயனார் விசையகண்ட கோபால தேவற்கு இருபத்தொன்றாவது வைகாசி மாதத் . . . . இக்கல்வெட்டின தூண் இரண்டும்

4. நாம் அத்தியேற அழைப்பித்துப் பாத்த இடத்து தூண் ஒன்றினால்ப் பொன் முப்பதின் கழஞ்சும் தூண் ஒன்றினால் பொன் பதினேழு கழஞ்சரையும் ஆகப் பொன் நாற்பத்தேழு [கழஞ்சரை]*க்கும் ஆண்டு ஒன்றுக்கு கழஞ்சுக்கு மூன்று மஞ்சாடியால்

5. வந்த பலிசைப் பொன் ஏழு கழஞ்சே யிரண்டு மஞ்சாடியே நாலுமாவுக்கும் நேராக உபைய நடத்தி எழுந்தருளுவியுங்கோளென்ன தாங்களெழுந்தருளு விடாதபடியாலே இப்பலிசைப் பொன் ஏழு கழஞ்சே இரண்டு (ம)ஞ்சாடியே நாலுமாவும் ஆண்டு தோறுந் தானத்தார்கு நியாய-

6. த்தார்[க்]கு நியாயமுதலிகளுக்குமே தாங்கள் குடுக்க இது கொண்டு தானத்தாருந் நியாயத்தாருந் நியாயமுதலிகளும் திருநாளுக்கு வேண்டுவன அழிந்து இத்திருநாள் எழுந்தருளுவிக்கக் கடவர்களாகவுஞ் சொன்னோம் இப்படிக்கு வீரபெருமாள் மகன் ஆளப்பிறந்தான் இரா[ச]ராச சம்புவராயனேன்

த.நா.அ. தொல்லியல் துறை			**தொடர் எண் : 642/2017**		
மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13- நூற்.
ஊர்	:	பெருநகர்	இ.க.ஆ. அறிக்கை	:	46/1898
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.க.தொ VI/329
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பிற்காலப் பல்லவர்	ஊ.க.எண்	:	4
அரசன்	:	இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறைத் தெற்கு குமுதம்.

குறிப்புரை : அழகிய பல்லவன் கோநந்திபன்மர் நலன் வேண்டி இவ்வூரைச் சார்ந்த வில்லி திருவன் திரிகத்த ராயன் என்பவன் இக்கோயில் (கருவறை) மற்றும் திருமண்டபம் ஆகியவற்றைக் கட்டியுள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* அழகிய பல்லவன் கோ னந்தி
2. பன்மர்க்கு நன்றாக இத்திருக்கற்றளியு-
3. ந் திருமண்டபமுஞ் செய்வித்தான்
4. இவ்வூர் வில்லி திருவன் திரிகத்த ராயன் உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 643/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 - நூற்.
ஊர்	:	பெருநகர்	இ.க.ஆ. அறிக்கை	:	354/1923
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	5
அரசன்	:	சுந்தரபாண்டியன்			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறைத் தெற்குச் சுவர்

குறிப்புரை : சேதி மண்டலத்தைச் சேர்ந்த வாணவதரையன் என்பவன் மன்னன் சுந்தர பாண்டியனின் நலனுக்காக பிரமீசுவரமுடைய மகாதேவர் கோயிலுக்குத் தேவதானமாக 2 வேலி நிலம் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ கோநேரின்-
2. மைகொண்ட சுந்தரபாண்டிய தேவற்கு நன்றாக
3. ஏழாவது சேதி மண்டலத்துச் சேகண்டி ஆண்டிஆன
4. (வாண)வாணவதரையனேன் பிரஹ்மீஸ்வரமுடைய மஹா-
5. தெவற்கு அமுதுபடிக்கு கிணறு மாவிலே தலைவரிசையிடே-
6. ல கண்டஞ்சேரி இரண்டு வேலி நிலம் பொன்வரி அனைத்தா-
7. யங்களும் உட்பட தேவதானமாக விட்டோம் இத்தன்மஞ் சந்திரா-
8. தித்தவரை செல்வதாகவு[ம்] விலக்குவார் கெங்கை இடைக் குமரி
9. இடை செ[ய்]தார் செ[ய்]த பாவங்கொள்வார்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 644/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	4 + 1
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 - நூற்.
ஊர்	:	பெருநகர்	இ.க.ஆ. அறிக்கை	:	47/1898
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.க.தொ.VI/330
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	6
அரசன்	:	கோஇரவிவன்மர் திரிபுவன ஸ்ரீவீரபாண்டிய தேவர்			
இடம்	:	பிரம்மபுரீஸ்வரர் கோயில் வடக்குச் சுவர்.			

குறிப்புரை : ஐயங்கொண்டசோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து பெருநகர் நாட்டுப் பிரிவு பெருநகர் ஊரில் உள்ள ஆளுடையார் பிரமீசுவரமுடைய நாயனார் கோயிலில் இவ்வூரைச் சார்ந்த காழி காக்கு நாயகன் என்பவன் எடுப்பித்துள்ள 'முதலியார் காக்கு நாயகர்' என்னும் இறைவனுக்கு காக்கு நாயகன் விசையன் செம்பியதரையன் என்பான் ஆறு சந்தி விளக்குகள் வைத்துள்ளான். முன்னாளில் சேத்துப்பட்டு என்னும் ஊரில் திருநந்தா விளக்குபட்டியாக இருந்த நிலத்தினை அடைமானம் வைத்து வாங்கின 40 பணம் மற்றும் இதனின் வட்டியால் வந்த பணம் உட்பட 60 பணத்தினைக் கொண்டு இந்த ஆறு விளக்குகள் எரிப்பதாக இக்கோயில் சிவப்பிராமணர்கள் உடன்பட்டுள்ளனர்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* கோஇரவிவன்மர்(தி)ரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு *ச* வதுக்கு
2. எதிராம் ஆண்டு ஜயங்கொண்ட சோழமண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து பெருநகர்
3. நாட்டு பெருநகர் ஆளுடையார் *ஸ்ரீ ப்ரஹ்மீஸ்வர*முடைய நாயனார் கோயிலில் இவ்வூர் இருப்பை பாக்கிழான்
4. காழி காக்கு நாயகன் ஏறி அருளப்பண்ணின முதலியார் காக்கு நாயகர்க்கு காக்கு நாயகன் விசையன்

5. செம்பியதரையன் வைத்த சந்தி விளக்கு ஆறு இவ்விளக்கு ஆறுக்கும் இக்கோயில் *ஶிவப்ராஹ்மண*ரோம்

6. முன்னாள் சேற்றுப்பட்டில் திரிநுந்தா விளக்குப்பட்டியாக நாற்பத்தெண்ணாயிரவன் ஒற்றியாக வைத்து வா-

7. ங்கின பணம் நாற்பதுக்குப் பலிசையேற்றிப் பணம் அறுபதும் உபயம் ஆகக் கைக்கொண்டு இவ்விளக்கு ஆறும்

8. *சந்த்ராதித்*தவரை இடக்கடவோம் இக்கோயில் *ஶிவப்ராஹ்மண*ரோம் இது பன்மா*ஹேஶ்வர ரக்ஷை* உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 645/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	:	பெருநகர்	இ.க.ஆ. அறிக்கை	:	352/1923
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சம்புவராயர்	ஊ.க.எண்	:	7
அரசன்	:	-			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறைத் தெற்கு ஜகதி.

குறிப்புரை : பெருநகர் பிரமீசுரம் உடைய நாயனார் கோயில் திருமடைவளாகத்தில் குடியிருக்கும் கைக்கோளர்கள் அரசுக்கு செலுத்தி வரும் தறிக்கடமை, வாசல்வரி ஆகிய வரிகளையும் மற்றும் பல தொழில் செய்பவர்களிடம் வசூலிக்கப்படும் வரிகளையும் சர்வமான்னியமாக அளித்து, இக்கோயிலில் நடைபெறும் பங்குனித் திருநாள், திருப்பரிவட்டம் திருப்பணி ஆகியவற்றிற்குப் பயன்படுத்திக் கொள்ள இக்கோயில் நிர்வாகிகளுக்கு சம்புவராயன் ஆணையிட்டுள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* சம்புவராயன் ஓலை சளுக்கிப் பற்றுப் பெருநகர் உடையார்
2. பிரமீசுரம் உடைய நாயனார் கோயில் தானத்தார் கண்டு தங்கள் நாயனார்
3. திருமடைவிளாகம் ஐஞ்சாவது வைகாசி மாத முதல் கைக்கோளர் பேரால் தறி-
4. க்கடமை வாசல்வரி மற்றும் புறக்கலனை குடிமக்கள்பேறு கடமை வாசல்வரி
5. இப்பற்றில் கொள்ளும் பல உபாதிகளும் உட்பட இன்னாயநார்க்குப் பங்குனித் திருநாளுக்கு-
6. ம் திருப்பரிவட்டத்துக்கும் திருப்பணிக்கும் ஸவ-மான்னியமாகச் சந்திராதித்தவரை-
7. யும் செல்லக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளும்படி சொன்னோம்
8. இப்படி செய்வதே உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 646/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம். 1304
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1382
ஊர்	:	பெருநகர்	இ.க.ஆ. அறிக்கை	:	350/1923
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊ.க.எண்	:	8
அரசன்	:	ஸ்ரீவீர அரியண உடையார் (இரண்டாம் அரிகரர்)			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு மற்றும் மேற்கு முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்து காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கல் எனும் விக்ரமாபரணச்சதுர்வேதி மங்கலத்துச் சபையார் இவ்வூரின் வடபிடாகை (புறஊர்) ஊர்களான ஏழாயிரச்சேரி, திருப்புலித்தாங்கல் ஆகிய இரண்டு ஊர்களின் மூன்றில் இரண்டு பங்கினை சகம் 1303-ஆம் ஆண்டில் (கி.பி. 1381) முட்டைப்புறம் ஊரைச் சார்ந்த சீராம பட்டன் என்பவனுக்கு 400 பணம் பெற்றுக் கொண்டு விற்பனை செய்து கொடுத்துள்ளனர். முட்டைப்புறத்தைச் சார்ந்த சீராம பட்டன் தான் வாங்கிய மேற்படி பங்கினை சகம் 1304 (கி.பி. 1382)ஆம் ஆண்டில் ஊற்றுக்காட்டுக் கோட்டத்துத் தமனூர் நாட்டு வேலூர் என்கிற இராஜேந்திரசோழ நல்லூர் ஊரினனான சாத்தன் சேனாபதிப்பிள்ளை நாகதேவன் பல்லவராயனிடம் 500 பணம் பெற்றுக் கொண்டு விற்றுக் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலீஸ்வரந்* அரி[ய]*ராய விபாடன் பாஷைக்குத் தப்புமராயர் கண்டன் மூவராயர் கண்டன் பூர்வ தக்ஷிண பச்சிம ஸமுத்திராதிபதி ஸ்ரீவீரஅரியண உடையார் *ப்ருதி*விராச்சியம் பண்ணியருளா நின்ற காலத்தில் செல்லா நின்ற சகாத்தம் ஆயிரத்து முன்னூற்றில் நாலின் மேல் உத்தமான *துந்துபி ஸம்வத்ஸர*த்து கும்ப நாயற்று அமரபக்ஷத்து சனிக்கிழமையும் *த்ரயோதஸி*யும் பெற்ற உத்திராடத்து நாள் ஜயங்கொண்ட [சோழ மண்]டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து தமனூர் நாட்டு வேலூரான இராசேந்திரசோழ நல்லூர்க் குமரன் சாத்தன்

2. சேனாபதிப் பிள்ளை நாகதேவன் பல்லவராயனுக்கு காலியூர்க் கோட்டத்தில் பாகூர் நாட்டு உக்கலான விக்ரமாபரணச் சதுவேதி மங்கலத்து ஸபையாரில் முட்டைபுறத்துச் சீராம பட்டனேன் எங்கள் வடபிடாகை ஏழாயிரச்சேரியும் திருப்புலித்தாங்கலும் உக்கலில் சபையார் பக்கலிலே மூன்றில் இரண்டு நான் பிறமாணம் பண்ணிக் கொண்டு இப்பிறமாணம்படி மூன்றில் இரண்டு விற்றுத் திரிவிட்டுக் குடுக்கையில் இந்தப்படி பிறமாணத்துக்கும் இந்தத் திரிவிட்டுக்கும் கல்லுவெட்டிக் குடுத்த பரிசாவது இந்த அரியண உடையாற்கு செல்லா நின்ற சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று மூன்றின் மேல் துன்மதி வருஷத்து கன்னி

3. நாயற்று ஸம்வத்ஸரத்து த்விதிதிகையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற ரேவதி நாள் ஜெயங்கொண்டசோழ மண்டலத்துக் காலியூர் கோட்டத்து பாகூர் நாட்டு உக்கலான விக்ரமாபரணச் சதுறுவேதி மங்கலத்து ஸபையோம் காணிவிலை ப்ரமாணக் கச்சாத்து இவ்வூர் முட்டைப்புறத்து சீராம பட்டனுக்கு நாங்கள் விற்கின்ற ஊர்கள் ஆவது எங்கள் வடபிடாகையில் ஏழாயிரச்சேரி திருப்புலித்தாங்கல் என்று பெயருடைய ஊர்களுக்குக் கீழ்பாற்க்கெல்லை சிற்றிலைப்பாக்கம் அச்சாணிபாலை எல்[லை]க்கு மேற்கும் தென்பாற்கெல்லை புன்னை எல்[லை]க்கும் அகரம் பாகூர் எல்லைக்கும் மேல்பாற்கெல்லை பாகூர் எல்லைக்கும்

4. இட்டிகைப்பட்டு எல்லைக்கும் சோதியம்பாக்கத்து எல்லைக்கும் பாதிரித்தாங்கல் எல்லைக்கும் கிழக்கும் வடபாற்க்கெல்லை எங்கள் செப்பேட்டுப்படியே இதற்க்கும் இந்த நான்கு எல்லைக்கும் உட்பட்ட ஊர் இரண்டும் நத்தமும் நத்தக்குறையும் நஞ்சை நிலமும் புஞ்சை நிலமும் ஏரியும் ஏரிவாய் புறவடையும் மற்றும் உள்ள சகல ஸமுதாயங்களும் உடும்பு ஓடி ஆமை நகந்த இடம் உட்பட மூன்றில் ஒன்று நீக்கி மூன்றில் இரண்டும் இவனுக்கு விற்றுக் குடுத்துக் கொள்வதா(ன)[க]* எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாடு வழங்கும் வாசிபடாத வராகன் குளிகை ௲ சா இப்பணம் நானூறும் விலை பொருளறக் கொண்டு

5. விற்று விலைப்பிராமணம் பண்ணிக்குடுத்தோம் முட்டைப்புறத்து சீராம பட்டனுக்கு உக்கல் ஆன விக்ரமாபரணச் சதுறுவேதிமங்கலத்து ஸபையோம் இப்படி விற்றுக் குடுத்த இந்த ஊர்களில் பங்கு மூன்றில் இரண்டுக்கும் எப்பேற்ப்பட்ட கலனும் இல்லை கலனுள் வாய்த்தோற்றுப்படில் நாங்களே தீர்த்து குடுக்கக் கடவோம் ஆகவும் இப்படி விற்றுக் குடுத்த இந்த

ஊர் உ ல் பங்கு ந ல் உ க்கும் இதுவே வூஊணம் ஆவது ஆகவும் இதுக்கு இதுவல்லது வேறுபொருள் மாவறுதிப் பொருட்ச்செலஓலை காட்டு என்னப் பெறதாகவும் இப்படி விற்றுக் குடுத்த இந்த ஊர் உ ல் பங்கு ந ல் உ க்கும் நீரும் நீர்போக்கும் வழியும்

6. வழிபோக்கும் மரமும் கிணறும் நாங்கள் உடைய பரிசே உரித்தாவது ஆகவும் இப்படி விற்றுக் குடுத்த இவ்வூர்களில் பங்கு மூன்றில் இரண்டும் இவனுக்கு விற்று ஒற்றி வூதிகூய தாயதானங்களுக்கும் உரித்தாவது ஆகவும் இப்படி விற்றுக் குடுத்த இந்த வூஊணத்துக்கு ஓலைகுற்றம் எழுத்துப்பிழை வாசகப்பழுது வாட்டேறு என்று சொல்லப் பெறாது ஆகவும் இருக்கால் ஆவது முக்கால் ஆவது இப்பணம் நானூற்றுக்கும் இந்த ஏழாயிரச்சேரி திருப்புலித்தாங்கல் ஊர் இரண்டினால் பங்கு மூன்றில் இரண்டும் விலைக்குற விற்றுப் பொருளறக் கைக்கொண்டு விற்றுவிலை வூஊணம் பண்ணிக் குடுத்தோம் முட்டைப்புறத்து சீராமபட்டனுக்கு

7. உக்கலான விக்கிரமாபரண சதுறுவேதிமங்கலத்து மஹாஸஹைஓம் பணிய இந்தப்பிறமாணம் எழுதினமைக்கு உக்கல் உடையான் கம்பாண்டை ஆனை மேலழகியான் எழுத்து இப்படிக்கு இவை ஓதுமுக்கில் நாராயண ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்று யஜுநாராயண பட்டன் எழுத்து இப்படிக்கு இவை முட்டைப்புறத்து மாதவபட்டன் எழுத்து இப்படிக்கு இவை முடும்பைத் திருவரங்க நாரயண ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வூயாகை வீரநாராயண ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை முட்டைப்புறத்து இளையபிரான் ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வரதராச ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை வூயாகை ஆண்டபிரான்

8. ஹட்டன் எழுத்து இப்படி இவை வங்கிபுறத்து இராமபிரான் ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கோட்டூர் அத்தாமபட்டன் எழுத்து இப்படிக்கு இவை இவ்வூர் வரதராசபட்டன் எழுத்து இப்படிக்கு இவை கண்டேற்றுக் கேசுவபட்டன் எழுத்து இந்த அரியண உடையார்க்கு துந்துமி வருஷம் தை மாதம் இருபத்து ஐஞ்சாந் தியதி ஊற்றுக்காட்டுக் கோட்டத்துத் தமனூர் நாட்டு வேலூரான இராசேந்திரசோழ நல்லூர்க் குமரஞ் சாத்தன் சேனாபதி பிள்ளை நாகதேவன் பல்லவராயனுக்கு காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கலான விகூஊஹரணச் சதுவேயிஉங்கலத்து முட்டைப்புறத்துச் சீராம ஹட்டனேன் காணிவிலை வூஊணம் விற்றுக் குடுத்த பரிசாவது நான் உக்கல்

9. ஸஹையார் பக்கல் சமுதாயத்தில் கோட்டையேனான வடபிடாகை ஏழாயிரச் சேரியும் திருப்புலித்தாங்கலும் ஆக இவ்வூர் இரண்டு இவ்வூரிரண்டிலும் ஓதுமுக்கில் நாராயண ஹட்டன் இந்தச் சபையார் பக்கல் கொண்ட சாதனப்படி மூன்றில் ஒன்று நீக்கி என்னுது ஆன பங்கு மூன்றில் இரண்டுக்கும் நான் கொண்ட சாதனப்படி பூ சா இப்பணம் நானூற்றுக்கும் இற்றைநாள் இவர்க்கு இவ்வூர்களில் என் பங்கு இருகூறும் விலையாக விற்றுப் பற்றின பூ ருா இப்பணம் அஞ்ஞூறும் உக்கலில் வரந்தருவான் ஆயிரத்து இருநூற்றுத் தட்டான் மகன் வடுகநாதன் பார்வையாகப் பற்றிக் கொண்டு காணி விலை வ்யூஊணழ திரிவிட்டுக் குடுத்தேன் நான் திரிவிட்டுக் குடுத்த

10. தெற்கு எப்பேற்பட்ட கலனும் இல்லை கலனுள் வாய்தோற்றுப்படில் யானே தீர்ந்து குடுக்கக்கடவேன் ஆகவும் இச்சாதனப்படியே இவற்கும் விற்று ஒற்றி பிரதிக்கிறைய சாசனங்களுக்கும் மற்றும் எப்பேற்பட்ட ஸகூவ்யூாதீ களுக்கும் உரித்து ஆவது ஆகவும் இப்படி சம்மதித்து இவ்யூஊணந் திரிவிட்டுக் குடுத்தேன் ஊற்றுக்காட்டுக் கோட்டத்துத் த[ம]னூர் நாட்டு வேலூரான இராசேந்திரசோழ நல்லூக் குமரந் சாத்தன் சேனாவதிப்பிள்ளை நாகதேவன் பல்லவராயர்க்கு காலியூர்க் கோட்டத்து பாகூர் நாட்டு உக்கலான விகூ்ஊஹரணச் சதுவேூதிமங்கலத்து முட்டைபுறத்துச் சீராம ஹட்டனேன் இப்படிக்கு இவை முட்டைபுறத்துச் சீராமஹட்டனேன் எழுத்து

11. இப்படி அறிவேன் ஓதுமுக்கில் நாராயண ஹட்டனேன் இப்படி இவை முட்டைப்புறத்து இராமபிரான் பட்டன் எழுத்து நாகதேவன் பல்லவராயர்க்கு இவ்யூஊணம்மாக சம்மதிக்க அருளிச் செயற்படிக்கு திரிவிட்டு குடுத்தமைக்கு உக்கலுடையான் மகாசனப்பிரியன் வாழவந்தான் எழுத்து இப்படி அறிவேந் மாதவ ஹட்டனேன் இப்படி அறிவேன் . . . பட்டனேன் இப்படி அறிவேன் பற்பநாத பட்டனேன் இப்படி அறிவேன் வ்யூயாகை ஆண்டபிரான் பட்டனேன் இப்படி அறிவேன் வ்யூயாகை வரதராச ஹட்டனேன் இப்படி அறிவேன் வீரநாராயண ஹட்டனேன் இப்படி அறிவேன் கண்டேற்று இயக்கன் நாராயண ஹட்டனேன் இப்படி அறிவேன்

12. கண்டேற்றுக் கேசவபட்டனேன் இந்த திரிவிட்டினபடி பணம் அஞ்ஞூறும் பாத்துக் குடுத்தமைக்கு உக்கல் ஆயிரத்து இருநூற்றுத் தட்டான் மகன் . . . க்க நாயனேன் எழுத்து இப்படி அறிவேன் விக்கிரமசோழபுரத்து மேற்பாக்க முடையான் அக்கநாயனேன் இப்படி அறிவேன் மயிபாலனேன் இப்படி அறிவேன் செட்டி தொண்டக நாயனேன் இப்படி அறிவேன் பெருநகரில்

தானத்தாரில் பன்மாஹேஸ்வர ஹட்டனேன் இப்படி அறிவேன் பெருநகரில் தாநத்தாரில் தில்லைக்கூத்தனேன் இப்படி அறிவேன் பெருநகர் காக்கு நாயக பட்டனேன் இப்படி அறிவேன் விக்ரமசோழபுரத்துப் பாளூர்க்கிழவன் ஓதுவித்தானேன் இப்படி அறிவேன் பெருநகர் தொஞ்ஞை வாணாதராயனேன்

13 இப்படி அறிவேன் பெருநகர் நல்லழகியநாயன் காலிங்கராயனேன் இப்படி அறிவேன் குன்றக்கோட்டுழான் பிரமண்டை தொண்டை . . . த்து இப்பிறமாணமுந் திரிவிட்டு முட்டைபுறத்துச் சீராமபட்டன் அருளிச்செயற் படிக்கு காஞ்சீபுரத்தில் திருப்பணி ஆசாரி பெருங்காண்டைப் பல்லவராயன் ஆசாரி எழுத் . . . .

14 இப்படி அறிவேன் வயலை ஆற்றூர் மங்கலமுடையான் நயினானேன் இப்படி அறிவேந் மன்றபாங்கிழாந் . . .

த.நா.அ. தொல்லியல் துறை | தொடர் எண் : 647/2017

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம். 1304
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1382
ஊர்	:	பெருநகர்	இ.க.ஆ. அறிக்கை	:	359/1923
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	விஜயநகரர்	ஊ.க.எண்	:	9
அரசன்	:	இரண்டாம் அரிகரர்			

இடம் : பிரம்மபுரீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு பட்டி.

குறிப்புரை : சகம் 1303 (கி.பி. 1381)ஆம் ஆண்டு உக்கல் எனும் விக்ரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இவ்வூரின் வடபிடாகை ஊர்களான ஏழாயிரச்சேரி, திருப்புலித்தாங்கல் ஆகிய இரண்டு ஊர்களின் மூன்றில் இரண்டு பங்குகளை 400 பணம் பெற்றுக்கொண்டு முட்டைப்புறத்தைச் சார்ந்த சீராம பட்டனுக்கு விற்றுக் கொடுத்தது போக மீதி இருந்த மூன்றில் ஒரு பங்கினை ஓதுமுக்கில் நாராயணப் பட்டனுக்கு 200 பணம் பெற்றுக் கொண்டு சபையார் விற்றுக் கொடுத்தனர். ஓதுமுக்கில் நாராயணப்பட்டன் என்பவன் தான் விலைக்கு வாங்கிய மூன்றில் ஒரு பங்கினை, சகம் 1304(கி.பி. 1382)ஆம் ஆண்டில் ஏற்கனவே இவ்வூரின் மூன்றில் இரண்டு பங்கினை வாங்கிய தாமனூர் நாட்டு வேலூர் என்னும் இராசேந்திரசோழ நல்லூர் ஊரைச் சார்ந்த சாத்தன் சேனாபதிப்பிள்ளை நாகதேவன் என்பவனுக்குத் தனது ஒரு பங்கினை 250 பணம் பெற்றுக்கொண்டு விற்றுக் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலீஸ்வரன் அரியராய விபாடன் பாஷைக்குத்தப்புவ ராயர் கண்டன் மூவராயர் கண்டன் பூர்வதக்ஷிண பச்சிம ஸமுத்திராதிபதி ஸ்ரீவீரஅரியண உடையார் ப்ருதிவிராச்சியம் பண்ணி அருளா நின்ற சகாப்தம் ௲௩௱௪ துந்துபி வருஷத்துக்கும் மேஷநாயற்று பூர்வபக்ஷத்து சனிக்கிழமையும் த்ரயோதசியு[ம்] பெற்ற உத்திராடத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து தமனூர் நாட்டு வேலூரான ராசேந்திரசோழ நல்லூர் குமரன் சாத்தன் சேனாபதிப்பிள்ளை நாகதேவன் பல்லவராயனுக்கு காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கலான

2. விக்ரமாபரணச் சதுற்பேதி மங்கலத்து ஸபையாரில் ஓதுமுக்கில் நாராயண பட்டனேன் எங்கள் வடபிடாகை ஏழாயிரச்சேரியும் திருப்புலித்தாங்கலும் உக்கல் சபையார் பக்கலிலே முட்டைப்புறத்து சீராமபட்டன் கொண்ட பங்கு மூன்றில் இரண்டும் நீக்கின கொண்ட பங்கு மூன்றில் ஒன்றும் நான் கொண்ட சாதநம் திரிவு இட்டுக்குடுக்கையில் இந்த ப்ரமாணத்துக்கும் இந்தத் திரிவு இட்டுக்கும் கல்வெட்டிக் குடுத்த பரிசாவது இந்த அரியண உடையாற்கு செல்லா நின்ற சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று மூன்றில் மேல் துன்மதி ஸம்வத்ஸரத்து கன்னி நாயற்று பூர்வபக்ஷத்துத் த்ரிதையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற ரேவதி நாள் செயங்கொண்டசோழ நல்லூர்க் குமரன் சாத்தன் சேனாவதிப் பிள்ளை நாகதேவன் பல்லவராயனுக்கு காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கல் ஆன விக்கிரமாபரணச் சதுறுவேதி மங்கலத்து ஓதுமுக்கில் நாராயணப்பட்டனேன் காணி உடையப் பிறமாணம் திரிவிட்டு குடுத்த பரிசாவது நா . . உக்கல் ஸபையோ . . சமுதாயத்தில் இனாடு உடையேன் ஆன வடபிடாகை ஏழாயிரச்சேரி திருப்புலித்தாங்கலும் ஆக இவ்வூர் இரண்டினுக்கு முட்டைப்புறத்துச் சீராமபட்டன் இந்த சபையார் பக்கல் கொண்டு உடைய சாதனப்படி மூன்றில் இரண்டு நீக்கி நான்கொண்டு உடைய மூன்றில் ஒன்று கொண்டு உடை . . .

3. சோழமண்டலத்து காலியூர் கோட்டத்துப் பாகூர்நாட்டு உக்கல் ஆன விக்கிறமாபரணச் சதுர்வேதிமங்கலத்து மஹாஸபையோம் விலைப்ரமாணக் கை எழுத்து இவ்வூர் ஓதுமுக்கில் நாராயண பட்டனுக்கு நாங்கள் விற்றது எங்கள் வடபிடாகை ஏழாயிரச்சேரி திருப்புலித்தாங்கல் என்று பேருடைய ஊர்களுக்கு கீழ்பாற் எல்லை சிற்றிலைப் பாக்கத்தில் எல்லைக்கும் அரசாணிபாலை எல்லைக்கு மேற்கும் தெ . . . புன்னை எல்லைக்கும் அதிரம்பாக்கம் எல்லைக்கும் வடக்கும் மேல்பாற் எல்லை இந்தப்பாகூர் எல்லைக்கும் இட்டிகைப்பட்டு எல்லைக்கும் சோதியம்பாக்கத்தில் வரந்தருவான் ஆயிரத்து இருநூற்றுத் தட்டான் மகன் வடுகன் தன்பார்வை ஆக பற்றி கொண்டு காணி விலை ப்ரமாணம் . . . . க்குடுத்த இதற்கு எப்பேறபட்ட கலனும் இல்லை கலனுள் வாய்த்தோற்றுப்படில் நானே . தீற்து குடுக்க கடவேனாகவும் இச்சாதனபடியே இவற்க[ள்]* விற்றுறொற்றி ப்ரதி . . . தெய்வதானங்களுக்கும் மற்றும் எப்பேற்ப்பட்ட சகலப்பிராத்திகளுக்கும் உரித்து ஆவது ஆகவும் இப்படி சம்மதித்துத் திரிவிட்டுக் குடுத்தேன் ஊற்றுக்காட்டுக் கோட்டத்துத் தமனூர் நாட்டு

4. எல்லைக்கும் பாதிரித்தாங்கல் எல்லைக்கும் கிழக்கு நாற்பாற் எல்லை நாங்க . . உடைய வடக்கு தெற்கும் இந்த நான்கு எல்லைக்கும் உட்பட்ட ஊர்

இரண்டும் நத்தமும் நத்தக்கடையும் நஞ்செய் நிலமும் புன்செய் நிலமும் ஏரியும் ஏரிவாய் புறவடையும் மேல் நோக்கிய மரமும் கீணோக்கிய கிணறும் மற்றும் உள்ள சகல ஸமுதாயங்களும் உடும்பு ஓடி ஆமைதவழ்ந்த இடம் உட்ப்பட முட்டைப்புறத்து சீராமபட்டனுக்கு விற்றுக் குடுத்த இவ்வூர் இடை . .. மூன்றில் இரண்டு நீக்கி மூன்றில் ஒன்று இவனுக்கு விற்றுக் குடுத்துக் கொள்வது ஆன எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாடு வழங்கும் வராகன் . . . இராசேந்திரசோழநல்லூர்க் குமரன் சாத்தன் சேனாவதிப் பிள்ளை நாகதேவன் பல்லவராயனுக்கு காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு உக்கல் ஆன விக்கிற மாபரணச் சதுறுவேதிமங்கலத்து ஓதுமுக்கில் நாராயண பட்டனேன் இப்படிக்கு இவை ஓதுமுக்கில் நாராயணபட்டன் எழுத்து நாகதேவர் பல்லவராயர்க்கு இப்பிறமாணம் மகாசெனம் சம்மதிக்க திரிவிட்டுக் குடுத்தப்படிக்கு உக்கல் உடையான் ஊஹாஜன வ்ரு யஸ்ரூந் வாழவந்தான் எழுத்து இப்படி அறிவேன் முட்டைபுறத்து ஸ்ரீராமஸட்டன் எழுத்து இப்படி அறிவேன் கண்டேற்று இயக்கன் நாராயணப் . . .

5. குளிகை உா இப்பணம் இருநூற்றுக்கும் இந்த உளாகளங்கலும் மூன்றில் ஒன்று விலைக்கு விற்று பொருளறக் கைக்கொண்டு விலைவ்ரு மாணம் பண்ணிக்குடுத்தோம் ஓதுமுக்கில் நாராயணபட்டனுக்கும் உக்கலான ஸ்ரீவிக்ரு மாபாரபணச் சதுவேதிமங்கல[த்]து மஹாஸஹைஓம் இப்படி விற்றுக் குடுத்த இந்த ஊர்களில் பங்கு மூன்றில் ஒன்றுக்கும் எப்பேற்ப்பட்ட கலனும் இல்லை கலனும் . . . . துக்கு குடுக்கக் கடவோம் ஆகவும் இப்படி விற்றுக் குடுத்த இவ்வூர்களில் பங்கு மூன்றில் ஒன்றும் இதுவே வ்ரு மாணம் ஆவது ஆகவும் இதுக்கு இது வல்லது . . . வன் வங்கிப்புறத்து இராமபிரான் ஹட்டனேன் இப்படி அறிவே[ன்] கண்டேற்று கேசவ பட்டனேன் இப்படி அறிவேன் வ்ரு[யா]கை இளையவா . . பட்டனேன் . . . . பட்டனேன் இப்படி அறிவேன் வ்ரு யாகை ஆணபிரான் பட்டனேன் இப்படி அறிவேன் இக்குடி வரதராச பட்டனேன் இப்படி அறிவேன் இக்குடிய் நாராயண ஹட்டனேன் இப்படி அறிவேன் மாத[வ]* ஹட்டனேன் இப்படி அறிவேன் முட்டைப்புறத்து[ந்]*நின்ற நாராயண ஹட்டனேன் இப்படி அறிவே(ற்)[ந்] பற்பநாத பட்டனேன் உ இந்தத் திரிவிட்டினபடி பணம் இருநூற்று அம்பதும் பாத்துக் குடுத்தமைக்கு உக்கல் வர(ந்)தருவான் ஆயிரத்து இருநூற . . .

6. மாற்று இப்பொருட்செலவோலை . ாட் . . . ன்னப்பெருவதாகவும் இப்படி விற்றுக் குடுத்த இந்த ஊர்களில் பங்கு மூன்றில் ஒன்றுக்கும் நீரும் நீர்போக்கும் வழியும் வழிபோக்கும் மரமும் கிணறும் உரித்தாவதாகவும் இப்படி விற்றுக்

குடுத்த இவ்வூர்களில் மூன்றில் குளவடை ஒன்று இவனுக்கு விற்று ஒற்றி வ௳திகொய தாயதானங்களுக்கும் மற்றும் எப்பேர்பட்ட சகலப் பிராப்திகளுக்கும் உரித்து ஆவது ஆகவும் இப்படி குடுத்த இவ்வூர்களில் மூன்றில் ஒன்றுக்கு . . . மணத்துக்கு . . . எழுத்து . . . பெருநகரில் தானத்தாரில் தில்லைக்கூத்த பட்டனேன் இப்படி அறிவேன் பெருநகரில் தானத்தாரில் காக்கு நாயகபட்டனேன் இப்படி அறிவேன் பெருநகர் தானத்தாரில் பன்மாயேசுர பட்டனேன் இப்படி அறிவேன் பெருநகர் தொஞ்ஞை வாணாதராயனேன் இப்படி அறிவேன் மயில்பாலனேன் இப்படி அறிவேன் கொண்டக நாயனேன் இப்படி அறிவேன் வெண்பாளூர் கிழவன் ஓதுவித்தானேன் இப்படி அறிவேன் விக்கிறம சோழபுரத்தில் மேற்பாக்கம் முடையான் அத்திநாயனேன் உ. இப்படி அறிவேன் பெருநகர் நல்லாதி அழகிய நாயன் காலிங்கராயனேன் இப்படி அறிவேன் புன்னை . . . .

இடம் : முக்தீஸ்வரர் கோயில் மகாமண்டபம் வடபுறச்சுவர்.

குறிப்புரை : கல்வெட்டுச் சிதைந்துள்ளது. திருவகத்தீசுரமுடைய நாயனார் திருமடை விளாகத்தில் தலை, இடை, கடை வசிப்பவர்களிடம் தறி ஒன்றுக்கு கடமை 4 பணமும், ஆயம் 2 பணமும் அளிக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்ரீ உசு மகாமண்டலீசுரன் அரியண உடையார் குமாரர் புக்கண உடையார் செல்லா
2. நின்ற பிறமாதி வருடம் ஆவணி மாதம் இருபதாந்தியதி உடையார் திருவகத்தீசு-
3. ரமுடைய நாயனார் திருமடை விளாகத்தில் தலை யிடை கடையில் இவ்வருஷ . .
4. . . . . . மடைக்கு . . . . உடையார் நீர் புடமாகக் கரிய மாணிக்க விண்ணகர
5. . . . . குடுத்தபடி . . . . . க்கு சந்திராதித்தவரையும் . . . .
6. . . . .
7. . . . . ந்த படிக்கு தறிபணமிறுத்து கடமை நாலு பணமும் ஆயம் இரண்டு பணமும் கொள்ளக்கடவ தாக[வு]
8. ம் . . . . வந்து ஏறும் குடிமை முதல் [கடமை] முதல் சந்திராதித்த வரையும் கொள்ளக்கடவது ஆகவும்

9. . . . ழித்து . . . . அன்றும் சொல்லக் கடவது அலமளைகவும் இந்த கல்வெட்டும் படி[யும் அ]ழிய

10. [அ]குதய நினைத்தார் உண்டாகில் கெங்கைக் கரையில் காராம் பசுவை கொன்ற

11. பாவம் கொள்ள கடவது ஆகவும் இப்படிக்கு [அடை]குத்தவுஞ் சாழகுடி ஏறவும்

12. ஸ்ரீ ராயெசுர ரக்ஷை ।–

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 681/2017

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	செங்கற்பட்டு	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	:	ஆத்தூர்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊ.க.எண்	:	23
அரசன்	:	-			

இடம் : முக்தீஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்குச்சுவர்.

குறிப்புரை : விஜயநகர மெய்க்கீர்த்தியின் ஒரு சிறு பகுதி மட்டுமே உள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஊமா மணுலெஶ்வர அரியராய விபாட பாஷை-
2. க்கு தப்புவராயர் கண்டன் எம்மண்டலமு கொண்ட ராய கட்டா[ரி] . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 682/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	செங்கற்பட்டு	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	:	ஆத்தூர்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	-			
அரசு	:	-	ஊ.க.எண்	:	24
அரசன்	:	-			

இடம் : முக்தீஸ்வரர் கோயில் மகாமண்டப வடபுற வெளிச்சுவர்.

குறிப்புரை : சிதைந்த இக்கல்வெட்டில் ஸ்ரீமாஹேஸ்வரரும் தானத்தாரும் மனை பத்திரரும் கைக்கோளரும் கைக்கோள முதலிகளும் கூறப்படுகின்றனர். கோயிலுக்குச் சந்திராதித்தவரை அனுபவிக்க நிலம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. திருக் . . ளும் இதிற்பெறும் தரமும் வரிசையும் சந்திராதித்தவரையாகப் பெறக்கடவராக
2. . . . .க்குடுத்தோம் ஸ்ரீமாஹே*ஶ்வ*ரரும் தானத்தாரு[ம்] மனைபத்திரரும் கைக் கோளரும்
3. . . . கைக்கோள முதலிகளும் ஸ்ரீமாஹே*ஶ்வர ரக்ஷை*

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 683/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	கலி 4987
வட்டம்	:	செங்கற்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1885
ஊர்	:	ஆத்தூர்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	25
அரசன்	:	-			

இடம் : கல்யாண வரதராஜ பெருமாள் கோயில் மகாமண்டபம் வெளிச்சுவர் தென்புறம்.

குறிப்புரை : கலி வருடம் 4987-ஆம் ஆண்டு பார்த்திப ஆண்டு ஆனி மாதம் 13-ஆம் தேதி (கி.பி. 1885) இக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது என்பதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. கலி ஹூ சகூஅஎம் பார்திப ஹூ ஆனி மீ″ கந உ
2. சம்புறஷணை செயிதது.

இடம் : முன் மண்டபத்தூண்

1885

* கலி வருடமும் ஆங்கில ஆண்டு1885-ம் சரியாக உள்ளது.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 684/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	செங்கற்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1917
ஊர்	:	ஆத்தூர்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	26
அரசன்	:	-			

இடம் : முக்தீஸ்வரர் கோயில் மகாமண்டபம் நுழைவாயில் தெற்குச்சுவர்.

குறிப்புரை : இக்கோயில் (30.8.1919 அன்று) பிங்கள வருடம் ஆவணி மாதம் 15ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. பிங்கள ஷு ஆவணி மாதம் 15 உ
2. கும்பாபிஷேகம் நடத்த
3. தப்பட்டது.
4. 30.8.1917

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 685/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 910
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	40/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	பரகேசரிவர்மன் (முதலாம் பராந்தகன்)			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் கிணற்றின் மேல் உள்ள கல்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்து பெரும்பாலையூர் நாட்டு பெரும்பாலையூர் மகாதேவர் திருப்பனங்காடுடையார் கோயிலில் திருநந்தா விளக்கெரிக்க திருப்பாலையூர் ஊர்த் தலைவனின் மகள் காடாவி என்பவள் தானம் வழங்கியுள்ளாள்.

கல்வெட்டு :

1. . . . . . .
2. பர[கே*]சரி ப-
3. ௨ற்கு யா-
4. ண்டு ௩-ஆ-
5. வது ஊ-
6. ற்றுக்காட்டு-
7. க்கோட்ட-
8. த்துப்-
9. பெரும்பா-
10. லையூர் நாட்டு-
11. ப் பெரும்பா-

12. லையூர் ஊ–

13. ஹாதேவர்

14. திருப்பனங்-

15. காடுடையார்-

16. க்கு இவ்வூர்-

17. த் திருப்பாலை-

18. யூர் கிழவந்

19. [மகள்] காடவி

20. ை[வத்த] நந்

21. தா வி[ளக்கு]

22. (அடுத்த சில வரிகள் கட்டடத்துக்குள் மறைந்துள்ளன.)

23. ஞ் ச

24. ந்தி

25. ரா

26. தி

27. த்

28. த

29. ரு

30. ள்

31. ள

32. ன

33. வு

34. [ம்]

35. வை

36. த்த

37. [து]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 686/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	38
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1108
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	27/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில்.

குறிப்புரை : முதல் இரு வரிகள் வீரமே துணையாகத் தொடங்கும் மெய்க்கீர்த்தி வீரராசேந்திரனுக்கு உரியதாகும். அதனைத் தொடர்ந்து முதலாம் குலோத்துங்கனின் புகழ்மாது விளங்க என்னும் மெய்க்கீர்த்தியோடு இடம்பெறுகிறது இக்கல்வெட்டு.

ஊற்றுக்காட்டுக் கோட்டத்து பாலையூர் எனும் இராசேந்திரசோழ நல்லூர் திருபதங்காடு மகாதேவர் இறைவனுக்கு விளக்கெரிக்க மைய்யூர் நாட்டு இராசேந்திரபுரத்து எண்ணெய் வாணியர் (சங்கரபாடியார்கள்) எண்ணெய் தானமாக வழங்கியுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ॥– வீரமே துணையாக தியா-
2. கமேயணியாகவும் செங்கோலாக்கி கருங்கலி கடிஞ புகழ்-
3. மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகனிலவ மலர் [மகள்]
4. புணர உரிமையிற்ச் சிறந்த மணிமுடிசூடி மீனவர் நிலைகெட
5. வில்லவர் குலைத்தர . . .
6. தன் சக்கர நடாத்தி விஜையாபிஷெகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து புவன-

7. முழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய சக்ரவத்திகள் ஸ்ரீகுலோ[த்துங்க-

8. சோழ] தேவற்கு யாண்டு ௩௰௮ முப்பத்தெட்டாவது ஜயங்[கொண்டசோழ]

9. மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூரான

10. ராசேந்திரசோழ நல்லூர்த் திருப்பதங்காடுடைய மஹாதேவர்க்கு இக்-

11. கோட்டத்து மைய்யூர் நாட்டு ராஜேந்த்ரசோழபுரத்துச் சங்கரபாடியார் வா-

12. ணிய . . .

13. . . .

14. கொற்றனை அகத்தி செல்வநும் குமாரனை நல்லூரு . . .

15. திரும்புலியும் கவிசிசூற்றி ஆழ்வானும் குளத்தூழா . . .

16. மும் உள்ளிட்ட நகரத்தோம் இதேவர்க்கு நாங்கள் வைத்த . . . தங்-

17. களூரில் ஆடின செக்கில் காணத்துவாய் ஒரு பிடிகொள்ள மு . . .

18. யண்ணை முகந்து கொண்டு சந்த்ராதித்தவற்

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி.1123
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	33/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	3
அரசன்	:	விக்கிரமசோழன்			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் முன் மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டு பாலையூர் என்கிற இராசேந்திரசோழ நல்லூர் திருப்பதங்காடு உடைய மகாதேவர் கோயிலுக்கு, அமாவாசை அன்று யாத்திரை மேற்கொண்டு இறைவனைத் தரிசிக்க வரும் பிராமணர்களுக்கு ஆசாரசீலன் மடத்தில் உணவளிப்பதற்காக, சோழ மண்டலத்து பாண்டிகுலாசனி வளநாட்டு குறிச்சி ஊரைச் சார்ந்த அபிமானமேரு பல்லவரையன் என்பவன் மடப்புறமாக நிலம் ஒன்றினை வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்ப தந்நிருப
2. மன்னவர்சூட மன்னிய உரிமையால் மணிமுடிசூடிச் செங்கோலோச்சி திசைதோறும் வளர்ப்ப வெங்கலி கடிந்து
3. மெய்யறுந்தழைப்ப கலிய கடமலை நடாத்தி விளங்கோளாழி வறையாழி
4. இருசுடரளவும் ஒரு குடை . . . முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளிய கோவி[ராச] கே-
5. சரி பந்ராந திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு ஐஞ்சாவது ஜயங்கொ-

6. ண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டு பாலையூராந

7. *ரா*ஜேஷ்ஷூசோழ நல்லூர் ஸ்ரீதிருப்பதங்காடு உடைய *ஊஹா*ஷெவர் கோயிலுக்கு சோழமண்டலத்து

8. பாண்டிகுலாசனி வளநாட்டு . . . குறிச்சிக் குறிச்சி உடையாந் அரியந் திருச்சிற்றம்பலமு-

9. டையாநாந அபிமாநமேருப் பல்லவரையநேன் இக்கோயிலிலே அபூர்வி ஆண்டார்களுக்கு

10. அமாவா*ஷி* அமுர்து செய்கைக்கு ஆசாரசீலந் மடத்துக்கு மடப்புறமாக களத்துார் கோட்டத்துச்

11. செங்குன்ற நாட்டு செங்குன்றமாந அருமொழிதேவ நல்லூரில் காணி உடைய செங்குன்றங் கிழா

---

* சிமெண்ட் பூசப்பட்டுள்ளது

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	24
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1202
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	37/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	4
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் முன் மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு வரிகளின் இறுதிப்பகுதி கட்டடப் பகுதிக்குள் மறைந்துள்ளது. இக்கோயிலைச் சார்ந்த சிவப்பிராமணர்கள் இருவர் இவ்வூரினர் சிலரிடமிருந்து இரண்டாயிரம் குழி நிலம் மற்றும் கிணறு ஒன்றும் பெற்றுக்கொண்டு, இறைவன் முன் இரண்டு திருநந்தா விளக்குகள் விளக்கெரிப்பதாகச் சம்மதித்து உடன்படிக்கைச் செய்து கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையுங் கருவூ-
2. ரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளின குலோத்துங்க சோ-
3. ழதேவற்கு யாண்டு இருபத்து நாலாவது ஜயங்கொண்டசோழ-
4. ண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டு
5. பாலையூரான இராஜேன்திரசோழ நல்லூர் உடைய . . .
6. ணியுடைய சிவப்பிராமணன் காக்கு நாயக பட்டன் மகன் . .
7. ண்டார் பட்டனும் திருவேகம்பமுடையான் பட்டன் மகன் . .
8. ந்தான் பட்டனும் இவ்விருவோம் இவ்வூர் பிரிந்த செம்பியன் திற . .

9. க்கிழான் ஆதித்தன் திவாகர தேவனுந் தம்பிமாரும் இன்னாயனாற்கு வை . .

10. ளக்கு இரண்டுக்கு இவ்வூரிலிவர்கள் காணியான நிலத்து . . .

11. லால் நாங்கள் கைக்கொண்ட நிலமாவது ஏரிகீழ் ஒற்றியூர் தங் . . .

12. லும் குழி எண்ணூற்று நாற்பதும் மண்டைசெறு தடி இரண்டினாற் குழி நானூற்று முப்பது . . .

13. திருநந்தா விளக்குப்பட்டி கொள்ள இவர்கள் பக்கல் நாங்கள் காசு கொண்டு

14. . . . செல்வன் பக்கல் முதியாற்றுப் பள்ளத்தில் கொண்டுடைய உத்தமசோழன் விட்ட நில . . .

15. குழி எழுநூற்று முப்பதும் தென் வடதலைக் கண்டறும் . . . மூன்றோபாதியுங் கரையும் நீரோடு . . .

16. ண்டாயிரமுங் கிணற்றில் மூன்றோ பாதியும் . . . மிகுதி குறைவு உள்பட . . கைக்கொண்டு நாங்கள் எரிக்கத் . . .

17. விளக்கு இரண்டும் சந்திராதித்தவரைக் எரிக்கக் கடவேனாக சம்மதித்து இன்னிலமுங் கிணறுங் கைக்கொண்டோ . . .

18. பண்ணி காக்கு நாயக பட்டன் மகன் உய்யக்கொண்டான் பட்டநும் திருவேகம்பமுடையான் பட்[டன் மகன் தழுவக்குழைந்]. . .

19. தான் பட்டனும் இ[வ்]விருவோம் இப்படிக்கு இவை காக்கு நாயக பட்டன் மகன் உய்யக்கொண்டான் . . .

20. க்கு இவை திருவேகம்பமுடையான் பட்டன் மகன் தழுவக் குழைந்தான் பட்டன் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 689/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	29
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1207-08
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	29/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	5
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் கருவறைத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் அதிகாரி நந்தியராயன் என்பவன் ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டு பாலையூர் என்கிற இராசேந்திர சோழ நல்லூர் திருப்பதங்காடுடையார் கோயிலுக்குரிய திருநாமத்துக்காணி, தேவதானம் ஆகிய நிலங்கள் மீது வசூலிக்கப்படும் வரிகள், தறிஇறையாகப் பெறப்படும் காசு, செக்குக்குடியினர் கொடுக்கும் எண்ணெய் மற்றும் காசுகள் ஆகியவற்றினை, இக்கோயில் இறைவனின் பூசைக்கும், கோயில் திருப்பணிக்கும் முதலீடாக வைத்துக் கொள்ள மன்னனிடம் கேட்டுக் கொண்டார். மன்னனும் இருபத்தொன்பதாவது ஆண்டு முதல் திருப்பணிக்கும், பூசைக்கும் முதலீடாக வைத்துகொள்ள ஆணை வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்கேழ்வி முன்னாகத் திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் கருவூரும் ஈழமும் பாண்டியன் முடிதலையுங் கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க-
2. சோழ தெவற்கு யாண்டு உ௰கூ ஆ[வ]து திருமுகப்படி திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக் க-
3. ாட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டுப் பாலையூரான ராசேந்திரசோழ நல்லூரில் திருப்பதங்காடுடையார் கோயிலில் தேவகன்மிக்கும் ஸ்ரீ மா ஹேஸ்வ–

4. ரக்கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியஞ் செய்வானுக்கும் இத்தேவர்க்கு இவ்வூரில் திருநாமத்துக்காணியாய் தேவதானமான விளைநிலம் இருபதிற்று வே-

5. லிக்கும் திருநந்தவானங்களுந் திருந்தோப்புகளும் உள்ளிட்ட கொல்லை நிலம் பதிற்று வேலிக்கும் தேவி அரும்பாக்கத்து தேவதானமான விளைநிலம் ஒன்பதரைக் குழி . . .

6. ங்களுருமான கொல்லை நிலம் பதிற்று வேலிக்கும் அந்தராயம் பாட்டமும் ஆயமும் உள்ளிட்டனவையிற்றுக்கும் குந்தாலி வெட்டிக்கும் தண்டுங் காசும் நெல்லும்

7. இத்தேவர் திருமடைவிளாகத்து இருக்கும் . ச்சர் தறிஇறைக்கும் ஆயத்துக்கும் இறுக்கும் காசும் இட்டு செக்குக்குஞ் செக்குக்குடி இறுக்கும் எண்ணையும் காசு-

8. ம் இத்தேவர்க்குப் பூஜெக்கும் திருப்பணிக்கும் உடலாக இருபத்தொன்பதாவது முதல் பெறக்கடவதாகப் பெறவேணும் என்று நந்தியராயன் நமக்குச் சொன்னமையில் இப்ப-

9. டி செயக்கடவதாகச் சொல்லிக் கணக்கிலும் இட்டுக் கொள்ளக்கடவர்களாக வரிக்கூறு செய்வார்களுக்கும் சொன்னோம் இக்காசும் நெய்யும் எண்ணையும் இருபத்-

10. தொன்பதாவது முதல் ஆட்டாண்டு தோறும் இத்தேவர்க்குப் பூஜெக்கும் திருப்பணிக்கும் உடலாகக் கைக்கொள்க எழுதினான் திருமந்திர ஓலை மீனவன் மூவேந்த வேளான் உ

11. இவை வில்லவராயன் எழுத்து உ இவை தொண்டைமான் எழுத்து உ இவை விசையராயன் எழுத்து உ இவை அங்கராயன் எழுத்து உ இவை பினகிராயன் எழுத்து உ இவை விழிஞிய

12. த்தரையன் எழுத்து உ இவை சிங்கராயன் எழுத்து உ இவை அதிபத்தரையன் எழுத்து உ யாண்டு உ௰கூ [னா]ள் ருாகூ௰ச

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 690/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1226
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	34/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	6
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் முன் மண்டபம் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : ஆண்டார் அகிலநாயகர் எனும் சம்பந்தர் என்பவர் ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டு பாலையூர் என்கிற ராஜேந்திரசோழ நல்லூர் திருப்பனங்காடுடைய நாயனார் கோயிலில் நான்கு சந்திவிளக்குகள் எரிக்க எட்டுப் பழங்காசுகளை, இக்கோயிலைச் சார்ந்த ஆறு சிவப்பிராமணர்களிடம் வழங்கியுள்ளார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்கேழ்வி முன்னாகத் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு பத்தாவது ஜயங்-
2. கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து பாலையூர் நாட்டுப் பாலையூரான ராஜேந்த்ரசோழ நல்லூ-
3. ர் உடையார் திருப்பனங்காடுடைய நாயனார்க்கு ஆண்டார் அகிலநாயகரான சம்பந்தர் வைத்த சந்தி விளக்கு நாலும் இ-
4. க்கோயில் சிவபிராமணரில் காஞ்சைக் காக்கும் பிரான் பட்டன் கைக்கொண்ட விளக்கு அரையும் இக்குடிச் சீராமபிள்ளை-
5. யான சதாசிவ பட்டன் உள்ளிட்டார் கைக்கொண்ட விளக்கு அரையும் இக்குடி நாயகப்பிள்ளையான திருப்பதங்காடு-

6. டையான் கைக்கொண்ட விளக்கு அரையும் இக்குடி தேவர்கள் அந்து பட்டன்னான உமையன்னும் கைக்கொ-

7. ண்ட விளக்கு அரையும் கிராஞ்சிக் காக்கு நாயகப்பட்டன் உய்யக் கொண்டான் பட்டன் கைக்கொண்ட விளக்கு

8. ஒன்றும் இக்குடிச் சிவதவனப் பெருமாளான திருவெண்காடு பட்டன் கைக்கொண்ட விளக்கு ஒன்றும் ஆகச் சந்தி வி-

9. ளக்கு நாலுக்கு நாங்கள் கைக்கொண்ட அன்றாடு நற்பழங்காசு அ ம் இப்பழங்காசு எட்டும் ஆண்டார் அகிலநாயகனாந சம்ப-

10. ந்தன் பக்கல் கைக்கொண்டு சந்திராத்தவரை இச்சந்தி விளக்கு நாலும் எரிக்க கடவோம் இவ்வனைவோம் இப்படிக்கு இவை காக்-

11. கும் பிரான் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை சதாசிவ பட்டன் எழுத்து இப்படிக்கு இவை அக்காரி பட்டன் எழுத்து இப்படிக்கு இவை திருபத-

12. ங்காடு பட்டன் எழுத்து இப்படிக்கு இவை தேவர்கள் சுந்தர பட்டன் எழுத்து இப்படிக்கு இவை உய்யங்கொண்டான் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை தி-

13. ருவெண்காடு பட்டன் எழுத்து

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1231
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	31/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	7
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டு பாலையூர் என்கிற இராசேந்திரசோழ நல்லூர் திருப்பதங்காடு கோயிலில் காணியுடைய உய்யகொண்ட காக்கு நாயக பட்டன் என்பவன், பாலையூர் ஊர்த் தலைவனின் வேலையாள் (பறையடியார்) பெருங்காடன் எனும் இளமைப் பெரும்பறையன் அளித்துள்ளக் காசுகளைக் கொண்டு இக்கோயிலில் சந்திவிளக்கு எரிக்கச் சம்மதித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ...ரு வது
2. ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டுப் பா-
3. லையூரான இராசேந்திரசோழ நல்லூர் உடையார் திருப்பதங்காடுடைய நாயநா[ர்]க்கு இக்-
4. கோயிற் காணியுடைய சிவப்பிராமணன் காக்குநாயகப் பட்டன் மகன் உய்யக்கொண்டாநாந காக்கு
5. நாயக பட்டனேன் இந்நாயனார்க்குத் திருப்பாலையூர் கிழவன் பறையடியாரில் வாசி மகன் பெருங்காடநாந
6. இளமைப் பெரும்பறையன் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு நான் உபையமாகக் கைக்கொண்ட காசு அறு*

---

* கல்வெட்டு முற்றுப்பெறவில்லை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 692/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	பிங்கல வருடம்
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13-14-ஆம் நூற்.
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	28/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	8
அரசன்	:	-			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு வரிகளின் முன்பகுதி கட்டடப்பகுதிக்குள் மறைந்துள்ளது. திருபதங்காடு உடைய நாயனார் கோயில் நிர்வாகிகள் (தானத்தார்), இக்கோயிலுக்குரிய நிலத்தினை ஊர்ச் சபையாரிடம் அடைமானம் வைத்திருந்தனர். மீட்ட பின்னர், இனி இந்நிலங்களை அடைமானம் வைக்கப்போவதில்லை என உறுதி அளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. . . . கேழ்வி முன்னாக பிங்கள *ஸம்வத்ஸர*த்துப் புரட்டாதி மாதம் பா
2. . . . சோழநல்லூர் உடையார் திருப்பதங்காடு உடைய நாயனார் கோயில் தாநத்தார்
3. . . . த்துக்காணி விளைநிலமும் கொல்லை நிலமும் நாங்கள் ஒற்றி வைய்க்கை-
4. . . . பரும் இருந்து ஒற்றிக்கு பணம் குடுத்துயிருக்கையில் இனி இந்த திருநா-
5. . . . லமும் கொல்லை நிலமும் ஒற்றி வைக்க தலவிலை எழுத்தில் கேம்-
6. . . . யளப்பட்டதும் பட்டு எங்கள் கண்களும் தென்றமாக்கறவதாகவும்
7. . . . ல விலை எழுதிக் கொள்ள ஆசைப்படுதல்(ச்) செய்தாருண்டாகிலும்-
8. . . . ட்டுத் துரோகிகளும் ஆகக் கடவதாகவும் இப்படிக்கு இத்திருமலைே-
9. . . . சுரத் திருப்பதங்காவுடைய நாயனார் கோயில்த் தாநத்தாரோம் இத்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 693/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம். 1306
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1384
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	30/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊ.க.எண்	:	9
அரசன்	:	விருப்பண உடையார்			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் முன் மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : திருப்பதங்காவுடைய நாயினார் கோயில் திருமடைவளாகத்துச் சன்னதி தெருவில் 70 குழி அளவுள்ள மனை மற்றும் மனைப்படையும் கைக்கோளர், தேவரடியார்கள் ஆகியோருக்குக் கோயில் நிர்வாகத்தினர் விற்பனைச் செய்துக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* *மஹாமண்டலீஸ்வர* அரியாய *விபாடன* *பாஷைக்கு(ப)* தப்புவரர் கண்டன் *ஹரிஹர* பொக்கன உடையர் குமாரன் விருப்ப-
2. ண உடைய[ா]ற்கு செல்லாருன்ற* சகாத்த[ம்] ஆயிரத்து முன்னூற்று ஆறின் மேல் செ(ு)[ச]ல்லா நின்ற குறோதன வருஷ ஜயங்கொண்டசோழ மண்டல-
3. த்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலைஊர் நாட்டுப் பாலைஊர் இராசேந்திர சோழ நல்லூர் உடையார் திருப்பதங்காடுவு-
4. டைய நாயினார் *ஸூஷிசண்டேஸ்வரர்* கைவிலை இக்கோயிலில் *ஸ்ரீமாஹேஸ்வர*ருக்கு தானத்துக்குக் கடவரும் அதிகாரி சோமராசரும் கை-
5. கக்கோளர் தேவர்அடியாரும் முன்பாக நாம் பண்ணிக்குடுத்தபடி இன்நாயனார் திருமடைவிளாகத்தில் சன்னதித் தெருவில் தென்சிறகு-

---

* - செல்லா நின்ற - என்று படிக்கவும்

6. ம் வடசிறகும் முப்பத்து ஆறு விலை கொண்டது கிழக்கு மேற்கும் உட்பட மனையும் மனைப்படைப்பும் குழி எழுபதும் கீணோக்கின கிணறும் மேல்

7. நோக்கின மரமும் . . .

8. . . . ஆகவும் இந்த மனையும் தானத்தார் கைக்கோளர் தேவர் அடியார்க்கும் மற்றும் கொண்டவர் குடுக்கும்

9. . . . தாயதானங்களுக்கு . . . இப்படிக்கு சம்மதித்து இந்தத் திருமலையிலே விலைப் பிரமாணம் ஆக கல்வெட்டு*

---

* கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	கர வருடம்
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 15-16 - நூற்.
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	32/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	10
அரசன்	:	-			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : நரசையா பிள்ளை என்பவரின் நலன் வேண்டி திருபதங்காடுடைய நாயனாற்கும், குமாரசுவாமிக்கும் தெத்தியோதனம் வைத்துப் படைப்பதற்கு வடக்கு மற்றும் தெற்குப் பகுதி பாலையூர் ஊரவர் நிலம் தானமளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸுபமஸ்து கர வருஷம் தை மாதம் முதல் தியதி சுக்கிர வாரமும் பெற்ற உத்திரத்து னாள் ஸ்ரீமது நரசையா பிள்ளைக்கு புண்ணியமாக காடுவெட்டி கோவிந்த பிள்ளை அப்பையர் புத்திரன் காளவியப்பர் பிள்ளை உ. . . .
2. சுப்பிரமணியர் புத்திரன் வெக்கிரினாகர் பிள்ளையும் பாலைஊர் வடபாதி தென்பாதி ஊ[ர]வரும் திருப்பதங்காடு உடைய நயினாற்கும் குமார சுவாமிக்கும் தினக்கட்டளை தெத்தியோதனபடிக்கு நாள் ஒன்றுக்கு வெ . .
3. சி நானாழியும் தயிரும் கறியமுதும் சுக்கும் ஏலம் மிளகும் நெய் . . . கு உரியும் சம்பள வகைக்கும் கறியமுதுக்கும் காலமாக நடந்து வரும்படிக்கு
4. வில்லம் ஏரி எதுவாயி ஆற்றுக்கால் பாச்சலில் முன்னாள் கூஉகுழி நாளது விட்ட கூ உ குழி ஆக கூ ச குழி வேலும் மயிலும் நாட்டின நாற்-
5. பாற்கெல்லை நிலம் சந்திராதித்தவரைக்கும் தாரஹ்வமாக குடுத்தோம் யிந்த கிரக உத்தனா சந்திராதித்தவரைக்கும் தெத்தியோதனபடி

6. திருமலை நடத்த கடவதாகவும் யிந்த தன்மத்துக்கு யாதொருத்தர் அகுதம் பண்ணாமல் நடத்தக் கடவர்களாவும் இத்தன்மத்துக்கு அகுதம்

7. பண்ணினவன் உண்டானால் கெங்கை கரையிலே குரால் பசுவையும் காராம் பசுவையும் கொன்ற தோஷத்திலே போக கடவர்களாகவும் உ

த.நா.அ. தொல்லியல் துறை			தொடர் எண் : 695/2017		
மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	நள வருடம்
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	(கி.பி. 1485-90)
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	35/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊ.க.எண்	:	11
அரசன்	:	நரசிங்கய்யதேவ மகாராயர்			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் முன் மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : விசயநகர அரசர் நரசிங்கய்ய தேவமகாராயர் பாலையூரில் வாழும் பள்ளிகளின் வீட்டு மனைகள் மீதான வரிகளை நீக்கம் செய்து ஆணையிட்டுள்ளார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமன்மஹாமண்டிலீசுர மேதினி மீசுர கண்டக் கட்டாரி சாளுவ
2. நரசிங்கய்யதேவ மஹாஇராசர் பாலைஊர் பள்ளிகளுக்கு
3. கல்லுவெட்டி குடுத்தபடி நள வஷு முதல் வால்வரி கழித்து ஆற்-
4. றுக்கு சந்திறாதித்தவரையும் செல்லக் கடவதாகவும்
5. இதுக்கு அகுதம் பண்ணினவர்கள் உண்டாகில் கெங்க
6. கரையில் . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 696/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	விக்ருதி
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 16-17- நூற்.
ஊர்	:	பாலூர்	இ.க.ஆ. அறிக்கை	:	38/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	12
அரசன்	:	-			

இடம் : பதங்கீஸ்வரர் கோயில் முன் மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : கிருஷ்ணராய நாயக்கர் தானமாக வழங்கிய பாலையூர் கிராமத்தின் கொல்லை நிலம், கழனிநிலம் ஆகியவற்றினை இக்கோயில் திருப்பணிக்கும், நடன ஆசிரியர் மற்றும் மத்தளம் வாசிப்பவர்களுக்குத் தானமாக அளிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. விகுறுதி வருஷம் தை *மீ* ஸ்ரீமசு கிறுஷ்ண[ர]ாய நாயக்கசு தன்மமாக நயினாரு . . .
2. திருப்பணிக்கும் நட்டுவா[ங்கம்] முட்டுக்காறக்கும் நம்முடைய உடைய கிறாமமான பாலையூரில் . . .
3. . . . யிரானத்துக்கு . . . கொல்லை ௲ கூா கழனி ௲ சாருய ஏந்தல் . . .
4. யித்தன்மத்துக்கு அகுதம் பண்ணிநவர்கள் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போக . . .

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	: புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	: சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	: முதலாம் இராசராசன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயிலில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : இராசராசனின் மெய்க்கீர்த்தி மட்டும் இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திருமகள்போல பெருநிலச் செல்வியும் தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலை கலமறுத் . . . யாண்டு தொழுதகை விளங்கும் யாண்டே செழியறைத் தேசு கொள் ஸ்ரீ கோராஜ*ராஜ ராஜ*கேஸரி பந்மருக்கு யாண்டு . . . ஆவது

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 698/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1184
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	9/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	திரிபுவன வீரராசேந்திர சோழ தேவர் (மூன்றாம் குலோத்துங்கன்)			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்து புலிப்பாக்கம் என்கிற சோழசிகாமணி சதுர்வேதிமங்கலத்து ‘ஸ்ரீபொன்மலை உடைய நாயனார்’ இறைவன் முன் நெய் விளக்கெரிக்க, இக்கோயில் திருமடைவிளாகத்தில் வசிக்கும் பக்தர் திருவையாறு ஊரைச் சார்ந்த திருச்சிற்றம்பலமுடையான் என்பவன், இக்கோயில் சிவபிராமணன் காக்கும் பிரான்பட்டன் என்பவனிடம் மூன்று பசுக்களைத் தானமாக வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சீவீரஇர-
2. ாசேந்திரசோழ தேவற்கு யாண்டு ௬ வது செயங்கொ-
3. ண்டசோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்து புலி-
4. ப்பாக்கமான சோழசிகாமணி சதுவேதிமங்கல-
5. த்து உடையார் சீபொன்மலை உடைய நாயனா-
6. ற்கு இன்நாயனார் திருமடைவிள[ா]கத்து கும்பிட்டிருக்-
7. கும் பாங்குடையான் திருவைஆறு உடையார் திரு-

8. ச்சிற்றம்பலமுடையாநேன் வைத்த சந்தி விள[க்]கு ஒ-

9. ன்றுக்கு விட்ட பசு மூன்று இப்பசு மூன்றும் கைக்கொ-

10. ண்டு இக்கோயிலில் காணி உடைய காஸ்ய[ப] கோத்திரத்து க-

11. ாக்கும் பிரான் பட்டன் பெருமாள் ஆன காக்கும் பிரான் ப-

12. ட்டநேன் இப்பசு மூன்றும் கைக்கொண்டு சந்திராதி-

13. த்தவரை திருமுன் நெய் திரு[வி]ளக்கு யெரிக்[க] கடவேனாக

14. சி[லா]லேகை பண்ணிக் குடுத்தேன் காஞ்சைக்

15. காக்கு[ம்] பிர[ா]ன் பட்டநேன் சீமாகேஸ்வர ர-

16. க்ஷை

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1230
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	6/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	3
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் கருவறைத் தெற்குக் குமுதம்.

குறிப்புரை : புலிப்பாக்கம் எனும் சோழசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீபொன்மலை உடைய நாயனார் கோயில் இறைவன் முன் சந்தி விளக்கு ஒன்று எரிக்க, இவ்வூரைச் சார்ந்த குரவசேரி ஆட்கொண்டான் என்கிற தொண்டைமண்டலத்து பிள்ளை என்பவன் மூன்று பழங்காசுகளை இக்கோயில் சிவபிராமணன் சந்திரசேகர பட்டன் என்பவனிடம் வழங்கி சந்திவிளக்கு எரிக்க வழிவகைச் செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சீ இராசராச தேவற்கு யாண்டு ௰௪ வது புலிப்பாக்கமான சோழசிகாமணிச் சதுவே॰தி மங்கலத்து ஸ்ரீபொன்மலை உடைய நாயனாற்கு ஒரு சந்திவிளக்கு முட்டாமற் திருமுன் எரிய இவ்வூர் குரவசேரி

2. ஆட்கொண்டானான தொண்டைமண்டலத்துப் பிள்ளை தந்த பழங்காசு ௩ இப்பழங்காசு மூன்றும் இக்கோயில் காணிஉடைய சிவப்பிராமணன் காஞ்சிக்குறிக் கவிசிகன் பொன்மலை உடையானான சந்திரசேகர பட்டனேன் உபையமாக கைக்-

3. கொண்டு இக்காசின் பலிசைக்கு சிலவாக இச்சந்திவிளக்கு ஒன்றும் முட்டாமல் சந்திராதித்தவரை செலுத்தக் கடவேனாகச் சம்மதித்து சிலாலேகை பண்ணிக் குடுத்தேன் சந்திரசேகர பட்டனேன் இவை சந்திரசேகர பட்டன்

4. எழுத்து உ இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 700/2017

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	13
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1230
ஊர்	: புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	: சோழர்	ஊ.க.எண்	:	4
அரசன்	: மூன்றாம் இராசராசன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : புலிப்பாக்கம் என்கிற சோழசிகாமணிச் சதுர்வேதிமங்கலம் ஊரிலுள்ள ஸ்ரீபொன்மலை உடைய நாயனார் கோயில் இறைவன் முன் ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்கு, இவ்வூரைச் சார்ந்த குரவசேரி ஆட்கொண்டான் என்னும் தொண்டைமண்டலப் பிள்ளை என்பவரிடமிருந்து ஒரு பசுவும், நாகு (பெண் கன்று) இரண்டும் இக்கோயில் காணியுடைய காஞ்சிக்குறிக் கவுசிகன் பிச்சன் எனும் திருஞானசம்பந்த பட்டன் என்பவன் பெற்றுக் கொண்டு விளக்கெரிப்பதாக உடன்படிக்கை எழுதிக் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சீஇராஜராஜ தேவ[ர்]க்கு யாண்டு ௰௩ வதுப் புலிப்பாக்கமான சோழசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீபொன்மலை உடைய நாயனார்க்கு திருமுன் எரிய ஒரு சந்தி விளக்கு இவ்வூர் குரவசேரி ஆட்-

2. கொண்டானான தொண்டைமண்டலப் பிள்ளை தந்த பசு ஒன்றும் நாகு இரண்டும் ஆக உரு மூந்றும் இக்கோயில் காணி உடைய சிவப்பிராமணன் காஞ்சிக்குறிக் கவுசிகன் பிச்சனாந திருஞானசம்பந்த பட்டநே[ன்] கைக்கொண்டு இசந்தி விளக்கு ஒன்றும் உபையமாக-

3. ச் சந்திராதித்தவர் வரை செலுத்தக்கடவேனாகச் சம்ம[தி]த்துச் சிலாலேகை பண்ணிக் குடுத்தேன் திருஞானசம்பந்தப் பட்டந்நே[ன்] இவை திருஞானசம்பந்த பட்ட[ன்] எழுத்து இது பன்மாஹேஸ்வர ரக்ஷை உ

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	16
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1232
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	12/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	5
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : புலிப்பாக்கம் என்கிற சோழசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்துப் பொன்மலை உடைய நாயனார் கோயிலில் இரவுச் சந்தி விளக்கெரிக்க மூன்று பசுக்களை, இவ்வூர்க் கணக்கன் தொண்டைமண்டலபதி நாயக வேளான் எனும் நூற்றெண்மப் பிரியன் என்பவன் தானமாக வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சீஇராஜராஜ தேவர்க்கு யாண்டு ய௬ வது புலிப்பாக்கமான சோழசிகாமணிச் சதுர்வேதி மங்கலத்து உடையார் பொன்மலை [உ]டை-

2. ய நாயினாற்கு ஒரு சந்தி விளக்கு முட்டாமல் திருமுன் அரைசிய இவ்வூர் ஊரூஷூ புலிப்பாக்கமுடையான் பூமாங்கழல் பிச்சதேவன் பெரியாழ்வான் பொன்மலை [உடை]யாந் . . . . திருக்கழுக்குன்ற ஹட்டனா[ன] தொண்-

3. டைமண்டலபதி னாயக வேளானான நூற்றெண்மப் பிரியன் விட்ட பசு ௩ இப்படி மூன்றும் இக்கோயிற்காணி உடைய சிவப்பிராமணன் காஞ்சிக்குறிக் கவிசிகன் திருவேகம்பமுடையான் மகன் வேளாநான திருஞானசம்பந்த ப-

4. ட்டநேன் இப்பசு மூன்றுங் கைக்கொண்டு இராசந்தி விளக்கு ஒன்றும் உபையமாக சந்திராதித்தவரை செலுத்தக்கடவேநாக சம்மதித்து சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் திருஞானசம்பந்த பட்டநேன் இவை என் எழுத்து . . . பட்டன் எழுத்து

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	22
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1238
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	4/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	6
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : சோழமண்டலத்து மண்ணி நாட்டு சிற்றேயில் ஊரைச் சார்ந்த அம்பலங்கோயில் கொண்டான் திருநட்டப்பெருமாள் என்பவன் இக்கோயிலில் நடராசர் திருமேனியை எடுப்பித்துள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திக-
2. ள் சீ இராசராச தேவற்கு யாண்டு
3. உ௰உ சோழமண்டலத்து மண்-
4. ணி நாட்டு சிற்றேயிலுடையான் அம்-
5. பலங் கோயில் கொண்டான் திரு-
6. நட்டப் பெருமாள் இன்னாய[னாய]-
7. னாற்கு திருக்கூத்து(ம்)[த்] தம்பிர-
8. னானயும் எழுந்தருளுவி-
9. த்து

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 703/2017

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	22
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1238
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	8/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	7
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : களத்தூர்க் கோட்டத்துப் புலிப்பாக்கம் எனும் சோழசிகாமணிச் சதுர்வேதி மங்கலத்துப் பொன்மலை உடைய நாயனார் கோயில் இறைவனுக்கு ஒரு சந்தி விளக்கு வைக்க பைய்யூர் கோட்டத்து நெய்தல்வாயில் ஊர் தலைவன் செம்பியதரையன் என்பவன் மூன்று பசுக்களைத் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சீ இராசராச
2. தேவற்கு யாண்டு உ௰உ வது களத்தூர்க் கோட்டத்துப் புலிப்-
3. பாக்கமான சோழசிகாமணிச் சதுர்வேதி மங்கலத்து உடைய
4. பொன்மலை உடைய நாயனார்க்கு ஒரு சந்திவிளக்கு முட்டாமற் தி-
5. . . . பைய்யூர் கோட்டத்து நெய்தல்வாயிற்
6. கிழான் திருக்காளத்தியுடையானான
7. செம்பியதரையன் . . பசு மூன்றுங் கைக்கொண்டு
8. . . .
9. . . .

10. இப்பசு மூன்றும் கைக்கொண்டு உபையமாக சந்திவிளக்கு

11. ஒன்றுஞ் சந்திராதித்தவரை செலுத்தக் கடவேனாக சிலாலேகை

12. பண்ணிக் குடுத்தேன் திருவேகம்பமுடையான் தெக்ஷணாமூர்த்-

13. தியான உருத்திர பட்டனேன் இவை உருத்திர பட்டனெழுத்து

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	26
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1242
ஊர்	: புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	7/1932-33
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	: சோழர்	ஊ.க.எண்	:	8
அரசன்	: மூன்றாம் இராசராசன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் கருவறைத் தெற்கு ஜகதி.

குறிப்புரை : புலிப்பாக்கம் என்கிற சோழசிகாமணிச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீபொன்மலை உடையார் கோயில் திருநடைமாளிகையில் இவ்வூரைச் சார்ந்த குரவசேரி சோமிதேவ பட்டன் ஆட்கொண்டான் என்றழைக்கப்படும் தொண்டைமண்டலத்துப் பிள்ளை என்பவன் தனது பெயரால் 'ஆட்கொண்டதேவர்' (சிவலிங்கம்) உருவினை எடுப்பித்துள்ளான். இந்த இறைவனுக்குப் பூசை, அமுது மற்றும் கறியமுது போன்றவற்றிற்காக 10 கழஞ்சுப் பொன்னினை இக்கோயில் சிவப்பிராமணர்களிடம் கொடுத்துள்ளான். இப்பொன்னின் மூலம் தினமும் தூணிப் பதக்கு அளவு திருமஞ்சனமும், திருப்பளித்தாமமும் (இறைவனுக்கு சாத்தும் மாலை), இரண்டு சந்தி விளக்கும், நான்கு நாழி அளவு அரிசி திருவமுதும், கறியமுதும் வைத்து இறைவனுக்கு வழிபாடு செய்வதாக இக்கோயில் சிவப்பிராமணர்கள் உறுதியளித்து உடன்படிக்கை எழுதிக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ *த்ரிபு*வன சக்ரவத்திகள் *ஸ்ரீ ராஜராஜ* தேவற்கு யாண்டு உ௰சு வது புலிப்பாக்கமான சோழசிகாமணி சதுர்வே*தி* மங்கலத்து ஸ்ரீபொன்மலை உடையார் கோயிலில் முப்பது வட்டத்துக் காணி உடைய *சிவப்ராஹ்*மணரோம் இக்கோயிலில் இவ்வூர்க் குரவசேரி ஸோமிதேவ பட்டன் ஆட்கொண்டானா-

2. ன தொண்டைமண்டலத்துப் பிள்ளை திருநடைமாளிகையில் எழுந்தருளுவித்த ஆட்கொண்ட தேவற்க்குப் பூசையும் அமுதுபடியும்

செலுத்தக் . . . மாற்றுச் செம்பொன் பதின்கழஞ்சும் கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு தூணி பதக்குத் திருமஞ்சனமும் உள்பட-

3. த் திருப்பளித்தாமம் இரண்டு சந்தி விளக்கும் செலுத்த இதுபடிக்கு நானாழி அரிசி திருவமுதுபடி கறியமுதும் சந்திராதித்தவரை நாள் தோறும் முட்டாமற் செலுத்தக் கொள்ள கடவோமாக சம்மதித்துச் சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் இக்கோயிலில் முப்பது வட்டத்துக் காணியுடைய *ஶிவ ஬்ராஹ்ம*ணரோ-

4. ம் இப்படிக்கு இவை காஞ்சிக்குறி . . . உருத்திர ஭ட்டன் எழுத்து . . . ஦ெக்ஷிணாமூற்த்தி ஭ட்டன் எழுத்து இவன் தம்பி திருக்கழுக்குன்ற முடையானான திருவேகம்பட ஭ட்டன் எழுத்து

5. இவை இக்குடி பொன்மலையுடையானான . . திவாகர ஭ட்டன் எழுத்து இவன் தம்பி கச்சிகம்பனான திருவையாற்று ஭ட்டன் எழுத்து . . . ஆட்கொண்டதேவ ஭ட்டன் எழுத்து இக்குடி . . . எழுத்து இவை இக்குடி

6. பொன்மலை உடையானான சஹ*ஸ்ரேஶ்வர* ஭ட்டன் எழுத்து இவன் தம்பி பிள்ளையான திருச்சிற்றம்பலநம்பி எழுத்து இவை . . . இவை திவாகர பட்டன் மகன் . . . நாயகபட்டன் எழுத்து . . . இவை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 705/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1248-49
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	11/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	தெலுங்குச் சோழர்	ஊ.க.எண்	:	9
அரசன்	:	வீரகண்டகோபாலன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : களத்தூர் கோட்டத்து வல்லநாட்டு புலிப்பாக்கம் என்றழைக்கப்படும் சோழசிகாமணிச் சதுவேதிமங்கலத்து பொன்மலை உடைய நாயனார் கோயில் இறைவனுக்கும் புலிப்பாக்கத்துக் கணக்கன் (மத்யஸ்தன்) பெரியான் எனும் நாற்பத்ததெண்ணாயிர வேளான் என்பவன், ஒரு சந்தி விளக்கு எரிக்க இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணர்களிடம் மூன்று பசுக்கள் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக்கரவ-
2. த்திகள் ஸ்ரீவீர கண்டகோபால
3. தேவற்கு யாண்டு ரு வது ஐயடி-
4. கொண்டசோழ மண்டலத்து கள-
5. த்தூர் கோட்டத்து வல்ல நாட்டு புலி-
6. ப்பாக்கமான சோழ*ஶிகாமணி ஶ*-
7. துவேதிமங்கலத்து உடையார்
8. பொன்மலை உடைய நாயனார் கோ-

9. யிலில் காணி உடைய சிவப்பிராம-

10. ணரில் காஞ்சிக்குறி பரமேஸ்வ-

11. ர பட்டன் உள்ளிட்டாரும் திருஞானச-

12. ம்பந்த பட்டனும் நாற்பத்தெண்-

13. ணாயிர பட்டனும் இவ்வனைவோம்

14. இவ்வூர் மயூஸ்தல புலிப்பாக்க-

15. முடையாந் உடையான் பெரியா-

16. னான நாற்பத்தெண்ணாயிர வே-

17. ளாந் யின்னாயனாற்கு வைத்த சந்-

18. தி விளக்கு ஒன்றுக்கு இவன் விட்ட

19. பசு மூன்றுங் கைக்கொண்டு ச-

20. ந்திராதித்தவரையும் செலுத்த-

21. க் கடவேன் இவ்[வ]னைவோ-

22. ம் இது ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 706/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1262
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	10
அரசன்	:	முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்			
இடம்	:	வியாக்ரபுரீசுவரர் கோயில் தெற்குச் சுவர்.			

குறிப்புரை : புலிப்பாக்கம் ஊர்க்கணக்கன் நூற்றெண்மப் பிரியன் பூமாங்கழல் பிச்சதேவன் பொன்மலை உடையான் கனகராயன் என்பவன் புலிப்பாக்கம் என்கிற சோளசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்து பொன்மலை உடையார் கோயிலில் இவன் எழுந்தருளித்த சுந்தரபாண்டிய நாயகர்க்கும், நாச்சியார்க்கும் அமுதுபடி மற்றும் சாத்துப்படி வழிபாட்டுத் தேவைகளுக்காகக் குடிநீங்கா தேவதானமாக அளித்து, அந்நிலத்தின் வழியாகக் கொடுக்கப்படும் வரிகளையும் நீக்கி கோயிலுக்குத் தானமாக அளித்துள்ள மன்னனின் ஆணையாகும். மேற்படி, மத்யஸ்தன் கனகராயன் என்பவன் விசயகண்ட கோபலனின் 14-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளான். இக்கல்வெட்டில் இவர் எடுப்பித்துள்ள இறைவனுக்குச் 'சுந்தரபாண்டியர் நாயகர்' என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளதால், இக்கல்வெட்டு சுந்தரபாண்டியன் காலத்தியது என உணரலாம். எனவே விசையகண்டகோபாலனின் காலத்திற்கு சமகாலத்தவனான முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு இது எனலாம்.

கல்வெட்டு :

1. திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகோனேரின்மை கொ-
2. ண்டான் களத்தூர் கோட்டத்துப் புலிப்பாக்கமான சோள-
3. *ஶிகா*மணிச் சதுவேதி மங்கலத்து உடையார் பொன்-
4. மலை உடைய நாயனார் கோயிலில் இவ்வூர் ஶப்தஸ்தாந-

5. புலிப்பாக்கமுடையான் நூற்றெண்மப் பிரியன் பூமா-

6. ங்கழல் பிச்சதேவன் பொன்மலை உடையாந் திருப்-

7. பாலைவனமுடையான் கனகராயன் எழுந்தருளிவி-

8. த்த சுந்தரபாண்டிய நாயகர்க்கும் நாச்சியார்க்கு-

9. ம் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டுவ-

10. னவுக்கு இவ்வூரில் இவன் காணியான நிலத்திலே ஒரு

11. வேலி நிலத்துக்கு கீழ்க் கணக்கனில் வடபத்தியும்

12. இரண்டில் கீழ்பாற் புலமும் நடுவில் கணக்கன் வடபாற்

13. தென்பாதியும் பொரும் சிகாணன் ஏறிந சோடியும் கடமை-

14. யும் சாழங் குண்டிலும் மத்திகப்பட்டி வடபாதியும் இத்தடியும்

15. பொன்வரி நாட்டுவரி காசுகடமை நெல்கடமை கமுகுகடமை-

16. யும் அந்தராயங்கள் உட்பட பன்னிரண்டாவது அற்பசி மாத முதல்

17. குடிநீங்கா தேவதாநமாகவும் . . . முருங்கெ

18. வேண்டும்படியாக கொள்ளவும் இந்நிலம் நான்

19. திருச்சூலஸ்த்தாபனமும் பண்ணிச் சந்திராதி-

20. த்தவற் செல்வதாகவும் இவ்வோலை பிடிபாடா-

21. க கொண்டு ஒழுகிலும் வரியிலும் கழி[த்]து க-

22. ல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்து அ

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 - நூற்.
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	11
அரசன்	:	சடையவர்மன் சுந்தரபாண்டியன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் தெற்குப் பட்டி.

குறிப்புரை : புலிப்பாக்கம் என்கிற சோழசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் பொன்மலை உடைய நாயனார் கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக நிலம் வழங்கியுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி[ஸ்ரீ] கோற்சடபன்மர[ா]ன திரிபுவனச் ச[க்]கரவ[த்]திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்[கு] யாண்டு . . . மணிச் சதுவே-தி மங்கலத்து மஹாசபையோம் உடையார் பொன்மலை உடைய நாயனார் திருநாமத்துக்காணிக்கும் உள்நிலங்களந்தபடியே . . .

2. களமும் கொல்லை நிலமும் நாற்பாற் எல்லைக்கு உள்பட்ட நிலம் நாயனார் திருநா . . . ரை இட்டு . . . வோமாக எம் நெடுநாபாட்டம் ஆறு நாப்பாட்டமான ஏரிப்பேறு இவ்வமுககாடமலே கொள்ள இப்படி சம்ம[தி]த்து பிரமாணக் கச்சாத்து

3. பண்ணிக்குடுத்தோம் மஹாசபையே[ா]ம் கந்தாடை கேசவ பட்டன் எழு[த்]து காஷ்யவ . . . . ஆழ்வான் பட்டன் எழுத்து அழகிய மணவாள பட்டன் எழுத்து சத்துருக்க பட்டன் எழுத்[து]

4. மூத்தசோமதேவ பட்டன் எழு[த்]து வட்டபக்[க] நாராயணன் எழு[த்]து கந்தாடை நாரரும் . . . எழு[த்]து ஆளு[ம்]பிரான் பட்டன் எழு[த்]து லசபாதி பட்டன் எழு[த்]து வலவீரஉத்தப்பட்டன் எழு[த்]து

5. வங்கிபுறத்து கேசவ பட்டன் மக்காவிசேரி கேசவபட்டன் எழு[த்]து காஹ சே . . . எழுத்து . . . . சீராம பட்டன் எழுத்து . . . நந்திகுமாரப்பட்டன் எழு[த்]து மாரிச பட்ட[ன்] எழுத்து தாமோதர பட்டன்

6. புலிப்பாக்கமுடையா[ன்] எழுத்து

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1264
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	10/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	தெலுங்குச் சோழர்	ஊ.க.எண்	:	12
அரசன்	:	விசய கண்டகோபாலன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : புலிப்பாக்கம் என்கிற சோழசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்து பொன்மலை உடைய நாயனார் கோயிலைச் சார்ந்த பிள்ளையார் முதலிகளில் இளவரசனின் படைத் தலைவன் ஒருவன் தான் எடுப்பித்த துர்க்கை திருமேனிக்குச் சந்திவிளக்கு எரிக்க இக்கோயிலில் காணியுடைய திருஞானசம்பந்தன் என்னும் சிவபிராமணனிடம் மூன்று பசுக்கள் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள்
2. விஜயகண்ட கோபால தேவற்கு யாண்டு ௰-
3. ச வது புலிப்பாக்கமான சோழசிகாமணி சதுவே-
4. தி மங்கலத்து உடையார் பொன்மலை உடைய னா-
5. யனார் கோயில் பிள்ளையார் முதலிகளில் மருதந்நா-
6. ன நந்திபொன்னனான. . . எழுந்தருளிவித்த து[க்]்கை-
7. கயாற்கு வைத்த சன்தி விளக்குக்கு விட்ட பசு
8. ௩ இப்பசு மூ[ன்]றும் இக்கோயில் காணி உடைய

9. காஞ்சிகுறி கவிசியந் திருவையாறுடையா-

10. னான திருஞாநசம்பன்தனேன் இப்பசு மூன்-

11. றும் கைக்கொண்டு ஒரு சந்தி விள-

12. க்கு எரிக்கக் கடவேனாக சிலாலேகை

13. பண்ணிகுடுத்தேந் திருவையாறுடை-

14. யான் ஆன திருஞாநசம்பந்த பட்டநே-

15. ந் இது *ஸ்ரீமாஹேஶ்வர ரக்ஷை*

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1264
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	5/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	தெலுங்குச் சோழர்	ஊ.க.எண்	:	13
அரசன்	:	விசையகண்ட கோபாலன்			

இடம் : வியாக்ரபுரீசுவரர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : களத்தூர் கோட்டத்துப் புலிப்பாக்கம் எனும் சோழசிகாமணிச் சதுர்வேதி மங்கலத்து பொன்மலை உடைய நாயனார் கோயிலில் ஒரு சந்தி விளக்கெரிக்க இவ்வூர் மத்யஸ்தன் (கணக்கன்) பூமாங்கழல் பிச்சதேவன் என்கிற கனகராயன் என்பவன் மூன்று பசுக்களைத் தானமாக வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவ-
2. த்திகள் சிவிசையகண்ட கோபால
3. தேவற்கு யாண்டு ൰௪ வது களத்தூர்-
4. க் கோட்டத்துப் புலிப்பாக்கமா-
5. ன சோளசிகாமணிச் சதுவே᳚தி
6. மங்கலத்து உடையார் பொன்ம-
7. லை உடைய நாயனார்க்கு இ[வ்]வூர் உ௰ஸ்த-
8. ன் பூமாங்கழல் பிச்சதேவன் பொன்-
9. மலை உடையான் திருப்பாலைவனமுடை-

10. டயானான கனகராயனேன் வைத்த சன்-

11. தி விளக்கு ஒன்றுக்கு விட்டபசு ௩ இப்பசு

12. மூன்றும் இக்கோயில் காணி உடைய சி-

13. வப் பிராமணன் காஞ்சிக்குறிக் கவிசிகனான

14. சொக்கப்பிள்ளையான பரமே*ஸ்வர* ஹட்ட-

15. னேன் கைக்கொண்டு இச்சந்தி விளக்-

16. குச் சன்திராதித்தவரை எரிக்க கடவேன்

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	கலி 4375 (4975)
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1874
ஊர்	:	புலிப்பாக்கம்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	14
அரசன்	:	-			

இடம் : வியாக்ரபுலிசுவரர் கோயில் அருகில் நடப்பட்டுள்ள கல்.

குறிப்புரை : திருவேற்காடு இராமலிங்க முதலியார் குமாரர் சுப்பறாய முதலியார் இக்கோயிலினை திருப்பணி செய்துள்ளார். மேலும், பெரியபுராணத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள 63 நாயன்மார்களில் ஒருவரான முருகநாயனாரின் வம்சத்தினர் என்று இவர்கள் உரிமை கொள்கின்றனர். இவர்கள் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கலிவருடம் 4375 தவறானதாகும். இவ்வருடம் 4975 ஆக இருந்திடவேண்டும்.

கல்வெட்டு :

1. கங்கை குலாதி துளுவ சிகாமணி கில்லியாத்திரி மகா-
2. ரிஷி கோத்திரத்தில் பேறு பெற்ற அறுபத்து மூன்று சிவனடியா-
3. ரில் ஒருவரான பெரிய புராணத்தில் விவரித்திருக்கும் முறு-
4. க நாயனார் வங்கிஷந் திருவேற்காடு இராமலிங்க முதலியா-
5. ர் குமாரருந் கனம் பொருந்திய துரைத் தனத்தாரினும் மதியா-
6. ல் தமிழ் விளக்கம் மானிடத்தொழில் விளக்கம் உண்டாக்கியவருமான

திருவேற்காடு
சுப்பறாய முதலியாரால் இந்த ஆலயம்
சீராக்காலச்சுது
யுகலநான காலத்தில் ஆண்டு நாலாயிரத்து
முன்னூத்தெழுபத்தஞ்சு

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	: செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1082
ஊர்	: திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	363/1911
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	: தமிழ்			
அரசு	: சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபம் வடக்கு குமுதம்.

குறிப்புரை : வல்ல நாட்டு நென்மலி ஊரிலுள்ள நஞ்சை புஞ்சை நிலங்கள் சிலவற்றினைச் சேர்த்து 'குலோத்துங்கசோழன் திருநீற்றுச்சோழ நல்லூர்' என்னும் பெயரிட்டு புதிய ஊர் ஒன்றினை உருவாக்கி திருவாலக்கோயில் மகாதேவர் கோயில் இறைவன் வழிபாட்டுக்காக மன்னன் குலோத்துங்கன் வழங்கிய நேரடி ஆணையாகும். இவ்வாணையை தொண்டைமான் என்னும் குறுநிலத் தலைவன் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்ஸ்ரீ* திரிபுவன சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் தொண்டை மானாற்க்கு ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டுக் களத்தூர்த் திருவாலக்கோயிலுடைய *மஹா*தேவற்கு நிமந்த . . . ட்டுக்கு வேண்டுவனத்துக்கு இக்கோட்டத்து வல்ல நாட்டு நென்மலி இரு பூவிளை நிலம் எட்டேயேழுமாக்காணியும் ஒரு பூவிளை நிலம் பதினாரையே யிரண்டு மா முக்காணியும் ஆக நீர் நிலம் இருபத்தைஞ்சும் ஆக ஒரு பூ

2. நிலம் உட்பட நிலம் முப்பத்து மூன்றேயேழு மாக்காணியினால் வேலியொன்றும் நெல்லு முப்பத்தைங் கலமாக நெல்லு ஆயிரத்தொரு நூற்றறுபத்தேழு கலனே யிருதூணி யிரு நாழியும் புஞ்சை நிலம் ஆறரையே மூன்று மா முக்காணியினால் வேலி யொன்றுக்கு நெல்லு இரு கலமாக

நெல்லுப்பதின் முக்கலனே தூணி நானாழியும் ஆகப் புஞ்சை . . . . நாற்பதேயொரு மாவினால் வரிசைப்படி நெல்லு ஆயிரத்தொரு நூற்றெண்பத்தொரு கலனே யறு நாழியும் யாண்டு

3. பன்னிரண்டாவது நாள் இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று முதல் தேவதான இறையிலியாக இட்டுப் பழம் பேர் தவிர்த்துக் குலோத்துங்க சோழன் திருநீற்றுச்சோழ நல்லூர் என்று பேரிட்டு வரியிலாரும் வரிக்கூறு செய்வார்களும் எழுத்திட வரிபொா[த்]தக காட்டச் சொன்னோம் இவ்வூர் பன்னிரண்டாவது நாள் இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று முதல் தேவற்குத் தேவதான இறையிலியாக இறுக்கப் பண்ணுக எழுதினான் திருமந்திர ஓலை அனபாய மூவேந்த வேளான்

4. இவை மலையப்பராஜன் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 712/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1082
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	359/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு ஜகதி.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துக் களத்தூர் திருவாலக் கோயிலுடைய மகாதேவர் இறைவன் வழிபாட்டிற்காக, இக்கோட்டத்து உழலூர் என்கிற இராசராசநல்லூர் ஊரின் புற ஊரான அரும்பாக்கம் ஊரின் நிலங்களிலிருந்து குறிப்பிட்ட நிலங்களைப் பிரித்து 'அநபாயநல்லூர்' என்ற புதிய ஊரினை உருவாக்கி, மன்னன் தனது பெயரினைச் சூட்டி கோயிலுக்குத் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகோனேரிமேல் கொண்டானுக்கு ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர்த் திருவாலக்கோயிலுடைய [ம]*ஹாதேவற்கு நிமந்தக்கட்டுக்கு வேண்டுவனத்துக்கு இக்கே-

2. காட்டத்து உழலூரான *ஸஉஸஉ* நல்லூர்* பிறந்த அரும்பாக்கம் ஒரு பூவிளை நிலம் இருபத்தாறரைக்கு வேலி ஒன்றுக்கு நெல்லு ஐம்பதின் கலமாக நெல்லு ஆ[யிர*]த்து முன்னூற்று இருபத்தைங்கலம் புஞ்சை நிலம் ஆற-

3. ரையே அரைக்காணிக்கு வேலி ஒன்றுக்கு நெல்லு இருகலமாக நெல்லு பதின் முக்கலனே முக்குறுணி ஆக புஞ்சை நிலமுட்பட நில முப்பத்து இரண்டரையே அரைக்காணிக்கு வரிசைப்படி நெல்லு ஆயிரத்து முன்னூற்று ஐம்ப-

---

* இராசராச நல்லூர் - என்று வாசிக்க

4. த்தேழு கலனே முக்குறுணி இத்தேவற்கு தேவதான இறையிலியாக இட்டு பன்னிரண்டாவது நாள் இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று முதல் இத்தேவற்கு தேவதான இறையிலியாக இட்டு பன்னிரண்டாவது நாள் இரு நூற்று தொ-

5. ண்ணூற்று மூன்று முதல் வரியிலார்க்கு[ம்] வரிக்கூறு செய்வார்களுக்குஞ் சொல்லி பழம்பேர் தவி[ர்]த்து அனபாய நல்லூ[ர்*] என்று பேர் இட்டு சொன்னோம் எழுதினேன் திருமந்திரஓலை எழுத்து அனபாய மூவேந்த வேளான் இவை மலைஅப்பிராஜன் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 713/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1127
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	360/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	3
அரசன்	:	விக்கிரமசோழன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு ஜகதி.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துக் களத்தூர் திருவாலக்கோயில் இறைவனுக்கு இவ்வூரிலுள்ள சங்கரப்பாண்டியான் (எண்ணெய் வணிகர்) கொள்ளந்தை தேவன் உத்திப்பொன் என்பவன் ஒரு நந்தாவிளக்கு வைத்துள்ளான். இவ்விளக்கினை எரிக்கும் பொறுப்பு கோமடத்து சைலராசி பண்டிதர் மற்றும் இம்மடத்தைச் சார்ந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு கூ ஆவது ஜயங்கொண்ட சோழ
2. மண்டலத்து களத்தூர் கோட்டத்து களத்தூர் திருவாலக்கோயில் தேவற்கு
3. களத்தூரில் இருக்கும் சங்கரப்பாடியான் கொள்ளந்தை தேவன் உத்திப் பொந் வை-
4. த்த திருநந்தாவிளக்கு க இவ்விளக்கு ஒன்றும் இக்கோயில் காணி உடையார் செலுத்-
5. தக் கடவார்களாக கோமடத்து சைலராசி பண்டிதரும் மடமுடையார்களு-
6. ம் செலுத்த விட்டேந் தேவன் உத்திப்பொன்நேந்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 714/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1128
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	358/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	4
அரசன்	:	விக்கிரம சோழன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு ஜகதி.

குறிப்புரை : களத்தூர், கொடுவூர், பட்டினம் ஆகிய ஊர்களைச் சார்ந்த சிலர் திருவாலக்கோயிலில் உள்ள சந்திரசேகர் திருமேனி வழிபாட்டிற்காக சிறுதண்டலத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட நிலத்தினை விலைக்கு வாங்கி கோயிலுக்குக் கொடையளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்தி]*ஸ்ரீ விக்கிரமசோழ ஢ேவற்கு யா*[ண்]டு ய பத்தாவது ஜெயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூ-
2. ர்க் கோட்டத்து களத்தூர் நாட்டு களத்தூர் தமிழதரையந் அம்பி நாடுடையானும் நற்சாத்த வடுகன் வே-
3. ம்படி சாத்தையும் நற்சாத்த வடுகன் உத்தமத்தடிகள் திரிச்சிற்றம்பல முடையானும் செம்பூர்க் கோட்ட-
4. த்து பட்டின நாட்டுக் கொடுவூர் கிழவந் குணப்பெருமான் காணி காணும் பட்டினத்து பட்டினமுழான் அரை-
5. யந் ஆதிநாதனும் நிலவிலை ஆவணக் கையெழுத்து களத்தூர் திருவாலக் கோயிற் சந்திரசேகர ஢ேவர்க்கு எங்க[ள்] கா-
6. ணியான சிறுதண்டலத்தில் இத்தேவர்க்கு தேவதானமாக நாங்கள் சேக்கிழான் மகரிகாமனிடையில் விலை கொண்-
7. டு விட்ட நிலமாவது மேல்பாற்கெல்லை கருணாகர வதிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை மும்முடிசோழ வா[ய்]க்காலு-
8. க் காலுக்கு தெற்கும் கீழ்பாற்கெல்லை கீழைத்தடாக்கு மேற்கும் தென்பாற்கெல்லை . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 715/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	4
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1150
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	355/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	5
அரசன்	:	இரண்டாம் இராசராசன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபம் தெற்கு குமுதம்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து புலியூர்க் கோட்டத்து திருமயிலாப்பில் ஊரைச் சார்ந்த வியாபாரி வடுக வாணிகன் சேந்தன் வடுகநாதன் என்பவன் களத்தூர்க் கோட்டத்து களத்தூர் ஊர் திருவாலக்கோயில் மகாதேவர் இறைவனுக்கு ஒரு சந்தி விளக்கு வைத்துள்ளான். காளாமுகன் கோமடத்தைச் சார்ந்த ஞானராசி பண்டிதன், சயிலராசி பண்டிதன் ஆகிய இருவரும் இவ்விளக்கினைத் தொடர்ந்து எரிப்பதாக பொறுப்பேற்றுக் கொண்டனர்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* *திரிபுவ*னச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ ஷேவற்கு யாண்டு நாலாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்-
2. க் கோட்டத்துக் களத்தூர்த் திருவாலக்கோயிலுடைய *மஹா*ஷேவற்கு இம்மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துத் திருமயிலாப்பிலிருக்கும் வி-
3. யாபாரி அத்தி பளுக்கு வாணிகன் வடுக வாணிகன் சேன்தந் வடுகநாதன் வைத்த ஸந்தி விளக்கு ஒன்று இவ்விளக்கொன்றும் இக்கோயிலிற் காணி-
4. யுடைய காளாமுகன் *ஸோ*மடத்து ஞானராசி பண்டிதனுங் *ஸோ*மடத்து *ஸயி*லராசி பண்டிதனும் இவ்விருவோமும் சந்திராதித்தவரை செலுத்-
5. தக்கடவோமாநோம் இவ்விளக்கெரி[க்]கைக்கு இட்ட தாராக் குத்து விளக்கொன்று இடை அம்பதின் பலம் இக்காணி கைக்கொண்டோரே செலு

. .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 716/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1205
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	357/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	6
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் தெற்கு ஜகதி.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து ஊற்றூர் ஊரில் வாழும் கொற்றந்தை பெருமானய்யகமுடையான் என்பான், தனது மகள் நங்கை ஆண்டாள் என்பவளின் நலன் வேண்டி இம்மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து களத்தூர் திருவாலக்கோயில் உடைய மகாதேவர் கோயிலில் ஒரு சந்தி விளக்கெரிக்க நான்கு பசுக்கள் கோயிலுக்கு அளித்துள்ளான். காளாமுகன் கோமடத்தைச் சார்ந்த ஞானராசி பண்டிதன், சயிலராசி பண்டிதன் ஆகிய இருவரும் விளக்கெரிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய சிரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு உ௰எ ஜயங்கொண்டசோ-
2. ழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் திருவாலக் கோயிலுடைய *மஹா*தேவற்கு இம்மண்டலத் தூற்றுக்காட்டுக் கோட்டத் தூற்றூர்க் கொற்றந்தை பெருமா-
3. னாய்யனக முடையானேன் மகள் நங்கை யாண்டாளுக்கு நன்றாக இம்*மஹா*தேவற்கு வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு விட்ட பசு ௪ இப்பசு நாலும் இக்கோயிலிற் காணியுடைய காளா-
4. முகன் கோமடத்துச் சயிலராசி பண்டிதனும் ஞானராசி பண்டிதனும் இவ்விளக்குச் சந்திராதித்தவரை எரிக்கக் கடவோமாகக் கைக்கொண்டோம் *ஸ்ரீமாஹேஶ்வர ரக்ஷை*

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1161
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	352/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	7
அரசன்	:	இரண்டாம் இராஜராஜன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபம் தெற்கு குமுதம்.

குறிப்புரை : வெண்குன்றக் கோட்டத்து குவளை என்னும் ஊரைச் சார்ந்த பாரசிவன் தழுவக்குழைந்தான் ஆளுடையான் என்பவன் ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்துக் களத்தூர் ஊரில் உள்ள திருவாலக் கோயிலுடைய மகாதேவர் கோயிலில் வைத்த சந்தி விளக்கினை இக்கோயில் காளாமுகன் மடத்தைச் சார்ந்த ஞானராசி பண்டிதன், சயிலராசி பண்டிதன் ஆகிய இருவரும் இவ்விளக்கினை எரிப்பதாகப் பொறுப்பேற்றுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு பதின் அஞ்சாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்தில் களத்தூர் கோட்டத்-
2. துக் களத்தூர் திருவாலக்கோயிலுடைய மஹாதேவற்கு இம்மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்துக் குவளையிற் பாரசிவந் தழுவக்குழைந்தான் ஆ-
3. ளுடையான் வைத்த ஸந்தி விளக்கு ஒன்று இவ்விளக்கு ஒன்றும் இக்கோயில் காணி உடைய காளாமுகன் கோமடத்து ஞாநராசி பண்டிதனுஞ் ச-
4. யிலராசி பண்டிதனுஞ் சந்திராதித்தவரை செலுத்தக் கடவோமாநோம் இக்காணி கைக்கொண்டார் செலுத்துக இது மஹாயேசுர இரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 718/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	26
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1242
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	365/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	8
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் கிழக்குச்சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து களத்தூர் நாட்டுக் களத்தூர் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்கு வடக்கே உள்ள திருமலையில் இரவு நேரத்தில் விளக்கு எரிக்கவும், இதற்கு தினம் மூன்று நாழி எண்ணெய் குடுக்கவும், மலை மேல் எண்ணெய் இட்டு விளக்கெரிக்கின்ற நபருக்குக் தினக்கூலியாக குறுணி நெல்லும் வழங்கிடவும் கரிகாலசோழத் தமிழதரையன் என்பவன் 56 குழி நிலம் தானமாக வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ*ராஜராஜ* தேவற்கு யாண்டு இருபத்தாறாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துக் களத்தூர் நாட்டுக் களத்தூர் உடையார் திருவாலக் கோயிலுடைய நாயனார் கோயிலுக்கு வடக்கில் திருமலை மேல்
2. . . . . விளக்கு இடுவதாக . . . . மேல் தேவன் உத்தமன் கரிகால சோழத் தமிழதரையனேன் வைத்த கீழ் கழனியில் என[க்]கருளின ஒன்பதாங் கண்ணாற்றுக் குண்டிலு குழி ருயசு இக்குழி ஐம்பத்தாறும் காணிபுரம் இறையிலியுமாக விட்டேன் இந்நிலம் இத்தி
3. . . . . ய நாயனார் ஸ்ரீபண்[டாரத்தி*] . . . லைத் திருவிளக்குக்கும் ரா[த்]திரிக்கு முன்னாழி எண்ணையும் ஏறி இடுகிற ஆளுக்கு கூலிக்கு குறுணி நெல்லும் குடுத்து பண்டாரத்தார் இத்திருமலைத் திருவிளக்கு சந்திராதித்தவரை இடுவிப்பார்களாக இந்நிலம் காணியும் இறை
4. . . . . . . புண்டரிகன் . . . . . . கரிகாலசோழத் தமிழதரையனேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 719/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1340
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	361/1911
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சம்புவராயர்	ஊ.க.எண்	:	9
அரசன்	:	இராசநாராயணன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபம் வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து களத்தூர் நாட்டு களத்தூர் உடையார் திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலில் உள்ள கைக்கோளரில் அம்பலவர் வேணாவுடையார் தேவாண்டை காங்கராயன் என்பவரிடமிருந்து, இக்கோயிலில் அரை திருநந்தா விளக்கு எரிக்க வேண்டி, இக்கோயில் மன்றாடி எழும்போதககோன் 15 பசுக்களைப் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்க சம்மதித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி
2. ஸ்ரீ சகலலோகச் சக்கரவத்தி ஸ்ரீஇராசனாராயணன் சம்புவராயர்க்கு யாண்டு ௩ வது ஆவணி ம-
3. ாதம் ஜயங்கொ[ண்]*டசோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்து களத்தூர் நாட்டு களத்தூரில் உடை-
4. யார் திருவால கோயிலுடைய நாயனார் கோயில் கைக்கோளரில் அம்பலவர் வேனாவுடையார் தே-
5. வாண்டை காங்கயராயன்னேன் இந்நாயனார்க்கு னான் வைத்த திருநந்தாவிளக்கு அரைக்கு நான் வி[ட்*]ட பசு பதின்ஐ-
6. ஞ்சும் இக்கோயில் திருவிளக்கு[க்]குடி மன்றாடி தளியக்கோன் மகன் எழும்போதக கோனேன் இந்த ப[த்]தின் ஐஞ்-

7. சும் இன்னாள் முதல் கைக்கொண்டு *சந்த்ராதித்த*வரை நாள் ஒன்றுக்கு இராசகேசரி நாழியால் ஆழாக்கு நெய் அள-

8. க்க கடவேன் தளியக்கோன் எழும்போதக கோனேன் இது *ஸ்ரீமாஹேச்வர ரக்ஷை* உ

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1340
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	354/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சம்புவராயர்	ஊ.க.எண்	:	10
அரசன்	:	இராசநாராயணன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபம் தெற்கு குமுதம்.

குறிப்புரை : மல்லிநாதன் இராசநாராயண சம்புவராயன், களத்தூர்க் கோட்டத்து களத்தூர் ஊரிலுள்ள உடையார் திருவாலக்கோயில் உடைய நாயனார் கோயிலில் விளக்கெரிக்க 15 பசுக்களை இவ்வூர் மல்லன் மகன் எழும்போதககோன் என்பவனிடம் அளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி[ஸ்ரீ] இராசநாராயண சம்புவராயற்க்கு மூன்றாவது களத்தூர் கோட்டத்து களத்தூர் உடையார் திருவாலகோயில் உடைய நாயனார்க்கு சுரபியாக

2. மல்லிநாதன் இராசநாராயண சம்புவராயனேன் மல்லன் மகன் எழும்போதககோன் வசமாக விட்ட பசு பதினஞ்சும் சந்திராதித்தவரை செலு-

3. த்த கடவது ஆக கை[க்]கொண்டேன் மல்லன் மகன் எழும்போத[க] கோனேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 721/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1347
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	362/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சம்புவராயர்	ஊ.க.எண்	:	11
அரசன்	:	இராசநாராயணன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபம் வடக்குச் சுவர்.

குறிப்புரை : இக்கோயில் கைக்கோளர்களில் அம்பலவர் வேணாவுடையான் தேவாண்டை காங்கயராயர் என்பவருக்கு களத்தூர்ப் பற்று நாட்டவர்கள் காணியாக வழங்கிய களத்தூர் ஊரின் புற ஊரான நரியன்சேரி என்ற புண்டரிகநல்லூர் ஊரினை சர்வமானியமாக வழங்கியுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராசனாராயணன் சம்புவராயற்கு . . . . .
2. ய வது . . யக்களத்தூர் கோட்டத்து களத்தூர் நாட்டு களத்தூரில் உள்
3. இக்கோயில் உடைய னாயனார் கோயில் கைக்கோளரில் அம்பலவர் வேணாவு-
4. டையான் தேவாண்டை காங்கயராயர்க்கு களத்தூர் பற்று நாட்டார்ரோம்
5. இவர் களத்தூர் ஊரவர் பக்கல் காணி ஆக கொண்டு உடைய களத்தூர் பிடா-
6. கையில் நரியன்சேரியான புண்டரிக நல்லூர் இவர்க்கு சந்ராதித்தவரையும்
7. ஸர்வமாந்ய இறையிலி ஆக குடுத்தோம் இவ்வூர் தரப்படி பொன் பதின் மூன்-

8. றே மூன்று மாவும் பத்தாவதுக்கு எதிராமாண்டு முதல்லுக்கு களத்தூர் வகையி-

9. ல் கோவையில்லும் கழித்து நாட்டில்லே களத்தூர் பற்றில் இவூர் கழிந்த காணி கோ-

10. வையிலே ஏற்றிக் கொண்டோம் இப்படிக்கு இவர் தரம் சந்த்ராதித்தவரையும் ஸர்வமாந்ய

11. இறையிலியாக கை[க்]கொண்டு நடத்தி கொ[ள்]ளவும் பார்ப்பது இப்படிக்கு இவை தம்மு

12. அரையன் எழுத்து இவை கேசவ பெருமாள் எழுத்து இவை உடையார் எழுத்து இவைக்கு

13. . . குப்பை அறமளதான் எழுத்து இப்படிக்கு வயலூர் கிழவன் எழுத்து இப்படிக்கு இவை கருங்-

14. குப்பை வயல் நாட்டு அரையன் எழுத்து இப்படிக்கு இவை சேக்கிழான் எழுத்து இப்படிக்கு இவை

15. குண்டை கிழான் ஆக கொண்டநாயகன் எழுத்து இவை செல்கலுடையான் எழுத்து இப்படிக்கு இவை

16. குலோத்துங்கசோழ வேளான் எழுத்து இவை தென்னவதரையன் எழுத்து இவை பூதூரழான் கொங்கரா-

17. யன் எழுத்து இவை நெருமூர் கிழவன் ஆழ்வான் பிள்ளை எழுத்து இவை பூதூரழான் விசையரான் எழுத்து இ-

18. வை கழுக்குன்ற வாணர் எழுத்து இவை தாழம்பாக்க கிழான் உலகுதொழ நின்றான் எழுத்து இப்படிக்கு

19. இவை திருக்கழுக்குன்றம் உடையார் எழுத்து இவை அழகிய மாதாண்டார் எழுத்து இவை சிங்கர் எழுத்து

20. இவை விக்ரமசோழ தமிழதரையன் எழுத்து இவை திருவால கோயில் உடையார் எழுத்து

21. இவை முடிகொண்டசோழ தமிழதரையன் எழுத்து இவை ஏகாம்பர தேவர் எழுத்து

22. இவை நெருமூர் கிழவன் எழுத்து இவை திருபுவனவீர தமிழதரையன் எழுத்து இவை தழுவகு-

23. ழைன்தா[ன்] எழுத்து இவை கருங்குப்பையார் எழுத்து இவை மழவதரைய வாணவராயன் எழுத்து

24. இவை பல்லவராயன் எழுத்து இவை திருவேகம்ப உடையான் எழுத்து இவை பெரியனாயந்

25. எழுத்து குளத்தூழான் இபரதவர் எழுத்து இவை இராசனாராயண தமிழ தரையன் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 722/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1349
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	364/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சம்புவராயர்	ஊ.க.எண்	:	12
அரசன்	:	இராசநாராயணன்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபம் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துக் களத்தூர் திருவாலக்கோயிலின் திருமடைவிளாகமும் அதைச் சூழ்ந்திருந்த நிலமும், இங்கு குடியேறும் குடிகளும் அரசுக்கு செலுத்தப்படும் வரிகளை நீக்கி சர்வமானியமாக கோயில் தானத்தாருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வரிகள் அனைத்தையும் கோயில் பூசைக்கும், திருப்பணிக்கும் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலலோக சக்கரவத்திகள் ஸ்ரீஇராசநாராயணன் சம்புவராயற்-
2. க்கு யாண்டு ௰௨ வது ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர் கோட்டத்-
3. து களத்தூர் திருவாலகோயில் உடைய னாயநார் கோஇல் தாநத்தாற்க்கு திருவா-
4. ல கோஇல் உடைய நாயனார் திருமடைவிளாகமும் திருவிருப்பு சூழன்த திருநாமத்தியில் காணி
5. நாற்பாற் கெல்லைக்கு உள்ளிட்ட நஞ்சை புஞ்சை . . . . புறகலனையும் மற்றும் பல பட்டடையும் ஏறும் கு[டி*]-
6. யும் ஸவ-மாநியம் ஆகவும் சன்திராதித்தவரை ஆக பூசை திருப்பணி தாழ்வற நடக்கும்படி-
7. யாக குடுத்தோம் இப்படி செய்வதே உ

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1286
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1364
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	74/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊ.க.எண்	:	13
அரசன்	:	வீரபொக்கண்ண உடையார்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் வெளிமதில் சுவர்.

குறிப்புரை : துண்டுக்கல்வெட்டுகளாக உள்ளன. கம்பண உடையார் குமாரன் விருப்பண்ண உடையார் திருவாலக்கோயிலுக்கு சில தானங்கள் வழங்கியுள்ளார். மேலும், லிங்கராயர் என்பவர் இக்கோயிலில் பங்குனி மாதம் இறைவனுக்குப் பூசை மற்றும் கோயில் திருப்பணிக்காகவும் சில தானங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. . . . *ஸகாவூ* ஆயிரத்து இருநூற்று எண்பத்து ஆறாவது . . .
2. ஂவசுஸரத்து மீந நாயற்று பூறுவ பக்ஷத்து திங்கள்கிழமைய்யும் . . .
3. காண்டசோழ மண்டலத்து களத்தூற் கோட்டத்து களத்தூர் நாட்டு
4. ய நாயனார்க்கு இவருஷம் பங்குனி மாதம் மூன்றாம் தியதி முதல் . . .
5. ன ஸ்ரீவீரபொக்கண்ண உடையா[ர்]க்கு . . .
6. லிங்கராயரு இன்னாயனார்க்கு பூசைக்கும் திருப்பணிக்கும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 724/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1320
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1398
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	353/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	விஜயநகரர்	ஊ.க.எண்	:	14
அரசன்	:	விருப்பண்ண உடையார்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து களத்தூர் நாட்டு களத்தூர் ஊரில் உள்ள திருவாலக்கோயில் உடைய நாயனார் கோயிலுக்குப் பூசை மற்றும் கோயில் திருப்பணிக்காக வேண்டி உத்ததமசோழ விளாகம் என்னும் நிலத்தினை வீரகம்பண உடையார் தானமளித்துள்ளார். அந்நிலத்தில் புண்டரிகன் இராசேந்திர சோழ தமிழதரையன் என்பவன் திருநாமத்துக்காணியாக வழங்கிய நிலம் போக மீதி நிலத்தினை விலைக்கு வாங்கி இக்கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக இவ்வூரைச் சார்ந்த கைக்கோள முதலி திருச்சூலம் உடையான் வேணாவுடையான் வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திபுவனச்சகூவத்தி ஸ்ரீவீரஅரியண உடையா[ர்] குமாரர் விருப்பண உடையா-
2. ற்க்குச் செல்லா நின்ற சகாவதம் ஆயிரத்து முன்னூற்று இருபதின் மேல் செல்ல-
3. ா நின்ற மகர நாயற்று அபரபக்ஷத்து வுாயமையும் வியாழக்கிழமையும் பெற்ற
4. மகத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூற் கோட்டத்து களத்தூர்
5. நாட்டு களத்தூரில் உடையார் திருவாலக்கோயில் உடைய நாயனாற்க்கு ஸ்ரீ-

6. வீரகம்பன உடையார் பூசைக்கும் திருப்பணிக்கும் விட்ட உத்தம-

7. சோழ விளாகத்தில் கட்டளை இருந்த குடிநீங்[கா] காணி நல் னால் ரு௨ யகூருல்

8. புண்டரிகன் இராஜேந்திரசோழத் தமிழதரையன் ஆட்கொண்டான் மண்டல புருஷன்

9. திருநாமத்துக்காணியாக உழகம் பண்ணிந ௫௨ தஅாஎயரு நீக்கி இக்கோயில் கைக்-

10. கோள முதலிகளில் திருச்சூலம் உடையான் வேணாவுடையான் இவ்வூர் புணடரிக

11. தமிழதரையர் உள்ளிட்டார் வீரஇராசேந்திரசோழத் தமிழதரையர் உள்ளிட்டார் இரா-

12. சேந்திரசோழத் தமிழதரையர் உள்ளிட்டார் கங்கைகொண்டசோழ தமிழதரையர் உ-

13. ள்ளிட்டார் இராசநாராயணத் தமிழதரையர் உள்ளிட்டார் பக்கலிலும் விலையாகக் கொண்டு இந்நாயனாற்க்கு

14. திருநாமத்துக் காணியாகக் கொண்டு கல்லுவெட்டிக் குடுத்தேன் இக்கோயில் கைக்கோள முதலிகளில் வே-

15. ணாவுடையானேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 725/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14-நூற்.
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	73/1932-33
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊ.க.எண்	:	15
அரசன்	:	விருப்பண்ண உடையார்			

இடம் : திருவாலீஸ்வரர் கோயில் முன்மண்டப கிழக்குச் சுவர்.

குறிப்புரை : காங்கயப் பல்லவதரையன் என்பவர் தனது மகள் பொன்னியார் என்பவளின் நலன் பெற வேண்டி திருவாலக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்குத் தானம் வழங்கியுள்ளார். கல்வெட்டு முழுமை பெறாமல் உள்ளதால், தானத்தின் விவரம் அறிய இயலவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விருப்பண உடையற்குச்
2. செல்லா நின்ற ஆங்கிர[ஸ] வருஷ௱ காற்தி-
3. கை ஓ ௰௫ உடையார் திருவால கோ-
4. யில் உடைய னா[யனா]ர்கு காங்கயப் பல்ல-
5. வதரையன் என் மகள் பொன்நியார்-
6. கு நன்றாக

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1326
வட்டம்	:	செங்கல்பட்டு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1404
ஊர்	:	திருவானைக்கோயில்	இ.க.ஆ. அறிக்கை	:	356/1911
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	விஜயநகரர்	ஊ.க.எண்	:	16
அரசன்	:	பொக்கண உடையார்			

இடம் : திருமாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர் கோட்டத்துக் களத்தூர் ஊர் திருவாலக்கோயில் கைக்கோள முதலிகளில் திருச்சூலமுடையான் வேணாவுடையான் என்பவன் புதுப்பாக்கத்தில் இருந்த குறிப்பிட்ட நிலத்தினை விலைக்கு வாங்கிக் கோயிலுக்குத் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமந மஹாமண்டலேஸ்வரந ஹரிராய விபாடந பாஷைக்கு தப்புவராய கண்டன் ஸ்ரீவீரப்ரதாப

2. பொக்கண உடையா[ர்]கு செல்லா நின்ற தாரண ஸம்வத்ஸரத்து ரிஷ நாயற்று பூர்வ பக்ஷத்து த்வாதசியும் வியா-

3. ழக் கிழமையும் பெற்ற அநுழத்து நாள் ஜெயங்கொண்டசோழ மண்டல களத்தூர் கோட்டத்து களத்தூரில் உடைய திரு-

4. வாலக் கோயிலுடைய நாயினார் கோ[யி]ல் கைக்கோள முதலிகளில் திருசூலமுடையான் வேணாவுடையானேந் புதுப்பாக்கத்தில்

5. யிநாளது . . . நிலத்தேவதானமான குடிநீங்கா காணி ஞ வேலி தேவதாந அளவிநால் ரூ நகுளாருய ல் நான் இராஜேந்திரசோழ

6. தமிழதரையர் உள்ளிட்டாரும் இராஜவிபாடத் தமிழதரையர் பக்கலும் கொண்டுடைய தேவர் கண்டன் இட ாகயம்

7. மத ாஉயம் திருச்சிற்றம்பலமுடையான் கூஉ இட ஊாயகம் கூ ச இட ருாம் குண முக்கியன் கூஉ இடாஅயக

8. நம்பியன் ஊாசயம் இம் மேற்படி கீழ் கூற்றில் தெற்கே அடைய திறப்பு நீக்கி வடக்கு அ இடசயம் அழகிய சோழன் கூச இடரா

9. . . . நங்கை ஊாஉயம் கலியுக கன்னகுடி கூயகூ ஆக கூ உதஊாருயருக்கு விலை ஆக குடுத்த ரூ எயரும் இராசநாராயண

10. [*தமி]ழதரையர் பக்கல் கொண்டுடைய மாதேவன் இட ாஉயம் தேவர் கண்டன் இட ாகூயம் அமராயன் இட அாரும் சாமதேவ

11. . . . குண . . . தயன் இட ாஉயம் அடைவி நங்கை இட ாயம் அதஎா ருய விலைக்கு குடுத்த ப‾உயரும் கங்கைகொண்டசோழ

12. [*தமி]ழதரையர் பக்கல் கொண்டுடைய மாதேவன் இட கூயம் தேவர் கண்டன் இட அயரும் அமராயன் இட . . . .செம்மல தேவ

13. . . . திருநீலகண்டன் இடகூயம் அடைவி நங்கை இட கூயம் ஆக இட நாஎயருக்கு விலைக்கு ப‾யநம் ஆக ப‾நதஎயரும் பெருமா

14. ளெங்கிய தேவன் தமிழதரையர் தேவர் அறமளத்தனாயன் பக்கல் கொண்டுடைய மாதேவன் இட கூய தேவர் கண்ட

15. ரு அமராயன் இட எயரு செம்மல தேவி இட நயரு திருநீலகண்டன் இட கூய அடைவி நங்கை இட கூய ஆக இட நாஎயருக்கு விலை

16. . . . தப‾யஉ௯ ஆக இட நதஎாருயக்கு விலையாக கொண்ட ப‾ ாஉயரு௯யும் குடுத்து இப்ப௶ஊனழ பண்ணிநபடிக்கு ஸஹா–

17. ஹேஸ்வர ரஷெக்ஷ வ

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	553/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	விக்கிரம சோழன்			

இடம் : நீர்வண்ணர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : 'பூமாலை மிடைந்து' எனத் தொடங்கும் விக்கிரம சோழனின் மெய்க் கீர்த்தியின் ஒரு சிறு பகுதி மட்டும் இடம் பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* பூமாலைமிடைந்து பொன்மாலை நிதமுத்தப் பாமாலை மிடைந்த பருமணிந்திரள் புயத் திருநிலமடந்தையோடு ஜயமகள் இருப்ப

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 728/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1181
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	551/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	வீரராசேந்திரன் (மூன்றாம் குலோத்துங்கன்)			

இடம் : நீர்வண்ணர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : திருநீர்மலை சிங்கப்பெருமாள் இறைவனுக்கு பூவிருந்தவல்லி நகரத்தைச் சார்ந்த வாணியன் ஆயிரவண்ணன் ஆள்கொண்ட வில்லி எனும் திருக்கச்சிநம்பி தாசன் என்பவன் ஒரு சந்தி விளக்கு வைத்துள்ளான். இக்கோயிலைச் சார்ந்த நம்பிமாரில் நயிமிசை யஜ்ஞ நாராயண பட்டன் என்பவன் கண்டகோபாலன் மாடை ஒன்று இவனிடமிருந்து பெற்றுக்கொண்டுச் சந்தி விளக்கு ஒன்று எரிக்கச் சம்மதித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ர சோழ தேவற்க்கு யாண்டு ௩ வது ஸிம்ஹ நாயற்று பூர்-
2. வ்பக்ஷத்து த்ரமியும் திங்கட்கிழமையும் பெற்ற அவிட்டத்து நாள் திருநீர்மலை நாயநார் சிங்கபெருமாளுக்கு
3. பூவிருந்தமல்லி நகரத்து வாணியரில் ஆயிரவண்ணந் பெருமாள் வில்லியான திருக்கச்சி நம்பி தாஸன் வைத்த சந்-
4. தி விளக்கு ௧ இசந்தி விளக்கு ஒன்றுக்கு
5. இக்கோயில் நம்பிமாரில் நயிமிசை யஜ்ஞநாராயண ஹட்டன் ஆயப்பிள்ளையேன் கை-
6. க்கொண்ட கண்டகோபாலன் மாடை ௧ இம்மாடை ஒன்றுங் கொண்டு இத்திருவிளக்கு சந்திராதித்தவரை செலுத்தக் கடவேன்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 729/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	4
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1182
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	542/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	3
அரசன்	:	வீரராஜேந்திரன் (மூன்றாம் குலோத்துங்கன்)			

இடம் : நீர்வண்ணர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : பூவிருந்தமல்லி நகரத்தைச் சார்ந்த வாணியன் ஒருவன் திருநீர்மலை நாயனார் நீர்வண்ணனுக்கு சந்தி விளக்கு ஒன்று வைத்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ரசோழ தேவற்கு யாண்டு ச வது மஹர நாயற்று ௳௨வ௱ வக்ஷத்து ௩௰மியு-
2. ம் திங்கட்கிழமையும் பெற்ற அவிட்டத்து நாள் திருநீர்மலை நாயநார் நீர்வண்ணனுக்கு பூவிருந்தமல்லி நகரத்து வாணியரில் ஆயிரவ-
3. ண்ணந் பெருமாள் . . . திருவரங்க தாஸன் வைத்த சந்தி விளக்கு க இது சந்தி விளக்கு இக்கோயில் நம்பிமாரில் நயிமிசை . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 730/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1183
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	552/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	4
அரசன்	:	வீரராசேந்திரன் (மூன்றாம் குலோத்துங்கன்)			

இடம் : நரசிம்மர் சன்னதி தெற்குச் சுவர்.

குறிப்புரை : குன்றத்தூர் நாட்டு நந்தம்பாக்கம் ஊர்த் தலைவன் விழுப்பரையன் என்கிற சோழன் என்பான் ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர் கோட்டம் என்னும் குலோத்துங்கசோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டு திருநீர்மலை நாயனார் நீர்வண்ணன் சன்னதியில் சந்தி விளக்கு ஒன்று வைப்பதற்கு 'கண்டகோபாலன் மாடை' ஒன்றுத் தானமளித்துள்ளான். இப்பொன்னினைப் பெற்றுக்கொண்ட இக்கோயிலைச் சார்ந்த பாண்டவதூத பட்டர் ஸ்ரீதர பட்டன் என்பவன் விளக்கெரிக்க சம்மதித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராசேன்திரசோழ தேவற்க்கு யாண்டு ௬ துலா நாயற்று பூவ² பக்ஷத்து
2. இருபத்து மூன்றாந் தியதியுமான *த்ரியோதசியி*யும் புதன்கிழமையும் பெ[ற்ற] ரேவதி நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலி-
3. யூற் கோட்டமான குலோத்துங்கசோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டுத் திருநீர்மலை நாயநார் நீர்[வ]ண்ணனுக்கு இம்மண்டலத்து இக்-
4. கோட்டத்து குன்றத்தூர் நாட்டு நந்தண்பாக்கிழான் விழுப்பரையனான சோழன் இந்நாயநாற்கு வைத்த சந்திவிளக்கு ஒன்று இவ்விளக்கு க

5. இக்கோயில் நம்பிமாரில் நப்பிசை பாண்டவதூத பட்டர் ஸ்ரீதரபட்டனேன் கைக்கொண்ட கண்டகோபாலன் புதுமாடை க இம்மாடை

6. ஒன்றுங் கைக்கொண்டு இத்திருவிளக்கு சந்திராதித்தவரை செலுத்தக் கடவேன் பாண்டவ தூத பட்டன் ஸ்ரீதர பட்டன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 731/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1190
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	540/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	5
அரசன்	:	திரிபுவன வீரராஜேந்திரன் (மூன்றாம் குலோத்துங்கன்)			

இடம் : நீர்வண்ணர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : ஆமூர் கோட்டத்து புலிப்பாக்கம் எனும் சீலசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த வடுகனாதன் மாரிப்பிள்ளை என்கிற அருமாதவன் என்பவன் திருநீர்மலை எம்பெருமானுக்குச் சந்தி விளக்கு வைக்க ஒரு மாடைப் பொன் அளித்துள்ளான். இக்கோயிலைச் சார்ந்த நைமிசை திருநீர்மலை நம்பி என்கிற பிரான் கோவிந்த பட்டன் என்பான் ஒரு மாடையைப் பெற்றுக்கொண்டு விளக்கெரிப்பதாகச் சம்மதித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராசேந்திரசோழ தேவற்க்கு
2. யாண்டு ௰௨ வது மேஷ நாயற்று பூவ(ர்)வபக்ஷத்து த்ரயோதசியும் திங்கள் கி-
3. ழமையும் பெற்ற புணர்பூசத்தினாள் திருநீர்மலை எம்பெருமானுக்கு ஆமூற் கோ-
4. ட்டத்து புலிப்பாக்கமான சீலசிந்தாமணி சதுர்வேதிமங்கலத்து புலிப்பாக்கமு-
5. டையான் வடுகநாதந் மாரிப்பிள்ளையான அருமாதாவனேன் வைத்த சந்திவிளக்கு க இ-
6. ச்சந்தி விளக்கு ஒன்றுக்கும்மாக கோயில் நைமிசை திருநீர்மலை நம்பி ஆன பிரான் கேசவ-

7. பட்டனேன் கைக்கொண்ட மாடை க இம்மாடை ஒன்றுங் கொண்டு இத்திருவிளக்கு

8. சந்திராதித்தவரை செலுத்தக் கடவேன் கேசவ பட்டனேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 732/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி.1190
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	6
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			

இடம் : நீர்வண்ணர் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புழற் கோட்டத்து சுரத்தூர் நாட்டு திருநீர்மலை ஊரிலுள்ள திருநீர்மலை நாயனார், சிங்கப்பெருமாள், நாயனார் நீர்வண்ணன் ஆகியோருக்கு திருபுதியிதுக்கு அமுதுபடி, சாத்துபடி போன்றவற்றிற்காக ஊற்றுக்காட்டுக் கோட்டத்து தியாகவல்லி வளநாட்டு கண்ணனூர் ஊரில் உள்ள ஐந்தரை வேலி நிலத்தினை மூலதனமாகக் கொண்டு நடத்திடுவதற்கு திரையனூர் என்கிற குலோத்துங்கசோழச் சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் இந்நிலத்தினைத் திருவிடையாட்டமாக அளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் கோநேரிமேல்கொண்டான் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு ௰௨ வது திரையனூரான குலோத்துங்கசோழச் சது[ர்]வேதிமங்கலத்து மஹாஸபையோம் ஜயங்கொண்டசோழ மண்டலத்து

2. புலியூற் கோட்டத்து சுரத்தூர் நாட்டு திருநீர்மலை நாயனார் சிங்கப் பெருமாளுக்கும் நாயனார் நீர்வண்ணனுக்கும் திருப்புதியிதுக்கு அமுதுபடி சாத்துபடிக்கு திருவிடையாட்டமாக ஊற்றுக்காட்டுக் கோட்டத்து தியாகவ-

3. ல்லி வளநாட்டு கண்ணனூரான குலோத்துங்கசோழச் சதுர்வேதி மங்கலத்து ராஜநாராயண விளாகத்து விக்ரமசோழ வதிக்கு கிழக்கு மும்முடிசோழ வாய்க்காலுக்கு . . . . நான்காஞ் சதிர[ம்]முதல் தெற்கு ஆறாங் கண்ணாற்று

4. க்கு வடக்கு கீழ் . . . ஞ்சது . . . உண்ணிலம் ஒழிவின்றி ரூ ரு ௳ இன்னிலம் ஐந்தரைவேலியும் திருநீர்மலை நாயநார் சிங்கப் பெருமாளுக்கும் நீர்வண்ணனுக்கும் திருப்புதியிது அமுதுபடி சாத்துப்படிக்குத் திருவிடை-

5. யாட்டமாக . . . த்துக்கு உடலாக விட்டோம் இவ்வூர் மஹாஸபையோம் உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 733/2017**

மாவட்டம்	:	செங்கல்பட்டு	ஆட்சி ஆண்டு	:	28
வட்டம்	:	சைதாப்பேட்டை	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1206
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	7
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			
இடம்	:	-			

குறிப்புரை : ஜெயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து கோவூர் என்கிற உலகமாதேவிச் சதுர்வேதிமங்கலத்து ஊராருக்கு மன்னன் அளித்த ஆணை. இவ்வூரிலிருந்த 75 வேலி நிலத்தினைத் திருநீர்லை திருமலையில் உள்ள ஸ்ரீநரசிங்கத்து எம்பெருமானுக்கும், மலை அடிவாரத்தில் உள்ள கருவண்ணமேனி எம்பெருமானுக்கும் தேவையான வழிபாட்டுச் செலவினங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோனேரிமேன் கொண்டான் ஓலை த்ரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்க்கு [உ அ] வது ஜயங்கொண்டசோழ மண்டலத்து புலியூர்க் கோட்டத்து குலோத்துங்கசோழ வளநாட்டு திருநீர்மலை திருமலை மேல்பற்று

2. இருந்தருளின ஸ்ரீநரசிங்கத்தெம்பெருமானுக்கும் திருவடிவாரத்து நின்றருளின கருவண்ணமேனி எம்பெருமானுக்கும் பல நிமந்தங்களுக்கு இறுப்பதாக இம்மண்டலத்து இக்கோட்டத்து இன்னாட்டு கோவூரான உலக மாதேவிச் சது-

3. வேதிமங்கலத்து இரண்டாங் கட்டளை கீழ்பாற்கெல்லை கறைப்பாக்கத்து பெருந்திருக்கோயிலுடையார் கோயிலுக்கு மேற்கு நீர் விழுக்காடு தெற்கு நோக்கிப் போய் கலிச்சியாற்றி . . . ற்று கலிச்சியாறே தெற்கு நோக்கிப் போய் கலிங்கேரிநே விடனும் . . . . திரு-

4. [வி]ளக்காலிலேவட . . தென்பாற்கெல்லை . . . . கெல்லை பெரு[வ]ழிக்கு பெருங்காலே வடக்கு வடக்கு நோக்கிப் போய்த் கறைப் பாக்கத்தான் பிரிவு காலிலே வடபாற்கெல்லை கறைப்பாக்கத்தான்

5. [மறிங்]காலே கிழக்கு நோக்கிப்போய் பெருந்திருக்கோயில் மேலைநீர் விழுக்காட்டில் வற இன்னாற்பாக்கு எல்லைக்கு உள்ப்பட நீர்நிலமும் குற்றேத்தமும் ஆறு இடுகையும் குளத்துள் அடைகரையும் நத்தமும் நீர்

6. நிலையும் நீரோடுகாலும் உண்ணிலவொழிவின்றி இந்நிலம் எழுபத்து ஐவேலியும் ஸ்ரீநரசிங்கத்தெம்பெருமானுக்கும் கருவண்ணமேநி எம்பெருமானுக்கும் இருபக்கா . . . . . . வேண்டும் பெருமாள்களுக்குப் பல நிம

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 734/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	23
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி.1210
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	557/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	8
அரசன்	:	திரிபுவன வீரராசேந்திரன் (மூன்றாம் குலோத்துங்கன்)			

இடம் : நீர்வண்ணர் கோயில் ராமர் சன்னதி தென்புறச் சுவர்.

குறிப்புரை : அணைக்கரைச்சேரி என்கிற சோழகங்கதேவ நல்லூர் ஊரைச் சார்ந்த பஞ்சநதிவாண நீலகங்கரையன் நல்லநாயன் என்றழைக்கப்பட்ட சோழகங்கதேவன் என்பவன் பம்மல் நக்க நாயனார்க் கோயிலுக்கு 10 வேலி நிலத்தினைத் தேவதானமாக வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் [சக்கர]வத்திகள் ஸ்ரீவீரராஜேந்திரசோழ தேவற்கு யாண்டு உ௰௩வது கற்கடக நாயற்று ஊ௨வ பக்ஷத்து உ௱மியும் பெற்ற ரோகினி நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர் கோட்டத்து மேன்மாங்காட்டு நாட்டு வாயிஞ் . . நல்லூரான சோழநின்பச் சதுவே-திமங-

2. கலத்துப் பிடாகையா . . . ர் சபையார் பக்கல் ஆரியரில் திருவண்ணாமலையுடையானான ஐய்யந் நுக்கசற்ப பிரமாராயர் மகன் வளத்து வாழ்வித்தார் கொண்டு உடைய காணி அணைக்கரைச்சேரி ஆன சோழகங்கதேவ நல்லூரில் உடையார்ப் பம்மல் நக்க நாயநார்க்குத் தேவதானமாக நா-

3. யநார் சோழகங்க தே . . . . நிலம் பத்து வேலிக்கு கீழ்பார்க்கெல்லை சோறுடையான்சேரி எல்லைக்கும் நடுவில் தண்டு கரைக்கு மேற்க்கு கீழாய னேத்தமுள்படவும் தென்பாற்க் கெல்லை நடுவில் சிற்றோடைக்கு வடக்கும் மேல்பாற்க் கெல்லை கருமா[ணிக்க] தாங்கலுக்கு கிழக்கும் வடபாற்கெல்லை ஊர் நத்த-

4. த்துக்கு தெற்க்கும் ஆக . . . . கெல்லையுள் நடுவுள்பட்ட மிகுதிக் குறைவு உள்ளடங்க நிலம் பத்து வேலியும் தேவதானமாக இட்டோம் பஞ்சநதிவாண நீலகங்கரையன் நல்லநாயநான சோழகங்க தேவனேன் இவை சோழ கங்கதேவன் எழுத்து உ இத்தன்ம்மத்துக்கு விட்ட அகிதம் சொன்னார் உண்டாஇல் கெங்-

5. கைக்கரையில் குராற்[பசுவை கொன்]றான் பாவம் கொள்ளக் கடவன் ஸ்ரீமாஹேஶ்வர ரக்ஷை:-

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	34
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1212
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	556/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	9
அரசன்	:	திரிபுவன வீரராசேந்திரன் (மூன்றாம் குலோத்துங்கன்)			

இடம் : நீர்வண்ணர் கோயில் ராமர் சன்னதி தென்புற அதிட்டானம்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர் கோட்டம் என்கிற குலோத்துங்கசோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டுப் பிரிவிலுள்ள பம்மல் ஊர்க் கோயிலின் இறைவன் பம்ம நக்க நாயனாற்கு திருவைகாசி திருநாள் வழிபாட்டுச் செலவினங்களுக்காக, திருமடைவளாகத்தில் இருப்பவர்களிடம் வசூலிக்கப்படும் வரியினைப் பயன்படுத்திக் கொள்ள பஞ்சநதிவாணன் நல்லநாயன் என்கிற சோழகங்கதேவன் ஏற்பாடு செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ரசோழ தேவற்கு யாண்டு ௩௰௪ வது ரிஷப நாயற்று பூர்வபக்ஷத்து த்ரிதியையும் புதன் கிழமையும் பெற்ற பூ-

2. சத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூற் கோட்டமான குலோத்துங்கசோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டு [பம்மல்] உடையார் பம்மல் நக்க னாயனாற்கு பஞ்[சநதி]

3. வாணன் நல்லநாயனான சோழகங்கதேவநேன் உடையார் பம்மனக்க நாயனாற்கு திருவைகாசி திருநாளைக்கு நாம் இடும் . . . . . க்கும் உடலாக இன்னாயனார் திரும[டை]

4. விளாகத்து நியாயத்தார் பேரில்க் கடமை பொன்வரி நாட்டுவரி குடிமகண்மை காணிக்கை . . . பட்டி குற்றம் வே . . . . . வார் பெற கடமை பொன் வரி குடிமகண்மை

5. காணிக்கை பெற்றுக்காசு நாட்டுவரி உப்ப[ளம்] வரி பெற கடமை பொன்வரி நாட்டுவரி குடிமகண்மை காணிக்கை பெற்று காசு பெற . . . . . .

6. ட்டு வரி குடிமகண்மை க . . . . .

மாவட்டம் : காஞ்சிபுரம்
ஆட்சி ஆண்டு : -

வட்டம் : தாம்பரம்
வரலாற்று ஆண்டு : கி.பி. 1178-1218

ஊர் : திருநீர்மலை
இ.க.ஆ. அறிக்கை : 559/1912

மொழி : தமிழ்
முன் பதிப்பு : -

எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்

அரசு : சோழர்
ஊ.க.எண் : 10

அரசன் : வீரராஜேந்திரன் (மூன்றாம் குலோத்துங்கன்)

இடம் : நீர்வண்ணர் கோயில் கோபுர வாயிலின் இடதுபுறம்.

குறிப்புரை : ஜயங்கொண்டசோழ மண்டலத்து புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டு மடப்புறம் தண்ணியாலத்தூர் என்கிற ஊரில் உள்ள பள்ளிப்படை அகரத்து விஸ்வேஸ்வர நாயனார் இறைவனுக்குப் பூசை மற்றும் கோயில் திருப்பணிகளுக்காக பஞ்சநதிவாணன் நீலகங்கரையன் என்பவன் 12 வேலி எட்டு மா அளவு நிலம் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ர சோழ தேவற்க்கு . . . ஜயங்கொண்டசோழ மண்டலத்து புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டு மடப்புறம் தண்ணியாலத்தூரில் முதலியார் பள்ளிபடை அகரத்து எழுந்தரு-

2. ளுவித்த உடையார் *விஸ்வேஸ்வர* நாயனார்க்கு பஞ்சநதிவாணன் நீலகங்கரையனேன் பூ[சை]க்கும் திருப்பணிக்கும் உடலாக நாம் விட்ட இத்தண்ணியாலத்தூரில் திருக்கோயில்சூழ் தடி உள்வரிப்படி விட்ட நிலம் ஒரு வேலியும் இக்கோட்டத்து இந்நாட்டு அரும்பள்ளியில் தடி உள்வரிப்படி விட்ட நிலம் ஒரு வே-

3. லியும் இக்கோட்டத்து பேறூர் நாட்டு வன்னிசேர் பாக்கத்து அல்லிமூலை பற்று தடி உள்வரிபடியும் இக்கோட்டத்து சுரத்தூர் நாட்டு புழிச்சலூர் பிறிவான வெட்டுவான்பட்டில் நம்முடைய பூந்தோட்டங்களில் திருனந்தவனமாக விட்ட ஆற்றங்கரைக் கொல்லை ஒழுகின்படி குழி எண்ணூற்றினால் நிலம் எட்டுமாவும் ஆக நி-

4. லம் பன்னிரண்டே எட்டு மாவும் திருக்கோயில் சூழ் பெருங்காலுக்கு மேற்கு . . . . ஆக நிலம் ௰௨அ௰ ல் ஊக்கும் இன்னாள் முதல் அரிப்பாடி காவலில் ஊர்காவற் பேர்கொள்ளும் நாலில் ஒன்று நீக்கி அல்லாத நாம் கொள்ளும் கடமை ஆயம் காசு கடமை பட்டிகுற்றம் . . காத்திகைப் பச்சை

5. காணிக்கை வெட்டிக்காசு வெட்டி அரிமுக்கை உட்பட அனைத்தாயங்களும் இன்னாயனார் திருப்பணிக்கும் உடலாக விட்டேன் பஞ்சநதிவாண நீலகங்கரையனேன் இது *ஊஹேபஹ ரசைக்ஷ*

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 737/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1222
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	533/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	11
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : நீர்வண்ணர் கோயில் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : புலியூர்க் கோட்டத்து மாங்காடு நாட்டு மலையம்பாக்கம் ஊரைச் சார்ந்த கையரையன் திருவகத்தீசுரமுடையான் என்பவனிடமிருந்து ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துச் சுரத்தூர் நாட்டு திருநீர்மலை எம்பெருமாள் கோயிலில் காணியுடைய நம்பிமாரில் பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்த அருளாள பட்டன் திருவேட்டை அழகியான் என்பவன் 1½ பழங்காசுகள் பெற்றுக்கொண்டு ஒரு திருவிளக்கெரிக்க சம்மதித்துள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராசராச தேவற்க்கு யாண்டு ௬ வது துலா நாயற்று ய௬ ந்தி-

2. யதியும் அபரபக்ஷத்து துவிதிகையுங் கார்த்திகை நாயற்றுக் கிழமையுமான நாள் ஜயங்கொண்டசோழ மண்டல-

3. த்து புலியூற் கோட்டத்து சுரத்தூர் நாட்டு திருநீர்மலை எம்பெருமாளுக்கு இக்கோட்டத்து மாங்காட்டு நாட்டு ம-

4. லையம்பாக்கத்து கையரையன்(யகு) திருவகத்தீசுரமுடையாந் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு இக்-

5. கோயிலில் காணியுடைய நம்பிமாரில் *ஹாரத்வாஜ* அருளாள பட்டந் திருவேட்டை அழகியாநேந் கைக்கொ-

6. ண்ட பழங்காசு க ௵ பழங்காசு ஒன்றரையுங் கொண்டு இத்திருவிளக்கு சந்திராதித்தவரை செய்துக் கடவோமாக

7. ச[ம்*]மதித்து கைக்கொண்டேன் அருளாள பட்டந் திருவேட்டை அழகியாநேந்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 738/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	16
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1231
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	544/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்த கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	12
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : திருநீர்மலை நீர்வண்ணர்க் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : பெருங்கனல் வட்டம்பாக்கம் ஊர்த் தலைவன் அருளாளப் பெருமாள் சீயன் என்பானிடமிருந்து திருநீர்மலை எம்பெருமாளுக்கு ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்காக இக்கோயிலைச் சேர்ந்த பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்த மலைக்கினிய நின்றான் என்பவன் ஒன்றே முக்கால் மாடை பொன் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்க சம்மதித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராசராச தேவற்கு யாண்டு ௰௬ வது ௰௩ நாயற்று பூவ[ர்]வபக்ஷத்து பஞ்சமி–

2. யும் நாயற்றுக் கிழமையும் பெற்ற அவிட்டத்து நாள் திருநீர்மலை எம்பெருமானுக்குப் பெருங்கனல் வட்-

3. டம்பாக்கிழான் அருளாளப் பெருமாள் சீயன் வைத்த சந்திவிளக்கு ௧ சந்திவிளக்கொன்றுக்கு இக்கோயிற்

4. காணியுடைய நம்பிமாரில் *பாரத்வாஜ* ஆஸ்ரூ[ர] மலைக்கினிய நின்றான் பட்டன் கைக்கொண்ட பழங் -

5. காசு ௧௷ இப்பழங்காசு ஒன்றே முக்காலுங் கொண்டு இத்திருவிளக்கு சந்திராதித்தவரை செலுத்தக்கடவே-

6. ன் மலைக்கினிய நின்றான் பட்டநேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 739/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	16
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1232
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	534/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	13
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : நீர்வண்ணர் கோயில் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் கண்டகோபாலன் என்பவன் திருநீர்மலை எம்பெருமானுக்கு 'திருவாழிபரப்பினான் சந்தி'யின்போது அமுதுபடி, சாத்துபடி, திருநந்தாவிளக்கு ஆகியவற்றிற்காகப் பத்து வேலி நிலம் தானமாக அளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ
2. தேவற்கு யாண்டு ௰௬ வது நாள் ௬௰ முதல் மதுராந்த-
3. கப் பொத்தப்பிச்சோழன் கண்டகோபாலந் திருநீர்ம-
4. லை எம்பெருமானுக்கு திருவிடையாட்டமாக திருவாழிபரப்பிநா-
5. ந் சந்தி அமுதுபடி சாத்துபடியுந் திருநந்தா விளக்கு ம-
6. லைஎதிர்க் குன்றத்தூர் பெருமதகுக் கால்ப்போக்கில் கழ-
7. னி ௫ ௬ மதுறமுடிபாத்து எல்லை கோக்குளவாய் கண்ணாறு
8. ௫ ௬௰ ஆக நிலம் பத்து வேலியும் திருவிடையாட்டமாக
9. அனைத்தாயங்களும் உட்பட விட்டது இந்நிலங் கொண்டு
10. இச்சந்தி சந்திராதித்தவரை செலுத்துவதே

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 740/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	19
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1235
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	562/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	14
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : நீர்வண்ணர் கோயில் - நரசிம்மர் சன்னதி தெற்குச் சுவர்.

குறிப்புரை : இக்கோயில் சிங்கபெருமாள் சன்னதியில் ஒரு சந்தி விளக்கு எரிக்க கோவிந்த பட்டன் என்பவன் 'கண்டகோபாலன் மாடை' ஒன்று தானமாக வழங்கியுள்ளான். இக்கோயிலில் காணியுடைய கிருஷ்ணபட்ட சோமயாசி என்பவனின் மகன்கள் பாரத்வாஜி பட்டன், சிங்கப்பெருமாள் ஆகியோர் ஒரு மாடைப் பொன் பெற்றுக்கொண்டு விளக்கெரிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. திரிபுவநச் சக்ரவத்திகள் *ஸ்ரீ ராஜராஜ* ஷேவற்[கு*] யாண்டு ௰௯ வது மேஷ நா-
2. யற்று *பூர்வபக்ஷ*த்து *த்ரயோதஶி*யும் திங்கள் கிழமையும் திருவோணத்து நாள் ஜ-
3. யங்கொண்டசோழ மண்டலத்துப் புழற்கோட்டத்து நின்றவூர் *ஹாரத்வாஜி* உறு(ப்)பி-
4. ட்டூரனாய புலியூர் கோட்டத்து . . ணியபுதூ[ர்*] எழுதி உபைய *ஷோவிந்* ஹட்டநேன்
5. இ[க்]கோயில் சிங்கபெருமாளுக்கு ஒரு *ஸந்தி* விளக்கொன்றுக்குக் குடுத்த கண்டகோபாலன் மாடை க இம்மாடை ஒன்றுக்கும்

6. இக்கோயிலில்க் காணி உடைய நைய்மிசை *ஸ்ரீக்ருஷ்ண* ஹட்ட ஸோமயாசி-

7. யார் பிள்ளைகளில் *வாரஜ்ஞாஜி* ஹட்டனும் சிங்கப் பெருமாளும்

8. கைக்கொண்டு *சந்த்ராதித்ய*வரை இத்திருவிளக்கொன்றும் செலுத்துவோ மானோம்.

த.நா.அ. தொல்லியல் துறை | **தொடர் எண் : 741/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	23
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1239
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	561/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	15
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : நரசிம்மர் சன்னதி தெற்குச் சுவர்.

குறிப்புரை : பெருங்கனல் வட்டம்பாக்கம் ஊரைச் சார்ந்த பட்டாலகன் என்பவன் திருநீர்மலை நாயனார் சிங்கபெருமாளுக்கு ஒரு சந்தி விளக்கு வைத்துள்ளான்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஶ்ரீ* திரிபுவன(த்[1]) சக்கரவத்திகள் ஸ்ரீஇராசராச தேவற்கு உ௰௩ வது மிதுன நாயற்று அபரபக்ஷத்து *தஶ*மியும் நாயற்று-
2. க்கிழமையும் பெற்ற அ*ஶ்வ*தி நாள் திருநீர்மலை நாயநார் சிங்கப்பெருமாளுக்குப் பெருங்[கன]ல் வட்டம்பாக்கம் பட்டாலகன்
3. . . . . நேன் வைத்து சந்திவிளக்குக்கு கொண்ட . . . . கொண்டு இக்கோயில் கணக்கன் உடையார் திருமிழிசை வாழ்வ[ா]

---

1. 'ச்' என்று இருக்கவேண்டும்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 742/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1260
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	தெலுங்குச் சோழர்	ஊ.க.எண்	:	16
அரசன்	:	விசையகண்டகோபாலன்			

இடம் : -

குறிப்புரை : பெருங்கனல் ஊரைச் சார்ந்த வட்டப்பாக்கம் ஊர்த் தலைவனின் மகன் பட்டாலக தேவன் என்பவன் திருநீர்மலை சிங்கபெருமாளுக்கு ஒரு சந்தி விளக்கு எரிக்க ஒரு மாடைப் பொன் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விசயகண்ட கோபால தேவற்க்கு யாண்டு ய-
2. வது தை மாதத்தில் மகர நாயற்று அபரபக்ஷத்து வஷூமி-
3. யும் நாயற்றுக்கிழமையும் அத்தத்து நாள் [நாயனார்]
4. சிங்க பெருமாளுக்கு பெருங்கனல் வட்டம்பாக்கிழா[ன்] மகந்
5. பட்டால தேவந் வைத்த சந்தி விளக்கு ஒன்றும் இக்கோ-
6. யிலில் [நம்பிகளில்] [நைமிசை] அருளாள பட்டன் கைக்கொண-
7. ட மாடை க இம்மாடை ஒன்றும் கைக்கொண்டு

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	37
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1304
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	555/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	17
அரசன்	:	மாறவர்மன் குலசேகரபாண்டியன்			

இடம் : நீர்வண்ணர் கோயில் ராமர் சன்னதி மேற்குச் சுவர்.

குறிப்புரை : பஞ்சநதிவாணன் திருவேகம்பன் என்கிற நீலகங்கன் என்பவன், தான் பிறந்த பங்குனி மாதம் ஹஸ்தம் நாளன்று ஜயங்கொண்டசோழ மண்டலத்து புலியூர் கோட்டம் எனும் குலோத்துங்க சோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டு பம்மல் என்னும் ஊர் கோயில் இறைவன் பம்மநக்க நாயனாருக்கு வழிபாடுகள் நடத்திடுவதற்கு புலியூர்க் கோட்டத்து கால்பாய் நாட்டு வடக்குப்பட்டு என்னும் ஊரிற்கு தனது பெயரால் குமாரகோபால நல்லூர் என்ற பெயரிட்டுத் தானமாக வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்பர் த்ரிபுவனச் சக்கரவத்திகள் கு[ல*]சேகர தேவற்[கு*] யாண்டு ௩௰௭ வது கற்கடக நாயற்று பூர்வபக்ஷத்து பஞ்சமியும் புதன்கிழமையும் பெற்ற உத்திரத்தின் நாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர் கோட்டமான குலோத்துங்கசோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டு பம்மலில்

2. உடையார் பம்மநக்க நாயனார்(ற்)கு பஞ்சநதிவாணன் திருவேகம்பனான நீலகங்கனேன் உடையார் பம்மநக்க நாயனார்க்கு திருப்பங்குனி மாதம் நம் ஜன்ம நக்ஷத்ரமான அத்தமாக எழுந்தருளுகிற திருநாள்படிக்கு இம்மண்டலத்து இக்கோட்டத்து கால்பாய் நாட்டு பெரும்பாக்கமான இரா-

3. சஇராசநல்லூர் வெள்ளைக்காப்பகளும் நெடுங்கண்ணகளும் பக்கல் குத்தன் பாக்கத்தில் அகம்படியாரில் திருக்காளத்தி உடையானான நரசிங்க பன்மன்

கொண்டுடைய வடக்குபட்டுக்கு நம்பேராலே குமாரகோபால நல்லூர் என்று பேராவதாகவும் இவ்வூர்க்கு எல்லை ஆவது

4. கீழ்பார்க்கெல்லை வெருநூர் மேல்பாற்கெல்லைக்கு மேற்கு வடக்கு நோக்கிப் போகிற எங்காலுக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை துற்கை பட்டியென்றும் வடுகனேன் நும்பேருடைய செய்களில் வடவரம்பில் கிழக்கு

5. பேருடைய இக்காலமும் மிழலைச் செறுவையும் எழுமூர்க் குண்டலையும் நடுவுற் பிளந்து கிழக்கு நோக்கிப் போய் எங்காலுற்ற செவ்வைக்கு வடக்கும் இன்னும் இவ்ஏரிக்கரை ஊடறுத்து இச்செவ்வை நோக்கிப் போகிற வடுகமென்-

6. கெல்லைக்குக் கிழக்கும் இன்னும் மோடைபாக்கத்துக் கீழ்பாற்கெல்லைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை இம்மோடைபாக்கத்தில் எல்லை கிழக்குத் திரிந்த தெந்பாற்க்கு தெற்கும் இன்னும் பள்ளிகள் காரனையில் தெந்பாற்கெல்லைக்கு தெற்கும்

7. ஆக இந்னாற்பாற் கெல்லைக்கு மிகுதிக்குறை உள்ளடங்கின ரூ௳ உ௰௫ ஹு கொல்லை நிலமும் நத்தமு[ம் *] மனையும் படப்பும் மன்றுங் கன்று நிலை பாழும் மரமும் கிணறும் நருநீரோடுகாலும் பொதுவும் போதாரியும் மற்றும் எப்பேற்பட்ட சகலப்பிராப்த்திகளும் வுட்ப-

8. ட இத்திருக்காளத்தி உடையானான நரசிங்கபன்மன் கொண்ட இவூரில் னாற்பாற்கெல்லைக்கு உட்பட்ட நிலத்தில்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 744/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	16
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13-நூற்.
ஊர்	:	திருநீர்மலை	இ.க.ஆ. அறிக்கை	:	554/1912
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	18
அரசன்	:	திரிபுவன சுந்தரபாண்டியன்			

இடம் : நீர்வண்ணார் கோயில் ராமர் சன்னதி வடபுறச் சுவர்.

குறிப்புரை : பம்மல் ஊரில் இருக்கும் வியாபாரி குன்றமுடையான் மெய்ஞ்ஞான வித்தகன் திருவெண்காடுடையான் என்பவன் பம்மனக்கர் நாயனார் வழிபாட்டிற்காகவும், திருப்பங்குனி, திருவைகாசி ஆகிய திருநாள்களில் வழிபாட்டுச் செலவினங்களுக்காகவும் கோயில் தானத்தாரிடம் தானம் வழங்கியுள்ளான். கல்வெட்டு முற்றுப்பெறாமல் உள்ளதால் தானத்தின் முழுவிவரம் அறிய இயலவில்லை.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்தி]ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ௰௬ வது உடையா[ர்*] பம்ம னக்கர் நாயனார் கோயில்த் தானத்தாற்கு பம்மலி[ல்*] இருக்கும் வியாபாரிகளில்க் குன்றமுடையான் மெஞ்ஞான வித்தகன் திருவெண்காடுடையானே திருவெ . .

2. திருப்பவனிக்கு திருப்பங்கூனித் திருநாளுக்கும் திருவைகாசித் திருநாளுக்கு மேலும் கணுந் திருநாள்களுக்கும் திருப்பவனிக் குறைவறுப்புக்குப் பிள்ளையார் திருமுன்பாகத் தானத்தாருடனுங் கூட நிச்சயித்து நானுபைய கொண்டபடி-

3. க்கு அரிசி தூணிப்பதக்கும் கறிஅமுதுக்கு வாழைக்காய் ஒன்பதும் வழுதலைக்காய் ஐம்பதும் தேங்காய் ஒன்றும் வாழைப்பழம் பத்தும் கருப்புக்கட்டி வட்டு இருபதும் மிளகு அமுது உழக்கும் உப்புஅமுது நாழியும் தையி[ர்]

4. னாழியும் நெய்(ய்) அமுது உரியும் விறகு கட்டு ஒன்றும் திருச்செங்கழுநீர்த் திருமாலை ஓரணையும் திருநெற்றி மாலை ஒன்றும் திருவாக்கழல் ஒன்றும் திருச்சடாபாரத்துக்கு வெள்ளைத் தொடையும் நாச்சியார்க்கு வெள்ளைத் திருமாலை ஓரணையும் தி . . . .

5. ய் ஒன்றும் திருவபிஷேகத்துக்கு தொடைப்பூவும் கற்பூர வெள்ளை சாத்துப்படிக்குத் திருமேற்பூச்சு பதின்கழஞ்சும் கற்பூரம் அரைக்கழஞ்சும் அடைக்காயமுது பாக்கு இருபது வெற்றிலை நாற்பது சீபாதந் தாங்கு வார்க்குப் பணம் இரண்டும் திருவி . . . .

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	35
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1213
ஊர்	:	பம்மல்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	திரிபுவன ஸ்ரீவீரராசேந்திர சோழ தேவர் (மூன்றாம் குலோத்துங்கன்)			

இடம் : புஷ்பகிரிநாதர் கோயில் கருவறை மேற்கு குமுதம்.

குறிப்புரை : வீரராஜேந்திர சோழன் என்ற பட்டப் பெயர் கொண்ட மூன்றாம் குலோத்துங்கசோழ தேவனுடைய 35ஆவது ஆட்சியாண்டில் ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புலியூர்க்கோட்டத்து சுரத்தூர் நாட்டுத் தாம்புரமான குணசீல நல்லூரில் இருந்த நிலங்களில் சிலவற்றினை திருவிடையாட்டமாக பம்மல் அழகப்பெருமாள் கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணையில் பஞ்சநதிவாணன் நல்லானாயன் நீலகங்கரையன் ஒப்பமிட்டுள்ளான். திருநீர்மலை எம்பெருமான் திருவிடையாட்டம், உள்ளூர் தேவதானம், திருவிடையாட்டம், துர்க்கைபட்டி, பிடாரிபட்டி காவல் வரிகள் ஆகியவற்றினை நீக்கி எஞ்சிய நிலங்களின் மீதான வரிகள் திருவிடையாட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவ[ந]ச் சக்ரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ரசோழ தேவற்கு யாண்டு ஙயிரு வது கற்கடக நா[ய]ற்று பூர்வபக்ஷத்து பஞ்சமியும் நாயற்றுக் கிழமையும் பெற்ற உத்திரட்டாதி னாள் ஜயங்கொண்டச்சோழ ம-
2. ண்டலத்து புலியூர் கோட்டத்து சுரத்தூர் நாட்டுத் தாம்புரமான குணசீல நல்லூர் நாற்பாற்கெல்லைக்குட்பட்ட விளைநிலத்திலும் கொல்லை நிலத்தினும் திருநீர்மலை எம்பெரு-
3. மான் திருவிடையாட்டம் குவியலுடன் . . பிறிந்து கூடி நிலமும் உள்ளூர் தேவதானம் திருவிடையாட்டம் துக்கைப்பட்டி பிடாரிபட்டி நீக்கி அல்லாத கழநி குளவாய்க் கொல்லை

4. நத்தம் உட்பட இவ்வாண்டை ஆடிமாதம் முதல் பம்மல் அழகப்பெருமாளுக்கு திருவிடையாட்டமாக இட்டோம் இன்நிலத்துக்கு அரிப்பாடிகாவலில் ஊர்-

5. காவற்பேர்கொள்ளும் ஒன்றாக நீக்கி அல்லாத நாம் கொள்ளும் கடமையும் ஆயம் காசு கடமையும் பட்டி குற்றமும் காற்த்திகைப்பச்சைக் காசும்

6. வெட்டிக் காசும் வெட்டி அரிமுக்கையும் தரி(சு) நிலத்தில் கடமையும் ஆயமும் காசு வற்க்கமும் உள்ளூர் தேவதானம் திருவிடையாட்டம் துற்கைப்பட்டி பிடா-

7. ரி பட்டியில் ஆயமும் க[ா]சு கடமை வற்க்கமும் உட்பட இன்னாயனார் அழகப்பெருமானுக்கு இன்னாள் முதல் வரி நீங்கல் திருவிடையாட்டமாக இட்டு பஞ்சனதி-

8. வாணன் நல்லனாயன் நீலகங்கரையனேன் இவை நீலகங்கரையன் எழுத்து. இத்தன்மத்துக்கு இலங்ஙநம் பண்ணிநார் உண்டாகில் கெங்கைக் கரையில் குரால்பசுக் கொன்றான் பா-

9. வங்கொள்வார் உ இது ஸ்ரீவைஷ்ணவ ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 746/2017**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	தாம்பரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1237
ஊர்	:	பம்மல்	இ.க.ஆ. அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : புஷ்பகிரிநாதர் கோயில் கருவறை தெற்கு குமுதப்பட்டை.

குறிப்புரை : குத்தந்பாக்கத்து மன்றாடிகளில் பட்டன் ஆன நீலகங்கரையக்கோன் என்பவன் பம்மல் எம்பெருமான் அழகப்பெருமாளுக்குச் சந்தி விளக்கு ஒன்று எரிக்க இக்கோயிலில் பூசை செய்யும் நைமீசையத்தில் புலமை பெற்ற பாண்டவ தூத பட்டன் மகன் நீர்வண்ணபெருமாள் என்பவனிடம் பாற்பசு ஒன்றும் நாகு ஒன்றும் (பெண் கன்று) அளித்து விளக்கு எரிக்க வழிவகைச் செய்துள்ளான்.

கல்வெட்டு :

